Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 30.00

மே 12-18, 2011


PUBLIC LIBRARY JAFFNA.

வாரமலர்


# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 910

## ஒசாமாவின் கதைமுடித்த ஒபாமா



நாற்பது நிமிட அதிரடி





PUBLIC LIBRARY JAFFNA.

## கிழக்கில் விசித்திரமான காணி விவகாரம்



## ஆட்ட நிர்ணயச்சதி! காத்திருக்கிறது அதிர்ச்சி!!

## ஸ்ரீஆஞ்சநேயாய நமஹ

ஸ்ரீஇராமபிரானுக்கு உற்ற தூதுவனாகவும் உறுதுணையான தோழனாகவும் விளங்கிய அனுமன் என்று அழைக்கப்படும் ஆஞ்சநேயரின் பாரக்கிரம செயல்களையும், இராமபிரான் மீது கொண்ட பக்தியையும் நாம் இராமாயணம் மூலமாக அறியக் கூடியதாக உள்ளது.

இலங்கையில் இராவண வதத்தை முடித்துவிட்டு ஸ்ரீஇராமபிரான் தன் மனைவி சீதாப்பிராட்டியுடன் அயோத்திக்குத் திரும்பி வந்த பொழுது அங்கு வந்த நாரதர், இராவண வதம் முடிந்துவிட்டாலும், நீண்ட நாட்களாக நீரின் அடியினிலே மறைந்திருக்கும் ரக்கபிந்து மற்றும் ரக்தாட்சன் எனும் இரண்டு அரக்கர்களை அழித்தால்தான், சூழ்ந்திருக்கும் தீயசக்திகள் முற்றிலுமாக ஒழியும் என்று கூறியபோது, அங்கு இருந்த ஆஞ்சநேயர் உடனே அவர்கள் இருவரையும் தான் அழித்துவிட்டு வருவதாகப் புறப்பட்டான். அப்போது தேவர்கள் ஆஞ்சநேயரை ஆசீர்வாதத்தோடு, திருமால் தனது சங்கு, சக்கரையும் சிவபெருமான் தனது நெற்றிக்கண் மற்றும் மழு ஆகியவற்றையும், பிரமா தன் கபாலத்தையும், இந்திரன் வஜ்ரா யுதத்தையும், கருடாழ்வார் தம் சிறுகளையும் கொடுத்து அனுப்பியதாக புராண வரலாறுகள் கூறுகின்றன.

இப்படியாக எல்லோரது அன்புக்கும் பாத்திரமான ஆஞ்சநேயர் ஆபத்துக் காலங்களில் கைகொடுக்கும் தெய்வமாகப் போற்றப்படுகிறார். அவரை உண்மையான பக்தியோடு வழிபடும் போது அவர்களுக்கு அனைத்து நலன்களையும் அவர் அளிப்பதாக ஆன்றோர் நூல்கள் குறிப்பிடப்படுகின்றன.

**அனந்தநாராயணன், கைதடி.**

## தர்மத்தின் பலன்

பகட்டான வாழ்வும், செயற்பாடுகளும் பரலோகத்துக்கான திறவுகோலை உண்டாக்கி விடமாட்டாது. இது கர்த்தரின் பார்வையில் அருவருப்பானதும் கூட மட்டுமல்ல. கடைசி நாட்களில் அவரது கோப ஆய்க்கினைக்கும், நியாயத் தீர்ப்புக்கும் ஆளாக வேண்டியதுமாகிறது.

எமது தர்மத்துக்குரிய பலனை ஆண்டவர் அறிந்திருப்பதனால், உனக்கு அதற்கேற்ற அருளும், அன்பும் அவரிடத்தில் இருந்து கிடைத்தே தீரும். அதில் எந்தவித சந்தேகமுமில்லை.

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து ஒரு தேவாலயத்தில் உட்கார்ந்திருக்கும் போது, ஏழைப் பெண்ணொருத்தி அங்குள்ள உண்டியலில் தன்னால் இயன்ற பணத்தைக் காணிக்கையாகச் செலுத்தியதைக் கண்டு தனது சீடர்களுக்கு சொன்ன வார்த்தைகளும் இவைகள்தான்.

“மனிசர் காண வேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாருங்கள்; செய்தால் பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை.(மத்தேயு6:1)”

எனவே பிதாவினிடத்தில் இருந்து நமக்கு நமக்குரிய தர்மத்தின் பலன் கிடைக்க வேண்டுமானால், மனிசர் முன் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாக இருந்து, அதை அந்தரங்கமாகச் செய்வதே நன்மை பயக்குவதாகும்.

**சாமுவேல்-புதுக்குடியிருப்பு.**

ஆன்மீகம்

## மௌனமும் மரியாதையும்!

சமூகத்தில் உங்களுக்கு மரியாதை வேண்டுமென்றால் மௌனத்தைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். தேவையில்லாமல் பேசாதீர்கள். உப்புப் போட்டாற் போல் கொஞ்சமாகப் பேசுங்கள். அளவுக்கதிகமாக உப்புப் போட்டால் அதன் பின் அந்தச் சாப்பாட்டை யாரும் உட்கொள்ள மாட்டார்கள். வழவழவென்று பேசுவது சமூகத்தில் உங்களுக்கிருக்கும் மரியாதையையும் கண்ணியத்தையும் குறைத்துவிடும். போதாதற்கு இதனால் விளையும் விபரீதங்களும் அளவிடமுடியாதவை. சொல்லிலே கொல்பவர்களும், சொல்லிலே வெல்பவர்களும் இருக்கிறார்கள். நீங்கள் வெளியிடும் சொற்கள் கொல்லுமா? வெல்லுமா? என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? எனவே நாவின் விபரீதங்களைத் தடுப்பதற்குரிய ஒரேவழி மௌனம். எனவேதான் பெருமானார், ‘‘மௌனம் சாதித்தவன் வெற்றியடைந்துவிட்டான்!’’ என்று குறிப்பிட்டார்கள். மௌனம் சாதிப்பது அறிவு நிறைந்த செயல், என்றாலும் பெரும்பாலோர் இந்த வழியைப் பின்பற்றுவதில்லை. ‘‘நாவை அடக்கியாளுங்கள், அதற்கு அதிகாரம் கொடுக்காதீர்கள். உங்கள் அதிகாரத்துக்குக் கீழே அது இயங்கட்டும். இதில்தான் வெற்றியுண்டு’’ எனப் பெருமானார் பிறிதோரிடத்தில் கூறியுள்ளார்கள்.

**முஹம்மது ஹஸனீ, புதிய வீதி, கல்முனை -07**

# வாசகர் சாலை



## எதிர்பார்ப்பு

வாசகர்களில் ஒருவனாக உன்னைச் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். வழமைபோலவே உன்னுடைய ஆக்கங்கள் சூப்பரோ சூப்பர். உன்னில் எனக்குப் பிடித்தவை (தேன்கிண்ணம், கவிதைப்போட்டி, சிந்தியா பதில்கள் என்பனவாகும். நான் பல்வேறு ஆக்கங்களை அனுப்பியுள்ளேன். அதில் சில பிரசுரமாகியிருக்கின்றன. வாசகர்களாகிய எங்களை உன்னில் இன்னும் பல்வேறு மாற்றங்களோடு இணைத்து எம்மை மகிழ்விக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

**எ.எம்.சமீர், கம்பளை.**

## விரும்பிப் பழிப்பவை

அன்புடன் தினமுரசு வாரமலருக்கு! தவறாது ஒவ்வொரு வியாழனும் உன்னைக் கண்ட பின்புதான் என் மனம் பூரிப்படையும். அர்த்தமுள்ள இந்துமதம், பூலான்தேவி, ஆகிய கட்டுரைத் தொடரை விரும்பிப்படிப்பேன். மேலும் சுவையுள்ள கட்டுரைத் தொடர்களை எதிர்பார்க்கின்றேன். தினமுரசு வாரமலரே நீ வாழ்க!

**கோ.கல்கி,**
**கிளி.விவேகானந்தநகர்.**

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772, கொழும்பு,
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-0212221811
தொலை நகல் (Fax): 0212221811
ஈ-மெயில்: (E-mail):- thinamurasu@live.com

## கவிதைப் போட்டி இல.910



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.05.2011

கவிதைப் போட்டி இல. 910
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### அணைத்திரு

எட்டாத கொப்பெல்லாம்
எட்டிவருவேன்
முட்டாத
மலையெல்லாம்
தொட்டு வருவேன்
நீ மட்டும்
என்னை அணைத்திரு.

மா.சுதன்,
பருத்தித்துறை.

### என் பிள்ளை...

மழை வரப் போகிறது
அன்னையின் உடலோடு
ஒட்டிக்கொள்
நான் நனைந்தாலும்
உன்னை விடேன்
நீ நனைய.

கோதைவாணன்,
திருகோணமலை.

### ஓடுவோம் வா!

அங்கே பாரம்மா!
விஞ்ஞானம் கண்ட மனிதன்
விஞ்ஞானத்தாலே அழிவதைப் பார்
பொடிப் பொடியாகிறது கட்டடம்
பீரங்கிக் குண்டுகளால்
நொருங்கும் மனிதரைப் பார்
இறுக்கிப் பிடித்துக்கொள்
எங்கேனும்...
மனிதன் இல்லாத
இடத்திற்குப் போவோம்.

எஸ்.பைரவி,
புத்தளம்.

### எங்கே போவோம்!

காட்டையும் கொழுத்திவிட்டார்களே!
கொடியவர்கள்
வீடுகள் இல்லாத நாம்
எங்கே போவோம்
குரங்குப் பிடி
உனக்குத் தெரியும் தானே
இறுக்கிப் பிடி.

யோ.பாலகணன்,
பருத்தித்துறை.

### பாசம்

ஏ! ஆறறிவு மனிதா
இந்த ஐயறிவு மிருகத்திடம்
நீ பாசத்தைக் கற்றுக்கொண்டால்
உன் குழந்தைகளை நீ
அநாதை ஆக்கமாட்டாய்.

ஏ.ஜே.பாத்திமா பஸ்னா,
கொட்டிகாவத்தை.


### பாராதே மகளே!

இத்தனை அவலங்களா?
இத்தனை ஓலங்களா?
இறந்த பிணத்திலுமா
உடைமைகள் உரிக்கப்படுகின்றது
பாராதே மகளே;
மனிதர்களின் அராஜகத்தை.
மறைந்துகொள் என் மடிக்குள்
அணைந்துகொள் என் பிடிக்குள்.

R.S.ஆனந்தன், தும்பளை

## கவிதைப் போட்டி இல.908

### பாராட்டுக்குரியது



### ஈனச் செயல்கள்

பெற்றதும் குப்பைத்
தொட்டியிலெறிவதும்
பெண் பிறந்தால்
அவலமென அழுவதும்
சிறுவர் துஷ்பிரயோகம்
செய்வதும் - மனிதா
எம் குரங்கினத்தில் இல்லை
இவை உன் குலத்துக்கே
உரிய ஈனச் செயல்கள்.

அ.சந்தியாகோ
கண்டி.




# உங்கள் பக்கம்



கடந்த 3 வருட காலமாக நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற நகரங்களில் யாழ்ப்பாணமும் ஒன்றாகும். மிகவும் உயர்ந்த கல்வியறிவு வீதம், பண்பாட்டு விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டது.

## பொம்மைவெளி கவனிக்கப்பட வேண்டும்

இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களில் ஒன்று என்றெல்லாம் போற்றப்படுகின்ற யாழ் நகரம் அபிவிருத்தியில் ஏனைய நகரங்களை எட்டிப் பிடிப்பதற்கு எவ்வளவோ முன்னேற வேண்டியுள்ளது, இந்நிலையில் யுத்தம் முடிவடைந்து யாழ். நகருக்கு ஜனநாயக ரீதியில் யாழ்.மாநகரசபை தெரிவு செய்யப்பட்டு ஒன்றரை வருடங்களைத் தாண்டியிருக்கின்றது.

இந்த மாநகரசபை நிர்வாகமானது யாழ்.நகரில் அதற்குரிய தனித்துவத்துடன் வளர்ச்சியடையச்செய்யும் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் இருக்கின்றது. அதனை விளங்கிக்கொண்ட யாழ்.மேயர் அவர்களும் யாழ். நகரத்தை சிங்கப்பூராக மாற்ற வேண்டும் என்று அடிக்கடி கூறிவருகின்றார். ஒரு நகரை நவீனமயப்படுத்துவதற்கு அடிப்படையானது அந்நகரின் சுகாதாரம் சம்பந்தப்பட்டது.

யாழ்.நகரைச் சுத்தப்படுத்தும் நோக்கில் அங்கிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூழங்கள் சில கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பொம்பைவெளிப் பகுதியில் கொட்டி எரிக்கப்படுகின்றது. எனினும் ஊழியர்களின் கவனயீனத்தால் குப்பைகள் முழுமையாக அழிக்கப்படாது பொம்மைவெளிப் பகுதியில் குவிந்து காணப்படுகின்றது. இதனால் அப்பிரதேசவாசிகளுக்கு அசௌரியங்களை ஏற்படுத்துகின்றது. இது தொடர்பாக யாழ்.மாநகரசபை அதிகாரிகள் தமது கவனத்தைச் செலுத்த வேண்டுமென தினமுரசு உங்கள் பக்கத்தினூடாக கோரிக்கை விடுகின்றது.

**பி.கோதா, கல்வியங்காடு.**

# கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்ல;

# அனைத்துக் கட்சிகளுடனும் பேசியே அரசியல் தீர்வு

## ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி



கூட்டமைப்பினரில் ஒரு சிலர் கூறி வருவது பொன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ள முடியாது. அரசியல் தீர்வு விடயத்தில் அனைத்துத் தமிழ் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவர்களின் ஆலோசனைகளும் உள்வாங்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய நாட்டு நிலைவரங்கள் தொடர்பாக ஊடக நிறுவனங்களின் பிராதானிகளுக்கு விளக்கமளிக்கும் முகமாக அவர்களைச் சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் உரையாற்றுகையில், 2009 மே மாதம் அளவு நடைபெற்ற இறுதி யுத்தத்தில் யுத்தம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அவர்களுக்கு விளக்கம் அளிக்கப்படும் எனவும், ஆனால் ஐ.நா. சபையின் நிபுணர் குழுவின் அறிக்கை அரசு ஏற்றுக் கொள்ளாது என்றும் தெரிவித்தார்.

மேலும் யுத்தத்தின் இறுதி நாட்களில முடியுமான-வரை பொதுமக்களின் இறப்பைக் குறைத்து புலி-களை அழிப்பதிலேயே அரசு கூடிய கவனத்தைச் செலுத்தியது. அவ்வேளையில் மக்கள் இழப்பைக் குறைப்பதற்காக அவர்களை வெளியேற்றும் பொருட்டு ஐக்கிய நாடுகள் கொடி பொருத்திய கப்பல் ஒன்றை யுத்தப் பிரதேசத்துக்கு அனுப்பி மக்கள் வெளியேற்றத்துக்கு அனுப்பி மக்களை வெளியேற்ற உதவுமாறு அரசினால் கோரப்பட்டது. எனினும் ஐ.நா. வினால் கப்பல் வழங்கப்பட்டிருக்க வில்லை. இந்நிலையிலும் அரசு சிறப்பாகவே அந்த மக்களை மீட்டெடுத்தது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மேலும் கால அளவுநீடிப்பை கோரியிருக்கின்ற போதிலும் இடைக்கால அறிக்கை ஒன்றை சமர்ப்பித்ததாகவும், அவ்வறிக்கையை ஆராய் வதற்காக 7 அமைச்சுகளின் செயலாளர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## தருஸ்மனின் அறிக்கை இந்தியாவின் நிலைப்பாடு

இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக தருஸ்மன் தலைமையில் அமைக்கப் பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை நிரூபிக்கப்பட்டால் இந்தியா தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்கும் என இந்திய மத்திய அமைச்சர் நாராயண சுவாமி தெரிவித்துள்ளார்.

தமிழகத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்திருக்கும் அமைச்சர் நாராயண சுவாமி சென்னையில் வைத்து ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது செய்தியாளரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் இந்தியாவைப் போன்று இலங்கையும் சுதந்திரமான இறைமையுள்ள நாடு என்ற வகையில் தம்மை நோக்கி வருகின்ற அழுத்தங்களுக்கு எதிர்கொள்வதற்கு அனைத்து உரிமைகளும் இலங்கை அரசுக்கு உண்டு என்றும் தெரிவித்துள்ளார்.

## தேங்காய் விலைக்கு நடவடிக்கை

கடந்த வருடம் தென்னை அபிவிருத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே நாடளவிய ரீதியிலான தற்போதைய தேங்காய் விலை அதிகரிப்புக்கு காரணமென தெங்கு அபிவிருத்தி சபை அமைச்சர் தெரிவித்துள்ளார். கணிசமான அளவு தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள் ளன. அதனால் தெங்கு உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள அதேவேளை யில் தேங்காய் இதர உற்பத்திகளுக்கும் கணிசமான அளவு பயன்படுத்தப்பட்டு வருவதன் விளைவாக தேங்காய்ப் பற்றாக்குறை ஏற்பட்டு விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

## நிபுணர் குழு அறிக்கை அரசின் உண்மை நிலைப்பாடு என்ன?

இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் முகமாக தருஸ்மன் தலைமையிலான நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை தொடர்பாக இலங்கை அரசின் உண்மையான நிலைப்பாடு என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் திஸ்ஸ அத்த நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.தே.க.வின் ஊடக மாநாட்டில் கலந்து கொண்ட திஸ்ஸ அத்தநாயக்க, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற ஒவ்வொருவரும் வெவ்வேறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். எனினும் அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்னவென்பதை தெளிவுபடுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

தருஸ்மன் அறிக்கையை ஆராய்வதற்காக ஐ.தே. கட்சியினால் பிரெட்மன் வீரக்கோன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## "வாழ்க்கைக்குப் புதிய ஒளி" விழிப்புணர்வு வேலைத்திட்டம்

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, உலக சுகாதார ஸ்தாபனத்துடன் இணைந்து வாழ்க்கைக்கு புதிய ஒளி என்ற விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஒன்றைச் சிறைச்சாலைகளில் ஆரம்பித்து வைத்துள்ளது.

சிறைச்சாலைக் கைதிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் மீண்டும் சமூக வாழ்க்கையில் இணைந்து கொள்ளும் போது நற்பண்புகளை வெளிப்படுத்தும் நற்பிரஜைகளாக அவர்களை உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வேலைத்திட்டத்தில் எச்.ஐ.வி., போதைப் பொருள், பாலியல் துஷ்பிரயோகங்கள் பற்றிய விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதுடன் சிறைச்சாலைகளின் சுகாதார நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்கும் இதன் மூலம் முயற்சிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெண்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வேண்டும்

### அமைச்சர் நிமால்பால டி சில்வா

நாட்டில் உள்ள பெண்களை வலுப்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென நீர்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் நிமால்பால டி.சில்வா தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய நிமால்பால டி சில்வா, நகர்ப்புறங்களில் மாத்திர மன்றி கிராமப்புறங்களிலும் பெண்கள் மது அருந்தும் பழக்கத்திற்கு அடிமையாவது அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. இவ்வாறு தவறான வழியில் செல்வதைக் கட்டுப்படுத்திப் பெண்களுக்கான நம்பிக்கைகளையும் வலுப்படுத்துவதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை செழிப்பாக மாற்ற முடியும்.

## தனியார் பேருந்துப் பணிப் புறக்கணிப்பு

நாவலப்பிட்டியில் இருந்த சேவைகளை ஆரம்பிக்கின்ற ஹற்றன் - கண்டி, கம்பளை - கண்டி ஆகிய வழித்தடங்கலுக்கான தனி யார் பேருந்துகள் ஒரு நாள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டிருந்தன.

இது பற்றி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருக்கும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் நாவலப்பிட்டி கிளைச் செயலாளர் S.S.வர்ணகுல சூர்ய, மத்திய மாகாண போக்குவரத்து அதிகார சபையினர் தன்னிச்சையான முறையில் முறைகேடாக வீதி அனுமதிப் பத்திரங்களை வழங்கி வருவதாகவும் இதனால் ஏற்கனவே சேவையில் ஈடுபட்டு வந்த பேருந்து உரிமையாளர்கள் பாதிப்படைவதாகவும் இதனாலேயே அடையாள பணிப் புறக்கணிப்பு ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும் இவ் அடையாள எதிர்ப்பை உரியவர்கள் கவனத்தில் எடுக்காதவிடத்து பாரிய முறையில் எதிர்ப்புப் போராட்டங்கள் நடாத்தப்படும் எனவும் கூறியுள்ளார்.

## விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பம்

கலாச்சார அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் வவுனியா பிரதேச செயலகத் தின் கீழ் இயங்கும் கலாச்சார மத்திய நிலையத்தினால் இவ்வருடம் நடாத்தப்படவுள்ள கலைப்பயிற்சியாளர் களுக்கான விரிவுரையாளர் களை இணைத்துக்கொள் வதற்கான விண்ணப்பம் வவுனியா பிரதேச செயலகத்தினால் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் வவுனி யாவை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களாகவும் குறைந்தது பத்து வருட தொழில் அனுபவம் உடையவர் களாகவும் இருக்க வேண்டும் என்ற தகுதியின் அடிப்படை யில் நடனம், கர்நாடக சங்கீதம், நாடகம், நாட்டுக்கூத்து, ஓவியம், சிற்பம், நாதஸ்வர், தவில், மிருதங்கம், கைவினை தயாரிப்பு என்பவற்றில் தேர்ச்சியுடைய விரிவுரையாளர் களிடமிருந்தே இவ் விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதுதொடர்பான மேலதிக விபரங்களுக்கு வவுனியா பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

## முரசம்

# இந்தியாவுக்கு இன்னொரு வாய்ப்பு!

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

இலங்கை வரும் இந்திய உயர்மட்டக்குழுவின் வருகை பிற்போடப்பட்டுள்ளது. எனினும் விரைவில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இக்குழுவின் இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தைகள், இனப்பிரச்சினைக்குத் தீர்வை வலியுறுத்தும் என்று நம்பப்படுகின்றது.

இப்படி கடந்த காலத்திலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நம்பிக்கைகளும், எதிர்பார்ப்புக்களும் எழுந்தபோதும், அவை பெரும் ஏமாற்றங்களையே தந்துள்ளது.

பெரும்பாலும் அரசுகளுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்தும் முயற்சிகளாகவே ராஜதந்திரிகளின் வருகைகளும், பயணங்களும் அமைகின்றன. பிரச்சினைகளில் கிடந்து உளலும் மக்கள் எப்போதும் உயர்மட்டத்தினரின் நடமாட்டங்களைத் தமக்குச் சாதகமானதாகப் பொருத்திப் பார்த்து ஏமாந்துவிடுவது வழமையாகிவிடுகின்றது.

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை ஏற்படுத்தியிருக்கும் நெருக்கடிகளும், சர்வதேச சமூகத்தின் மத்தியில் உருவாகி வரும் கவலைகளையும் சமாளிக்க இலங்கை அரசு எடுத்துவரும் பலர்வேறு ராஜிய முயற்சிகள் திருப்திதரும் வகையில் அமையவில்லை.

இந்த நிலையில் இந்தியாவின் வெளியுறவுச் செயலர் நிருபமாராவ் தலைமையிலான உயர்மட்டக் குழுவினரின் வருகை இலங்கை அரசுக்கு ஆறுதலாக அமையும் என்று நம்பப்படுகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை அரசு, பிராந்திய வல்லரசான இந்தியாவையும், இந்தியாவின் பிராந்திய அக்கறையையும் மதிக்கின்ற வகையில் இலங்கை நடந்துகொள்ள வேண்டுமென்பது பிரதான நோக்கமாக இருக்கின்றது.

இன்னொரு புறத்தில், சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடனான இலங்கையின் நெருக்கத்தையும் இந்தியா விரும்பாது. இது உலகறிந்த பரகசியமாகும்.

இந்நிலையில் இலங்கையில் தமிழ் மக்களுக்குத் தீர்வு அவசியம் என்பதை இந்தியா கூறினாலும், அதற்காக தனது வலிமையையோ, கடுமையான ராஜிய அழுத்தங்களையோ இந்தியா அழுத்தமாகப் பிரயோகிக்கவும் இல்லை. எதிர்காலத்திலும் அது நடக்க வாய்ப்பில்லை.

நெருக்கடியைச் கொடுக்காவிட்டாலும் சர்வதேச அளவில் இலங்கை அரசுக்கு எதிராக உருவாகி இருக்கும் நெருக்கடியை இந்தியா தமிழர்களின் பிரச்சினைகளுக்குச் சாதகமாக அல்லது தீர்வுக்காகப் பயன்படுத்தவேண்டுமென தமிழ்மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தற்போதைய நிலையில் இலங்கை அரசு எதையாவது செய்து தனக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளிலிருந்து விடுபட வேண்டுமென நினைக்கலாம்.

ஆகையால் இந்தச் சந்தர்ப்பத்தை இந்தியா எப்படிக் கையாளப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதேவேளை இந்தியாவுக்குப் பிரதானமான பிரச்சினைகள் பல உண்டு. அவற்றில் இலங்கைத் தமிழர் விவகாரம் என்பது உள்வாங்கப்படாத விடயம்தான் என்பது கடந்தகால படிப்பினைகளிலிருந்து தெளிவுபடுகின்றது.

மீண்டும் மறுமுறையில் வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

---

லோகேஸ்வரன்

# கிழக்கில் விசித்திரமான காணி விவகாரம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

இருப்பிடத்துக்கான தேவைகளே பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கி விடுகின்றன. அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் காணிகளுக்கான பிரச்சினை ஒரு பாரதூரமானதாக மாறிவருகின்றன.

1985 காலப்பகுதியில் இலங்கையின் வடக்கு கிழக்கில் வன்முறைகள் ஆரம்பித்தன. இக்காலப்பகுதியில் உயிருக்குப் பயந்து மக்கள் சிதறி ஓடினர். இதில் தமிழ், சிங்கள, முஸ்லிம் என மூன்று இன மக்களும் பாதிக்கப்பட்டனர்.

குறிப்பாக எல்லைக் கிராமங்களில் இருந்த மக்களே இதில் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் ஒரு குறிப்பிட்டளவானவர்களுக்கு வேறு பிரதேசங்களில் காணிகள் வழங்கப்பட்டன. ஆனால் பெரும்பாலான மக்கள் அச்சம் காரணமாகவும் அவர்கள் மீது இருந்த நம்பிக்கைகள் காரணமாகவும் காணிகளைக் கோராமல் தமது தற்துணிவிலேயே வாழ்க்கைகளை நடத்தி வந்தனர்.

இப்போது சமாதானம் ஏற்பட்ட பின்னர், காணிக்கான சச்சரவுகள் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் நடமாடும் சேவைகளை நடத்த வேண்டிய கட்டாயத்திற்கு கிழக்கு மாகாண சபை தள்ளப் பட்டிருக் கிறது. அது கூட சரியான முறையில் ஒழுங்கு படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. முக்கியமாக பெரியளவில் காணிச்சிக்கல் உள்ள பிரதேசங்கள் இதில் சேர்க்கப்படவில்லை என்பதே இதில் குற்றச்சாட்டாக உள்ளது.

இன்றைய கட்டுரை கிழக்கில் ஏற்பட்டிருக்கிற காணிப் பிரச்சினை குறித்து முடிந்தவரை ஆராய இருக்கிறது. காணி விடயத்தில் உண்மையான நிலைப்பாடுகளை வெளிக்கொணர வேண்டும் என்ற நோக்கில் இக்கட்டுரை ஆராய்கிறது.

> **உயிரைப் பாதுகாப்பதற்காக ஓடியவர்கள், செலவுக்குப் பணம் தேவை என்ற நிலையில் குறைந்த விலைக்கும் நம்பிக்கைக்குமாக காணிகளை விற்றுள்ளனர். பெரும்பாலானவர்கள் தமது காணிகளை விற்றுவிட்டுச் சென்றுள்ள அதேவேளை சிலர் விற்காமலும் உள்ளனர்.**

விற்ற காணிகளும் நம்பிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட காணிகளும் எமக்கு மீண்டும் வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வருபவர்களால் இப்போது பிரச்சினையாக இருக்கிறது என்று அண்மையில் மட்டக்களப்பில் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாவற்கொடிச்சேனையைச் சேர்ந்த ஒருவர் கவலைப்பட்டுக்கொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் மக்களுக்கு அதிகமான காணிப்பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றினை ஆராய்ந்து தீர்க்க வேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டிய சூழலை ஏற்படுத்தியதும் இது போன்றதொரு பிரச்சினைதான் என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் மக்கள் வசித்த காணிகள், அரச காணிகள் என்ற இரு தரமான காணிகள் இருக்கின்றன. அவற்றில் வெளிநாட்டு, உள்நாட்டுக் கம்பனிகளுக்கு காணிகள் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் கிழக்கு மாகாண சபையில் பல்வேறு விவாதங்கள் எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

வளமுள்ள விவசாயக் காணிகளைக் கொண்ட மட்டக்களப்பில் அதிக வேலையற்ற இளைஞர்களும் உள்ளனர். அந்த நிலையில் வெளிநாட்டு, உள்நாட்டுக் கம்பனிகளுக்கு நீண்டகால குத்தகைக்கு விடுவதானது நியாயமானதா என்ற கேள்வியையும் தோற்றுவித்திருக்கிறது.

1985 களில் உக்கிரமடைந்த உள்நாட்டு யுத்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டம் உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தில் காணிகளை பாதுகாத்து வந்ததில் இயக்கங்களுக்கும் பங்குண்டு. ஆனால் சமாதானத்தின் பின்னர் பிரச்சினைகளை உருவாக்கியிருக்கிறது.

அம்பாறை மாவட்டத்தின் ஒலுவில், அட்டைப்பள்ளம், திராய்க்கேணி, வீரமுனை, சம்மாந்துறை கோரக்கோயிலடி, சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் பின்பகுதி, கல்முனைக்குடி, நிந்தவூர் வளத்தாப்பிட்டி, உள்ளிட்ட பகுதிகளிலிருந்த தமிழ் சிங்கள மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தனர்.

அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில், பாவற்கொடிச்சேனை, ஆரையம்பதி, மஞ்சந்தொடுவாய், ஏறாவூர்-4ஆம், 5ஆம் குறிச்சிகள், ஆறுமுகத்தான் குடியிருப்பு, ஓட்டமாவடி, மீராவோடை, கறுவாக்கேணி திராய்க்கேணி, மயிலங்கரச்சை, காகிதநகர் உறுகாம், மட்டக்களப்பு நகரின் ஜெயந்திபுரம், சிங்களவாடி, அதேபோன்று சிப்பிமடு, தியாவட்டவான், கல்குடா, புன்னைக்குடா, உள்ளிட்ட பகுதிகளில் இருந்த மக்கள் தமது காணிகளை விட்டும் விற்றும் சென்றனர்.

திருமலை மாவட்டத்தின் குச்சவெளி, நிலாவெளி, மொறவெவ, பதவியா, திரியாய் பகுதிகளில் இருந்தும் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் இடம்பெயர்ந்தனர்.

ஆரம்ப காலத்தில் தமது இடங்களில் இருந்து வெளியேறிய மக்கள் தமிழர்கள் சிங்களவர்களிடம் காணிகளை விலைக்கு வாங்கினர். அப்போது எழுத்தில் எழுதிக் கொண்டவர்கள் போக மிகுதியானவர்கள் நம்பிக்கையின் அடிப்படையில் பணம் கொடுத்து பெற்றுக் கொண்டும் உள்ளனர். அதே போன்று முஸ்லிம்களின் காணிகளைத் தமிழர்கள் விலைக்குப் பெற்றுள்ளனர்.

உயிரைப் பாதுகாப்பதற்காக ஓடியவர்கள், செலவுக்குப் பணம் தேவை என்ற நிலையில் குறைந்த விலைக்கும் நம்பிக்கைக்குமாக காணிகளை விற்றுள்ளனர். பெரும்பாலானவர்கள் தமது காணிகளை விற்றுவிட்டுச் சென்றுள்ள அதேவேளை சிலர் விற்காமலும் உள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் பின்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த தமிழர்கள் இப்போது மட்டக்களப்பின் திருப்பெருந்துறையில் குடியேறியுள்ளனர். அதே போன்று வளத்தாப்பிட்டி, மல்வத்தை பிரதேசங்களில் இங்குராண சீனித் தொழிற்சாலைப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்கள் குடியேறியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதியின் ஒருபகுதி, மஞ்சந்தொடுவாய், ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு எல்லைப்பிரதேசம், ஓட்டமாவடி, மீராவோடை, கறுவாக்கேணி, தியாவெட்டவான், மயிலங்கரச்சை, காகித நகர், நாவலடிச் சந்தி உள்ளிட்ட பிரதேசங்களில் தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளில் தமிழர்கள் யுத்தகாலத்தில் வெளியேறியதைத் தொடர்ந்து இப்போது முஸ்லிம்கள் குடியேறியுள்ளனர்.

ஓட்டமாவடி நகருக்குள் பொதுச்சந்தை அமைந்துள்ள இடம் தமிழர்களின் பிள்ளையார் கோயில் ஒன்று இருந்த இடம் என்பதும், அதே போன்று தபாலகம், பிரதேச செயலகம், நூலகம் என்பன உள்ள இடங்களும் சேமக்காலையைச் சுற்றியுள்ள காணிகளும், தமிழர்களுக்குச் சொந்தமானவை என்பது குறிப்பிடத் தக்கது. இந்த இடங்கள் தமிழர்களிடமிருந்து பணம் கொடுத்துக் கொள்வனவு செய்யப்பட்டவை என்று பிரதேச செயலகங்களில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் அமைச்சர்களால் தெரிவிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை மட்டக்களப்பின் வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாவற்கொடிச்சேனை, இருநூறு வில்லு பிரதேசங்களில் இருந்த முஸ்லிம்கள் 1985 காலப்பகுதியில் அங்கிருப்பதில் ஏற்பட்ட அச்சம் காரணமாக தமிழர்களுக்கு காணிகளை விற்றுவிட்டு இடம்பெயர்ந்துள்ளனர். அதேபோன்று இடம்பெயர்ந்த பின்னர் விற்றுள்ளனர். இவ்வாறான காணிகளை இப்போது மீண்டும் தமக்குத் தருமாறு முஸ்லிம்கள் கோரி வருகின்றனர்.

இப்பிரதேசங்களில் இருந்து அப்போது இடம்பெயரும் போது 80 வரையான குடும்பங்கள் வசித்துள்ளதாக பதிவுகள் தெரிவிக்கின்ற போதும் இப்போது 400க்கும் மேற்பட்டவர்கள் தமது விபரங்களைக் கொடுத்து தமக்குரிய காணிகளைக் கோருவதாக அறிய முடிகிறது.

நம்பிக்கை, உதவி, நல்லெண்ண நோக்கங்களில் முஸ்லிம்கள் தமிழர்களிடம் காணிகளை வழங்கியிருக்கின்றனர். ஆனால் அவற்றை இப்போது கோருவதில் நல்லெண்ண நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வாழைச்சேனை ஓட்டமாவடிப் பிரதேசங்களில் தமிழர்களின் காணிகள் வாங்கப்பட்டது போன்று பாவற்கொடிச்சேனையில் முஸ்லிம்களின் காணிகள் வாங்கப்பட்டுள்ளன. அதே போல் மட்டக்களப்பு ஜெயந்திபுரம் பகுதிகளில் இருந்த சிங்களவர்களின் காணிகள் வாங்கப் பட்டுள்ளன. அவ்வேளையில் பரஸ்பரம் நல்ல நோக்கத்துக்காக காணிகள் வாங்கப் பட்டுள்ளதாகவே அறிய முடிகிறது. ஆனால் இப்போது நிலைமைகள் மாறி நடைமுறைக்குள் வருவது ஏற்றுக்கொள்ள முடியாததாகவே பார்க்கப்படுகிறது.

மட்டக்களப்பின் மண்முனை வடக்கு பிரதேச செயலகப்பிரிவுக்குள் இருந்த முஸ்லிம்கள் இடம்பெயர்ந்த போது அவர்களுக்கு அந்த செயலகப்பிரிவுக்குள்ளேயே நாவற்குடா கிழக்கு, மஞ்சந்தொடுவாயிலும் காணிகள் வழங்கப்பட்டன. அதேபோன்று வாகரைப் பிரதேச செயலகப்பிரிவுக்குள் இருந்து மதுரங்கேணிக் குளம், காரைமுனை பிரதேசங்களிலும், கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கள்ளிச்சை பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு ரிதிதென்ன ஜெயந்தியாய பிரதேசங்களில் மகாவலி திட்டத்தின் கீழ் காணிகள் வழங்கப்பட்டன.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# ஆட்ட நிர்ணயச்சதி!

## காத்திருக்கிறது அதிர்ச்சி!!



**அமலன்**

**இலங்கையின்** கிரிக்கெட்டில் ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றதாக கூறப்படும் செய்திகாரணமாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் உண்மையில் ஆடிப்போயுள்ளது. இலங்கை அணி ரசிகர்களும் இந்த செய்தியின் உண்மைத்தன்மையை தெரிந்துக்கொள்ள ஆர்வமாக உள்ளனர்.

ஆனால் உண்மை வெளியிடப் படாமல் காலமே வீணடிக் கப்படுகிறது. இதனால் இலங்கைக் கிரிக்கெட் அணியின் வீரர்கள் உட்பட்ட ரசிகர்கள், கவலை கொண்டுள்ளனர். இதுவரை காலமும் ஏனைய நாடுக-ளின் கிரிக்கெட் வீரர்கள் கிரிக்கெட் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டமையை கேள்விப்பட்டிருக்கிறோம். அந்த வீரர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டமையையும் கண்டிருக்கிறோம். எனினும் இலங்கை அணி வீரர்கள் எவரும் அந்த வலைக்குள் சிக்கவில்லை என்ற பெருமை இதுவரை இருந்து வந்தது.

இந்தநிலையிலேயே மேல்மாகாண சபை உறுப்பினரான ஹசான் திலகரட்ன, இலங்கைக் கிரிக்கெட்டில் ஆட்டநிர்ணயம் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த செயற்பாடுகள் 1992 ஆம் ஆண்டில் இருந்து இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த செய்தி வெளி யானவுடன் இலங்கையின் கிரிக்கெட் மற்றும் அரசியல் மட்டங்களில் பலத்த எதிர்ப்பார்ப்புகள் ஏற்பட்டன.

முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலரும் தற்போதைய வீரர்களும் அரசியல் சார்ந்து இருப்பதே இதற்கான காரணமாகும். இவ்வாறான நிலையில் ஆட்டநிர்ணயத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்களை வெளியிடப்போவதாக ஹசான் திலகரட்ன குறிப்பிட்டிருந்தார்.

இதன்காரணமாக கடந்த வாரத்தில் மேல்மாகாணசபை அமர்வுகளின் போது அவர் இது தொடர்பாக ஏதாவது விடயத்தை கூறுவார் என்ற எதிர்ப்பார்ப்பு காணப்பட்டது. எனினும் ஹசான் அதனை வெளிப்படுத்தவில்லை. மாறாக அமைதியாக இருந்துவிட்டார். இதனையடுத்து குற்றப்புலனாய்வு துறையினர் ஹசான் திலகரட்னவை இரண்டு தடவைகள் விசாரணைக்கு அழைத்து வாக்குமூலத்தை பெற்றுக்கொண்டது.

எனினும் அவர் தமது வாக்குமூலத்தில் ஆட்டநிர்ணயத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்களை அவர் வெளியிடவில்லை என்றே தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தநிலையில் இன்னும் பொதுமக்கள் ஹசான் திலகரட்னவின் மீதான பார்வையை திருப்பிக்கொள்ளவில்லை.

ஹசான் திலகரட்னவின் மனைவியின் தகவல்படி, தமது கணவர், ஆட்டநிர்ணயம் தொடர்பாக தகவல்களை வெளியிடப்போவதாக தெரிவித்ததில் இருந்து அவருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளன.

இதன்காரணமாக அவர் ஆட்டநிர்ணயம் தொடர்பில், தகவல்களை வெளியிட மறுக்கிறார் என்று ஹசானின் மனைவி குறிப்பிட்டுள்ளார். இந்த கருத்தை ஏற்றுக்கொள்ளாத இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்களான மஹேல ஜயவர்த்தன மற்றும் குமார் சங்கக்கார ஆகியோர், ஹசான் திலகரட்ன பொய்கூறுவதாக தெரிவித்துள்ளனர். முடிந்தால் அவர் ஆட்டநிர்ணயத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்களை வெளியிடட்டும் என்று அவர்கள் சவால் விடுத்துள்ளனர்.

1992 ஆம் ஆண்டு முதல் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் ஆட்டநிர்ணயத்தில் ஈடுபட்டு வருவார்களானால், ஏன் தற்போது அதனை ஹசான் திலகரட்ன வெளிப்படுத்தவேண்டும் என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். எனினும் அப்போதிருந்தே தமக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதாக ஹசான் திலகரட்ன குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்தப்பிரச்சினை இப்போதைக்கு வெளிவருமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அதேநேரம் தாம் ஆட்டநிர்ணயம் தொடர்பிலான தகவலை வெளியிடவேண்டுமானால் தமது உயிருக்கு பாதுகாப்பு வேண்டும் என்று கூறியுள்ள அவர் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்துக்கு முறையிடவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அவர் வாய்திறககும் வரை அவரின் வாயைப்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையே தற்போது ஏற்பட்டுள்ளது.

**ஹசான் திலகரட்னவை இரண்டு தடவை-கள் விசாரணைக்கு அழைத்து வாக்குமூலத்தை பெற்றுக்கொண்டது. எனினும் அவர் தமது வாக்குமூலத்தில் ஆட்டநிர்ணயத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்களை அவர் வெளியிடவில்லை என்றே தகவல்கள் வெளியாகி யுள்ளன. 1992 ஆம் ஆண்டு முதல் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் ஆட்டநிர்ணயத்தில் ஈடுபட்டு வருவார்களானால், ஏன் தற்போது அதனை ஹசான் திலகரட்ன வெளிப்படுத்தவேண்டும் என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.**

# அதிரடி அய்யாத்துரை



**கூத்தாடி** சுரேஸுக்கு கொஞ்ச நாளாகவே நாக்கில தோசமுங்கோ. அரசு மேல நம்பிக்கை இல்லை. ஏமாத்தினம் எண்டுறார். அவர் சொல்லி சில மணி நேரத்துக்குள்ளேயே கூத்தமைப்பில இருந்து அரசோடு பேசுவோம், அரசியல் தீர்வு பற்றி தங்களோட பேச அரசு இணங்கி இருக்குது எண்டு இன்னொரு கூத்தாடி குரல் குடுப்பாருங்கோ.

கொஞ்ச நாளாகவே சுரேஸுக்கும் அவரின்ர சக கூத்தாடிக்களுக்குமிடையில உப்பிடியொரு பனிப்போர் நடந்து கொண்டுதானுங்கோ இருக்குது. எண்டாலும் 'விடாது கறுப்பு' எண்ட மாதிரி சுரேஷரும் விட்ட பாடில்லையுங்கோ. லேட்டஸ்டாக ஒரு ஸ்டேட்மெண்ட் விட்டவருங்கோ. அதாகப்பட்டது.

இன்னும் மூணு மாசத்துக்குள் அரசு தீர்வு திட்டத்தை தராவிட்டால் அரசோடு தொடர்ந்து பேசுவதில் அர்த்தமில்லையாமுங்கோ. உது என்ன காலக்கெடுவோ அடியேன் அறியேனுங்கோ.

ஒண்டு மட்டும் கேட்கணும் போல இருக்குதுங்கோ. மூணு மாசமாகியும் உது நடக்காட்டில் உவர் சுரேஸும் - அவரின்ர சாக்களும், உந்த எம்.பிப் பதவியும் வேண்டாம். ஒண்டும் வேண்டாம், எண்டிட்டு கச்சையைக் கட்டிக் கொண்டு காட்டுக்குள்ள நுழையத் தயாரா எண்டது தானுங்கோ.

**புலிகளின்ர** தலைவர் மரணமான செய்தியை மாமனிதச் சமூகம் நம்பாதது போலை, இப்ப ஒசாமா மரணமானதையும் அறுபது வீதமானவை நம்புகினமில்லையாமுங்கோ.

நடந்ததை நம்பாத கூட்டம் யார் தெரியுமோ? அவை நம்பினவை கொட்டாவி விட்டாலும், அந்தா தலைவர், அணுகுண்டை விழுங்கிப் போட்டார் எண்டு துதிபாடியே தங்கட தலைவர்மாரை கொலைசெய்தவைதானுங்கோ.

இண்டைக்கும் பிரபாகரன் ஒரு மறைவான இடத்தில் தாடியோடும், பரட்டைத் முடி-யோடும் இருக்கின்றார் எண்டு சொல்லுறவை மாதிரித்தானுங்கோ. ஒசாமாவும் எங்கோ கருங்கல் இடுக்கில கால்ப்பந்து விளையாடிக்கொண்டிருக்கிறார் எண்டு சொல்லுற ஒரு கூட்டம் இருக்குதுதானுங்கோ.

பிரபாகரன் ஒசாமா விசயத்தில பல்வேறுபட்ட ஒற்றுமை, வேற்றுமைகள் இருக்குதுங்கோ. ஆனால் ரெண்டு பேரின்ர மரணத்தின் போதும் தலையைச் சிதைச்சு மூளையை வெளியில எடுத்திருக்கினமே ஏன் எண்டு வாத்தியாரைக் கேட்டதுக்கு,

சொந்த புத்தியும் இல்லாமல், சொல்புத்தியும் இல்லாமல் உசுப்பேத்தலுக்கு நடந்தவர்களுடைய மூளையை வெளியில எடுத்துப் பார்க்கினம் போலை எண்டு வாத்தி சொன்னாருங்கோ.

வாத்தி சொன்னது பிரபாகரன் விஷயத்தில கரெக்ட் எண்டாலும், ஒஷாமா விசயத்திலை கரைட்டா எண்டதில எனக்கு கொஞ்சம் டவுட்டாகவே இருக்குதுங்கோ.

**ஐ.நா** அறிக்கையொண்டு கிளம்பினதெல்லோ. அது ஏற்படுத்திய அதிர்வு இன்னும் உணரப்பட்டு கொண்டுதான் இருக்குதுங்கோ.

உதில பான் கீ மூன் ஐயாவுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கைவிடாவிட்டால் நாட்டாமையின் தீர்ப்பு மாறிப்போகலாம் எண்ட மாதிரி ரஷ்யாவும், சீனாவும் சினம் கொண்டதாலை,

இராஜிய தந்திரோபாயங்களிலை தளர்வுகள் ஏற்பட்டிருக்குதாமுங்கோ. தளர்வுகளை நாடிப்பிடிச்சப் பார்க்க பிளேக் வந்து போனதுக்குப்பிறகு அண்டைநாட்டு அருமை மீண்டும் உணரப்பட்டிருக்குதாமுங்கோ. என்ன இருந்தாலும் தூரத்துத் தண்ணி அவசரத்துக்கு உதவாது எண்ட உண்மை மெல்ல மெல்ல சில பிரச்சாரப் பீரங்கிகளுக்கு புரியுதாமுங்கோ. அதாலதான் சவுண்டை அடக்கியிருக்கினமாமுங்கோ.

எல்லாத்தையும் தாங்கிக்கொண்டு அண்டைநாடு நேசக்கரம் நீட்டுறதாலைதான் நிலைமை கட்டுப்பாட்டுக்குள்ள இருக்குதாமுங்கோ. இல்லை எண்டால் பிளேக்கும், வைட்டும் மாம்பழ நாட்டில வந்து மங்காத்தா விளையாடிப்போடுவினமாமுங்கோ. உது யாருக்குப் புரியுது. யாருக்கு புரியமாட்டேங்குது எண்டதுதானுங்கோ எனக்குப் புரியமாட்டேங்குது.

# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த

# கம்பன் விழா



(ஏப்ரல் 21 முதல் 24 வரை கொழும்பில் நடைபெற்ற கம்பன் விழா)

**உலகெல்லாம்** நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொரு ளான மகாவிஷ்ணுவின் திருவவதாரமே ராமா வதாரம். அந்த ராமன் புகழ்பேசும் கம்பன் விழா கொழும்பில் நடைபெற்றது. சிறியேன் முன் செய்த புண்ணியம் பேற்றினால் இந்தக் கம்பன் விழா பார்க்கக் கிடைத்தது. இனிய தமிழன் மேன்மையும் ஆழ்ந்த கருத்துக்களின் தெளிவும் ஒவ்வொரு நிகழ்விலும் பிரதிபலித்தது.

முதல்நாள் விழாவுக்கான அறி ஞர் குழாம் ஊர்வலம் கொழும்பு இராமகிருஷ்ணா தோட்ட ஐஸ்வரியம்மன் ஆலயத்திலிருந்து மிக அழகாகவும் கோலாகலமாகவும் மாலை 5 மணிள வில் புறப்பட்டது. எங்கு திரும்பினாலும் அறிஞர்களும் விரிவுரையாளர்களும் ஆசிரியர்களும் பேச்சாளர்களுமே தென்பட்டனர்.

ஸ்ரீ ராம லஷ்மண சீதாதேவி யும் கம்பநாட்டாழ்வாரும் அழகான பீடத்திலே அமர்ந்த வண்ணம் கோலா கலமாக வீதிவலம் வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.அந்த நேரம் நான் என்னையே மறந்த நிலையில் ராமநாமம் உச்சரிக்க ஆரம்பித்தேன். போவோர் வருவோர் அனைவரையும் தம் பால் ஈர்த்திழுத்த இந்த ஊர்வலம் காணக் கண்கோடி வேண்டும்.

இந்த அழகிய ஆனந்த அற்புத ஊர்வலம் ஸ்ரீ ராமகிஷ்ணமிஷன் மண்ட பத்தை அடைந்ததும் கம்பன் விழா கோலாகலமாக ஆரம்பித்தது. மண்டபம் நிறைந்த ரசிகர் கூட்டம் நிரம்பி வழிந்ததோடல்லாமல் நாங்கள் ளியில் நின்றவாறு கம்பன் விழாவை ரசிப்போம் என்ற நிலையில் மண்டபத்தின் முன்னே ஏராளமான ரசிகர்கள் நின்றவண்ணமே பார்த்துக்கொண்டு தமிழ் அமுதம் பருகினார்கள்.

கடவுள் வாழ்த்து, மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்த கம்பன் விழா அனைத்துச் செயற்பாடுகளாலும் களைகட்டத் தொடங்கியது. "கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்' என்ற வாசகத்துடன் தொடங்கிய கம்பன் விழா முதலாம் நாள் நிகழ்ச்சிகள், வரவேற்புரை, தலைமையுரை, தொடக்கவுரை, சிறப்புரை, எழி லுரை என்று தொடங்கித் தேனி னும் இனிய செந்தமிழாம் தீந்தமிழில் அனைவரது உள்ளங்களையும் கவர்ந்திழுந்துக்கொண்டது. மகாவித்துவான் சி.கணேசையரின், 'கவிச்சக்கரவர்த்தி கம்பனே' என்ற நூலும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸின், 'வாலி வதை' என்ற நூலும் வெளியீடு செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து பரிசளிப்பு வைபவமும் விருது வழங்கல் வை-பவமும் வெகு சிறப்பாக நடந்தேறியது. தமிழ்நாட்டைச் சேர்ந்த நாட்டியமணி பத்மபூஷண் பத்மா சுப்பிரமணியம் அவர்களுக்கு விசேட விருது வழங்கப்பட்டது. பின்பு எமது நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், கனக ஈஸ்வரன், குமார் நடேசன், ராதாகிருஷ்ணன், திருஞான சுந்த ரம், திருமதி சாந்தினி சிவநேசன் ஆகியோருக்கும் இக்கம்பன் விழாவில் விருது வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நாட்டிய கலாமந்திர் வழங்கிய, "ஸ்ரீராகவ அவதார ரூபம்" நாட்டிய அரங்கு வைத்தகண் வாங்காமல் ரசிகர்களை வியப்பிலாழ்த்தியது.

இரண்டாம் நாள் விழாவில் புலவர் சண்முகவடிவேல் நடுவராகத் திகழ்ந்த விவாத அரங்கு அரங்கேறியது. இதில், "வாதநுட்பம் பெரிதும் வெளிப்படுவது கூனி கைகேயி உரையாடலிலே என்றும், இராலக்ஷ்மண உரையாடலி லேயே என்றும், இராமபரத உரையாட-லேயே என்றும், இராமவாலி உரை யாடலிலே என்றும், இலக்ஷ்மணன் தாரை உரையாடல்களிலேயே என்றும்,விபூஷணன் கும்பகர்ணன் உரையாடலிலே என்றும் வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த திருமதி பர்வீன் சுல்தானா வின் சுவாரஸ்யமான பேச்சு ரசிகர்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது. அன்றுமாலை தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் சோ.சத்தியசீலன் நடுவராக அமைந்த "பாசம் கடந்து பெரிதும் தேசத்தை நேசித்தவள் கோசலையா, சுமித்திரையா, தாரையா என்ற பட்டிமன்ற மண்டபம் அனை-வரது உள்ளங்களையும் கொள்ளை கொண்டுவிட்டது என்று கூறினால் மிகை யாகாது. இதில் கம்பவாரிதி ஜெயராஜ் சக்கைபோடு போட்டு வெற்றி கண்டமை பாராட்டுக்குரியது.

மூன்றாம் நாள் காலை "சுழ லும் சொற்போர்" மிகவும் அருமை யாக அமைந்திருந்தது. "கம்பனில் பெரிதும் வெளிப்படும் வள்ளவத்தடம்" எனும்பொருளில் கலந்து கொண்ட அனைவருமே நன்கு போரிட்டார்கள். இரவு, மறைந்த கலைஞர்களுக்கு ஓர் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது. பிறகு தமிழ்நாட்டைச் சேர்ந்த கவி-மாமணி அப்துல் காதரின் தலைமை யில் நடைபெற்ற "வானில் கம்பன் வடிக்கும் கண்ணீர்" என்ற கவியரங்கம் அனைத்து ரசிகர்களின் மனத்தைக் கவர்ந்திழுத்துக்கொண்டது.

நாலாம் நாள் காலை அமர்வில் பேராசிரியர் சோ.சத்தியசீலன் தலைமையில் நிகழ்ந்த " துறந்தார் பெருமை துணைக்கூறின்" என்ற சிந்தனை அரங்கம் எல்லோரையும் சிரிக்க வைத்ததோடு சிந்திக்கவும் வைத்தது. இது எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் பேராசிரியர் சத்தியசீலன், வசந்தா வைத்தியநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸ் மூவரின் தலைமையில் நடைபெற்ற "தேசத் துரோகக் குற்றச்சாட்டு" எனும் வழக்காடு மன்றம் அதியற்புதமாக அமைந்திருந்தது. நீண்ட நாளுக்குப் பின்பு ஈழத்து இலக்கிய ரசிகர்களின் ஞானப்பசி தீர தமிழமுதம் வழங்கிய கொழும்புக் கம்பன்கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களின் அறப்பணி எம்மவர்களால் பாராட்டப்பட வேண்டியதே.

இ.ஸ்ரீதரன்

பகவான் கீதையில் சொன்னது போல் வாழ்ந்து கொண்டிருப்பவர் அவர் ஒருவரே.

அதோ, அவர் நடந்துபோய்க்கொண்டிருக்கிறார்.

அந்தக் காலடிச் சுவடுகளைத் தொடர்ந்து செல்லுங்கள்.

அதுவே உங்கள் யோகமாக இருக்கட்டும்.

**பாகம்-09**

**உண்ணாவிரதம்**

உலகத்தில் அதிகம் சாப்பிட்டுச் செத்தவர்கள் உண்டே தவிர, குறைத்துச் சாப்பிட்டு மாண்டவர்கள் குறைவு.


ஒரு மகாராஜா சாப்பாட்டில் அழாக்கு நெய் ஊற்றிக்கொள்வார். ஆட்டுத் தலைதான் அதி-கம் சாப்பிடுவார். கொழுப்புச்

# கண்ணதாசனின்

## அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - 09

169



சத்துக்களை மிக அதிகமாகச் சேர்த்துக்கொள்வார். ஆனால் வருஷத்தில் ஒரு மாதம் லங்கணம்!

உடம்பில் உள்ள கொழுப்பை இறக்குவதற்கு, அந்த ஒரு மாதத்தைப் பயன் படுத்திக்கொள்வார்.

இரண்டு பேர் தினமும் ஒரு-வகை எண்ணெய்போட்டு உடம்பைத் தேய்ப்பார்கள். இரண்டு வேளை உணவு, இரண்டு வேளையும் அரைக்கிலோ வெங்காயம் சாப்பிடுவார்கள்.

வெங்காயத்திற்கு இரண்டு குணங்கள் உண்டு: கொழும்பைக் குறைக்கும். காம இச்சையைத் தூண்டும்.

அதனால் தான் நெய்யும் சீனி யும் அதிகம் சாப்பிடுகிற பிரா-மணர், வெங்காயச் சாம்பார் சேர்த்துக்கொள்கிறார்கள்.

விதவைகள் வெங்காயம் சேர்ப்பதில்லை.காஞ்சிப் பெரியவர்கள் ஒரு பிடி அவலிலும் பாலிலுமே காலம் கடத்துகிறார்கள். வாரியார் சுவாமிகளும் அப்ப டியே.

மலையில் வாழ்ந்த சித்தர்கள், சமையல் செய்தா சாப்பிட்டார்கள்? காய், கனி,கிழங்கு கந்த மூல கங்களோடு சரி. இந்துக்கள் வாரத்தில் ஒரு நாள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

நான் சொன்ன மகாராஜாவைப் போல முஸ்லிம்கள் வருஷத்தில் ஒரு மாதம் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

இந்துக்களில் சிலர் திங்கட் கிழமை 'சோமாவார' விரதம்; சிலர் செவ்வாய் விரதம்; சிலர் சனிக்கிழமை விரதம், அது போல மாதங்களும் உண்டு. அது ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒவ்வொரு மாதிரி இருக்கும்.

சிலர் ஆடிமாதம் முழுக்க மாமிசம் சாப்பிடமாட்டார்கள். சிலர் புரட்டாதி.

என்னுடைய சுவீகாரத் தாயார் கார்த்திகை விரதி.

உணவு செரிமானத்தை ஒழுங்குபடுத்துவது உண்ணாவிரதத்தின் நோக்கம்.

இது இறைவன் பெயரால் வழங்கப்படும் தேக ஆரோக்கி யம்.

தெய்வ பக்தியோடு இந்துக் கள் ஆரோக்கியத்தைக் கலந்தார் கள். காந்தியடிகள் தேச பக்தி யும் கலந்தார்.

உண்ணாவிரதத்தை ஒரு ஆயுதமாக்கி, தேச பக்திக்கு அதைப் பயன்படுத்தினார்.

தன்னை வருத்திக் கொள்ளும் அந்த முறை-யின் மூலம் அந்நிய அதிகார வர்க்கத்தை அவர் நடுங்கவைத்தார்.

அவரது தேக ஆரோக்கியத்திற்கும் கூட, அவர் மேற்கொண்ட உண்ணா விரதங்கள் பயன்பட்டன.

மகாகவி பாரதியார் சொல்வது போல் நிறை யச் சாப்பிடக்கூடாது என்பதும் தவறு. நிறை யச் சாப்பிட வேண்டும் என்பதும் தவறு. அளவறிந்து சாப்பிடவேண்டும்.

இப்போதெல்லாம் மருத்துவர்கள் வாயுத்தொல்லை உள்ளவர்களுக்கு ஒரு யோசனை சொல்கிறார்கள். அதாவது 'இரண்டுமணி நேரத்திற்கு ஒரு தரம் ஏதாவது சாப்பிட்டுக்கொண்டிருக்க வேண்டும்' என்று. 'வயிறு காலியாகக் கிடப்பதால் தான் வாயு உற்பத்தியாகிறது' என்கிறார்கள்!

அது ஓரளவுதான் உண்மை.

வாயுவில் மூன்று வகை உண்டு ஒன்று காலியான வயிற்றில் உண்டாவது. மற்றொன்று உஷ்ணவாயு. இன்னொன்று பதார்த்த வாயு.

உஷ்ணமில்லாத உடம்பில், உண்ணாவிரதத்தினால் வாயு உண்டாவதில்லை. எப்போதுமே உண்ணாவிரதம் உடம்பை உற்சாகமாக வைத்திருக்கும்.

அது வரம்பு மீறிப் பசி பட்டினி என்று போகும்போது தான் களைப்புத் தோன்றும்.இப்படி நான் சொல்வது, உடல் உழைப்பு அதிகம் இல்லாதவர்களுக்கு மட்டுமே.

நல்ல உழைப்பாளிகள் சாதத்தை மலையாகக் குவித்து அதிலே ஒரு குளம் வெட்டிச் சாம்பார் ஊற்றி நீச்சலடிக்கிறார்கள். அவர்களுக்கும் தொந்தி விழுகிறது. ஆனால் அந்தத் தொந்தி ஒரு பெரிய யானை-யையே தாங்கும். நாம் எங்கோ உழைக்கிறோம்...?

நான் கூடச் சாப்பாடு குறை கிறதே என்று வருத்தப்படுவது உண்டு. இப்போது முப்பது பவுண்ட இளைத்துவிட்டேன். உடம்பு இளைக்கிறதே தவிர களைக்கவில்லை.

தொடரும்...



# ஓசாமாவின் கதைமுடித்த ஒபாமா

## நாற்பது நிமிட அதிரடி



கொண்டாட்டத்தில் மூழ்கிக் கிடக்கிறன அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும்........! 10 ஆண்டுகளுக்குப் பிறகு நீதி கிடைத்துவிட்டதாக பரவசப்படுகிறார் பராக் ஒபாமா. தீவிரவாதத்தால் திணறும் பல்வேறு உலக நாடுகளுக்கும் இது கும்மாளம். அமெரிக்காவுக்கும் மேற்கத்தைய ஏன் இந்தியாவுக்கும் பெரும் மிரட்டலாக திகழ்ந்த ஓசாமா பின்லேடனை சுட்டுக்கொன்றுவிட்டதான அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் அறிவிப்பு,பல்வேறு மர்மங்களை உள்ளடக்கியதாக உள்ளது. ஓசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டது உண்மைதானா.....? என்பது உட்பட்ட பல சந்தேகங்களையும் பல கோணங்களிலான வாதப் பிரதிவாதங்களையும் இந்த அறிவிப்பு கிழப்பியுள்ளது. சுட்டுக் கொல்லப்பட்டதாக சொல்லப்படும் ஓசாமாவின் சடலத்தைப் பற்றிய காணொளியோ, தெளிவான புகைப்படங்களோ இதுவரை அமெரிக்காவால் வெளியிடப்படாத நிலையில் ஓசாமாவின் சடலம் எங்கே என்று கேட்டால், இஸ்லாமிய முறைப்படியான சடங்குகளுடன் கடலுக்குள் புதைத்துவிட்டதாக கதை விடுகிறது மூத்த ஏகாதிபத்தியம். ஆக உலகத்தின் மர்ம மரணப்பட்டியலின் எண்ணிக்கையில் இன்றைய நாளில் ஓசாமா பின்லேடனின் பெயரும் அடக்கப்படுகிறது.

உலகத்தின் மிகப்பெரிய தீவிரவாதி என வர்ணிக்கப் பட்ட பின்லேடனை வீழ்த்தி விட்டதாக வெற்றிக் களிப்பில் மிதக்கும் வெள்ளை மாளிகை, ஓசாமாவின் கைகளில் ஆயுதத்தையும், அவர் மூளையில் தீவிரவாதத்தையும் திணித்ததே தாங்கள்தான் என்பதை மறந்துவிட்டாலும் வரலாறு மறுக்காது/மாறாது. ஓசாமா பின்லேடன் போன்ற ஆயிரக் கணக்கான தீவிரவாதச் சிந்தனை கொண்ட இளைஞர்களையும், அமைப்புகளையும் உருவாக்கி வரும் அமெரிக்காவை தீவிரவாதத்தின் கருவறை என்றுதான் வர்ணிக்கவேண்டும். அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட(படும்) தீவிரவாதப் பேய்க்கு இன்றும் ஏராளமான நாடுகளும் அங்குள்ள அப்பாவி மக்களும் பலியாகி வருவதை யாரும் மறுக்கமாட்டார்கள்.... ஓசாமா பின்லேடன் என்ற ஒற்றை மனிதனுக்கு சவக்குழி தோண்டியதால் மட்டும் உலகத்தின் ஒட்டுமொத்த பயங்கரவாதத்தையும் புதைகுழிக்கு அனுப்பிவிட்டதாக அமெரிக்கா தப்புக் கணக்குப் போடத் தொடங்கினால் அதை விட முட்டாள்தனமான எண்ணம் வேறு எதுவுமாக இருக்கமுடியாது.

உலகத்தின் மிகப் பெரிய வல்லரசு என்ற நாட்டாண்மை முகத்திரையுடன் உலகத்தின் அனைத்தையும் அரங்கேற்றி வரும் அமெரிக்காவின் தீவிரவாத முகம் உடனடியாக வெளி உலகத்துக்கு தெரிவதில்லை.

தான் வளர்த்த தீவிரவாத மிருகம் 2001 இல் தன்னையே கடிக்கத் தொடங்கியவுடன்தான் அமெரிக்காவுக்கு கிலி தட்டியது. தன் கண்ணுக் குள்ளேயே அல்கொய்தா விரல் விட்டு ஆட்டத் தொடங்கியவுடன்தான் உலகப் பயங்கரவாதம் பற்றி அமெரிக்கா உபதேசிக்கத் தொடங்கியது. இதற்கு ஒத்துப்பாட மற்றும் சில ஏகாதிபத்தியங்கள் முன்வர, ஆரம்பமானது. ஓசாமாவின் தேடுதல் வேட்டை என்ற தலைப்பிலான ஆப்கான் நாட்டு மீதான ஆக்கிரமிப்பு.

ஆப்கான் மண்ணிலிருந்து ரஷ்யாவை விரட்ட வேண்டும் என்பதற்காக மதவெறியை தூண்டி விட்டு, இஸ்லாமிய இளைஞர்களுக்கு தீவிரவாதத்தை திணித்த அமெரிக்கா அது தனக்கே எதிரியாக மாறும் என அன்று எண்ணியிருக்க மாட்டாது. அமெரிக்காவின் மறைமுக சதித்திட்டத்தை உணராத அப்பாவி இஸ்லாமிய இளைஞர்கள் மதம் என்ற போர்வையில் அமெரிக்க வலையில் வீழ்ந்தனர். அப்படி அமெரிக்காவால் வடிவமைக்கப்பட்டவர்களில் ஒருவரான ஓசாமா பின் லேடன் தலைமையில் திரண்ட முக்கிய இளைஞர்கள் அணிக்கு, அமெரிக்காவின் ஏற்பாட்டில் ஆயுதமும், நிதி உதவியும் தாராளமாகவே அள்ளி வழங்கப்பட்டது. அன்றைய அமெரிக்காவின் ஒரே நோக்கம் ஆப்கான் மண்ணிலிருந்து ரஷ்யா வெளியேற்றப்பட வேண்டும் என்பது தான். பின்லேடன் தலைமையிலான இந்தப் போராட்டக் குழுவினரை, ஆப்கானிஸ்தானின் சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்று அப்போதைய அமெரிக்க அதிபர் றொனால்ட் றீகன் மனமாரப் பாராட்டினார். அவருடைய அந்த பாராட்டுப் பத்திரம் வரலாற்றின் பக்கங்களில் இன்றளவும் அழிக்க முடியாத அளவுக்கு அழுத்தமாகவே பதியப் பட்டுள்ளது.

கால ஓட்டத்தில் சோவியத் கூட்டமைப்பு வீழ்ச்சி அடைந்து அமெரிக்கா- ரஷ்யா இடையிலான பனிப் போரும் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர்தான் ஆப்கான் மண் தொடர்பான அமெரிக்காவின் போக்கு மாறத்தொடங்கியது. தொடர்ச்சியாக ரஷ்யாவும், அமெரிக்காவும் நண்பர் களாகியதும் 1989இல் ரஷ்யா ஆப்கானிஸ்தானை விட்டு விலகியதும் மேலோட்டமான வரலாறு.ஆப்கான் தேசத்தை ஒரு போர்க் களமாக்கிய அமெரிக்கா அதற்கான எவ்வித பரிகாரமோ நிவாரணமோ அளிக்காமல் இந்த விவகாரத்திலிருந்து விலகத் தொடங்கியது. இதுதான் அமெரிக்காவால் உருவாக் கப்பட்ட ஓசாமா தலையிலான ஆயுதக் குழு, அமெரிக்காவுக்கு எதிராகவே ஆயுதம் தூக்கத் தயாரானதன் ஆரம்பம் எனலாம். தொடர்ச்சியாக ஈராக் மீது அமெரிக்கா நடத்திய அத்து மீறலும் ஆக்கிரமிப்பும், ஓசாமாவின் ஆயுதக் குழுவுக்கு அமெரிக்காவை தன்னுடைய முதல் எதிரியாக கருத வைத்தது.

மறுபுறம் பலஸ்தீனப் பிரதேசங்களைக் கைப் பற்றி, அந்த நாட்டிலேயே இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்கி, பாலஸ்தீன மக்களை இஸ்ரேல் அடிமையாக்கியதை எதிர்த்து நடந்து வரும் போராட்டங்களாக இஸ்லாமிய அடிப்படை வாதம் அல்லது தீவிரவாதத்தின் கரு இருந்தது. இஸ்ரேல் என்ன செய்தாலும் அதைக் கண்டு கொள்ளாமல், இஸ்ரேலை தொடர்ந்து தட்டிக் கொடுத்த அமெரிக்காவுக்கு எதிராகவும் தீவிரமாக களம் இறங்கினார் ஓசாமா பின்லேடன். இவற்றைத்தான் அவர் அமெரிக்காவின் பரம எதிரியாக மாறியதற்கான நியாயமான காரணங்களாக கொள்ளலாம். பாலஸ்தீன மக்களை அடிமையாக்கிய அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் மீது போர் தொடுக்க அல்கொய்தா என்கின்ற தீவிரவாத அமைப்பை உருவாக்கினார் பின்லேடன்.

நியூயோர்க் இரட்டை கோபுரங்களை அமெரிக்காவின் விமானங்களைக் கொண்டே 2001 செப்டம்பர் 11 இல் தாக்கி அழித்த பின்லேடனை பாகிஸ்தானின் அப்போத்தாபாத் வரை விரட்டி வந்து 10வருடங்களின் பின்னர் வீழ்த்தியுள்ளது அமெரிக்கா. ஓசாமா பின்லேடனின் தீவிரவாதத்திற்கு பலியானவர்களின் எண்ணிக்கை ஆயிரக் கணக்கில் என்றால், தீவிரவாத ஒழிப்பு என்ற பெயரிலும், மக்களாட்சியை மலரச் செய்வதற்கான போர் என்ற பெயரில் அமெரிக்கா நடாத்திய நடாத்தும் நடவடிக்கைகளால் பலியானவர்களின் எண்ணிக்கை பல இலட்சங்களைத் தாண்டும். இதில் யார் மோசமான தீவிரவாதி.......?

ஓசாமா பின்லேடன் கொல்லப்பட்டிருப்பதால் அது அல்கொய்தா இயக்கத்திற்கு ஒரு பின்னடைவே தவிர அது இஸ்லாமிய தீவிரவாதத்திற்கான முடிவுரை அல்ல. மதத்தை, மதவாதத்தை முன் வைத்து செயல்படும் எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் அவ்வளவு எளிதில் நீர்த்துப், போவதில்லை என்கின்ற வரலாறு அல் கொய்தா அமைப்புக்கும் பொருந்தும்.

மேலும் உலக அளவில் குறிப்பாக இஸ்லாமிய நாடுகளில் அமெரிக்காவால், நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே உள்ளது. இது அமெரிக்காவுக்கு எதிரான மனிதர்களின் மனப் போக்கையும் அவர்களின் பழிவாங்கும் எண்ணத்தையும் அதிகரித்துக் கொண்டே உள்ளது.

ஆப்கான் மண்ணில் அமெரிக்காவால் ஊட்டி வளர்க்கப்பட்ட மதத் தீவிரவாதம் இன்று உலகத்தையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி இருக்கும் நிலையில் அதே பாணி செயல்பாடுகளை இன்னும் லிபியா போன்ற நாடுகளில் அமெரிக்கா தொடருவதுதான் கொடுமையிலும் கொடுமை.

ஓசாமா பின்லேடன் எனும் ஒரு தீவிரவாதி, அமெரிக்கா எனும் ஒரு மிகப்பெரிய பயங்கரவாதியால் 10 ஆண்டுகளுக்குப் பிறகு பழிவாங்கப்பட்டுள்ளார் அவ்வளவுதான்...... பயங்கரவாதத்தின் அகோர முகம் அல்கொய்தா வடிவில் மட்டுமல்ல அமெரிக்கா உட்பட்ட பல வடிவங்களில் உலகளாவிய ரீதியில் உலவிக் கொண்டிருக்கிறது இதுதான் இன்றைய நாளின் உண்மை. ●

> “ ஓசாமா பின்லேடன் கொல்லப்பட்டிருப்பதால் அது அல்கொய்தா இயக்கத்திற்கு ஒரு பின்னடைவே தவிர அது இஸ்லாமிய தீவிரவாதத்திற்கான முடிவுரை அல்ல. மதத்தை, மதவாதத்தை முன் வைத்து செயல்படும் எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் அவ்வளவு எளிதில் நீர்த்துப் போவதில்லை என்கின்ற வரலாறு அல் கொய்தா அமைப்புக்கும் பொருந்தும். ”

கோவை நந்தன்

# இயற்கையின் சினத்தால்



கொட்டும் மழை-நீரையும் பெருக்கெடுத்து வரும் வெள்ள நீரையும் எப்படியாவது ஆறு குளங்களிலிருந்து அவசரமாக வெளியேற்றி கடலுக்குள் அனுப்பிவிட வேண்டும் என்பதில் எல்லோரும் அப்போது தீவிரமாக இருந்தார்கள். அதன்படி வான்மழை நீரை வழிந்தோடச் செய்வதற்காக எல்லாக் குளங்களும் திறந்து விடப்பட்டன. இதுவரை இருந்து வந்த இயற்கைவழி முகத்துவாரங்கள் பெருக்கெடுத்துவரும் வெள்ளநீரை வெளியேற்றுவதற்கு போதுமானதாக இருக்கவில்லை. இதனால் எப்படியாவது கரைபுரண்டோடும் நீரை கடலுக்குள் அப்புறப்படுத்த வேண்டும் என்பதில் எல்லா யோசனைகளும் வழி-வகைகளும் கையாளப்பட்டன. கடலை அண்டிய முகத்துவாரப் பகுதிகளில் உயிர்ப் போராட்டத்தின் மத்தியில் புதிய ஓடும் வழிகள் வெட்டித் திறந்து விடப்பட்டன.

கடந்த பெருவெள்ள காலத்தின்போது மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலிருந்து மட்டக்களப்பு நகருக்குள்ளும் அதனை அண்டிய பகுதிகளுக்குள்ளும் பெருக்கெடுத்து வந்த வெள்ளநீரை எல்லா வழிகள் மூலமும் வங்கக் கடலுக்குள் வெளியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மட்டக்களப்பில் இயற்கையாக இருந்து வந்த முகத்துவாரத்திற்குச் சமாந்தரமாக கல்லடி நாவலடிப் பகுதியிலும் வெள்ளநீரை வெளியேற்றும் பாரிய கால்வாய் தோண்டப் பட்டது. அந்தப் பகுதி இப்பொழுது கடலரிப்புக்கு உள்ளாகி சுமார் 200 மீற்றர் தூரம் கடல் நிலப்பகுதிக்குள் ஊடுருவுவதற்குக் காரணமாக அமைந்துவிட்டது. இதனால் நாவலடிப் பகுதிக் கிராம மக்கள் எந்நேரமும் அச்சத்தில் உறைந்து போய் உள்ளார்கள்.

மட்டக்களப்புக்கு தெற்கே உள்ள படுவான்கரைப் பிரதேச மக்கள் வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டதனால்தான் உடனடி நடவடிக்கையாக இந்தப் பாதை வெட்டப்பட்டு ஆற்று நீர் கடலுக்குள் அனுப்பப்பட்டது. ஆனாலும் இதன் போது கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் இந்த நாவலடிக் கிராம மக்கள்தான். இந்த வீதி உடைக்கப்பட்டிருந்த போது நாங்கள் இந்தக் கிராமத்தை விட்டு வேறெங்கும் செல்ல முடியவில்லை. அந்த நேரத்தில் நாளாந்த ஜீவனோபாயத்துக்குக் கூட வழியில்லாமல் திண்டாடினோம்.

மீண்டும் வெள்ளப் பெருக்கு ஏற்படும் பட்சத்தில் எமது கிராமம் துண்டிக்கப்பட்டு விடும் என்ற அச்சம் இன்னமும் எங்களை வாட்டி வதைக்கிறது. அதனால் வானம் இருட்டும் போது பயந்து வாழ வேண்டிய நிலை இருக்கிறது. ஏதும் என்றால் தோணியை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடிப்பதுதான் வழக்கமாக உள்ளது என்று கூறுகிறார் நாவலடியைச் சேர்ந்த மீனவரான சிங்கராசா அன்ரனி. வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட கம்பிகள், மரவேர்கள், கட்டடக் கழிவுகள் போன்றவை இன்னமும் கடலுக்குள் அமிழ்ந்து கிடந்து வலைகளைச் சேதப்படுத்துகின்றன. இந்த வைகாசி, ஆனி மாத காலப்பகுதியில்தான் அதிகமாக மீன்படும் சுமார் 150 குடும்பங்கள் வாழும் நாவலடிக் கிராமத்தில் நூற்றுக்கு தொண்ணூறு வீதமானோர் முழுநேரம் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் ஏனையோர் சுனாமியினால் பாதிக்கப்பட்டு இதன் மறுகரையிலுள்ள

## இடிந்து போயிருக்கும் நாவலடி



(கிருபா—ஜனோ)

திராய்மடுக் கிராமத்துக்கு குடியேறிவிட்டார்கள். பாதைகள் துண்டாடப்பட்டதால் நாவலடிக் கிராம மக்கள் கடும்பாதிப்புகளை எதிர்நோக்கினார்கள். அந்த நேரத்தில் எவரும் சரியான முறையில் உதவி செய்யவில்லை. வெள்ளநேரத்தில் இந்தப் பாதை உடைக்கப்பட்டதனால் சாப்பாடு இல்லாமல் கூட இருந்திருக்கின்றோம்.

சுனாமியினால் தனது மனைவியும் இரண்டு குழந்தைகளும் சுனாமியினால் காவு கொள்ளப்பட்டார்கள் என்று கூறும் அன்ரனி தற்போது கல்லடிக் கடற்கரையோரம் நெடுகிலும் கிடக்கும் குப்பைகளை அகற்றித்தர வேண்டும் என்றும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட தோணிகளுக்குப் பதிலாக தோணிகளைப் பெற்றுத்தர வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறார்.

வெள்ளத்தின்போது சாப்பாடு இல்லாமல் கிடந்த நாங்கள், கறிக்கு கொச்சிக்காய் போட்டுச் சமைப்பது கிடையாது. கடைக்குப் போக முடியவில்லை. தோணி உள்ளவர்கள் மட்டும்தான் கடைக்குப் போனார்கள். 20 நாளைக்குப் பிறகுதான் அரசாங்கத்தினால் பிரதேசபையினுடாக படகுச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதில் மாத்திரம் மக்கள் போக்குவரத்தில் ஈடுபட்டார்கள். இருந்தாலும் மக்களின் கையில் காசு இருக்கவில்லை. அந்த நேரத்தில் யாருக்கும் தொழில் வாய்ப்பும் இருக்கவில்லை. கடலுக்குப் போவோரும் பெருத்த ஆபத்தின் மத்தியில் தான் சென்று வந்தார்கள்.

இப்போது இந்த பாதை உடைக்கப்பட்டுள்ளது. எங்களது வாழ்க்கையை கேள்விக்குறியாக்கியுள்ளது. காரணம் நாவலடிக் கிராம மக்களின் முதுகெலும்பும் வாழ்வாதாரமும் இந்தப் பாதை தான். அதுமட்டுமல்ல சாரதி பயிற்சி பெறுவதற்கு வரும் நூற்றுக்கணக்கானோர் இந்தப் பாதையைத்தான் பயன்படுத்துகிறார்கள். தற்போதுள்ள பாதை நெளிவும் சுளிவுமாக வளைவுகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளதனால் எத்தனையோ வீதி விபத்துக்கள் நடக்கின்றன. கர்ப்பிணித்தாய்மார்களை இந்த பாதையால் கொண்டு போக முடியாது. விழுந்து எழும்பி போகும் நிலையில்தான் இந்தப் பாதை இருக்கிறது.

மட்டக்களப்பு நாவலடிக் கிராமத்தில் இலங்கை அரசாங்கத்தினதும் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் நிதியுதவியுடன் அழகிய முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இரு மாடிகளைக் கொண்ட பாட-சாலைக் கட்டிடம் காடுமண்டிக் கிடக்கிறது. 2004 ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி கடற்பேரலை அழிவுக்குப் பின்னர் கட்டி முடிக்கப்பட்ட இந்தப் பாடசாலை இன்னமும் திறந்து வைக்கப்படாமல் பூட்டப்பட்டு வெளவால்களின் குடியிருப்பாக மாறியிருக்கிறது. நாவலடிக்கிராமத்து மாணவர்கள் தமது ஊரில் இருந்து பல சிரமங்களுக்கு மத்தியில் வாவியைக் கடந்து பாடசாலைக்குச் செல்கின்றார்கள். போக்குவரத்து சிரமங்களினால் பல மாணவர்கள் தமது பாடசாலைக் கல்வியைக் கைவிட்டுள்ளார்கள்.

கடந்த சுனாமிப் பேரழிவின் போதும் மட்டக்களப்பு நாவலடிப் பிரதேசமே முற்றாக அழிந்து அதிக உயிரிழப்புகளைச் சந்தித்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சுனாமி விட்டுச் சென்ற பேரழிவின் தடயங்கள் இன்னமும் மாறாமல் இருக்கின்ற அதேவேளை சமீபத்தில் ஏற்பட்ட பெருவெள்ளமும் நாவலடி மக்களை வாட்டி வதைக்கிறது. □

# பொதுக்கல்வியின் முக்கியத்துவமும் தேசிய நோக்கும்!

[ஏ.எச்.ஏ. ஹுஸைன்]

**166 பிரபல பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் பிரச்சினை உள்ளது, 7003 பாடசாலைகளில் மாணவர்கள் இல்லாத பிரச்சினை, 4000 பாடசாலைகளில் அதிபர்கள் இல்லை, 3000 பாடசாலைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதோடு அந்தப் பாடசாலைகள் இருக்கும் வலயங்களில் உள்ள மாணவர்களது வாழ்க்கையும் கேள்விக்குரியதாகியுள்ளது.**

**2008 ஆம்** ஆண்டு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட புள்ளி விவரம் மற்றும் தகவல்களின்படி முதலாம் ஆண்டிற்கு மாணவர்களைச் சேர்ப்பது தொடர்பான விடயத்தில் ஒரு விண்ணப்பமும் கிடைக்காத 121 பாடசாலைகள் நாட்டில் உள்ளன.

ஒரு பிள்ளைக்கு ஒரு ஆசிரியர் இருக்கும் 14 பாடசாலைகள் காணப்படுகின்ற அதேவேளை ஒரு ஆசிரியர் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களைச் சமாளிக்க வேண்டிய சங்கடமான சூழ்நிலைகளும் உள்ளன. ஒரு ஆசிரியர் மாத்திரம் கடமையாற்றும் 120 பாடசாலைகளும் நாட்டில் உள்ளன.

166 பிரபல பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் பிரச்சினை உள்ளது, 7003 பாட-சாலைகளில் மாணவர்கள் இல்லாத பிரச்சினை, 4000 பாடசாலைகளில் அதிபர்கள் இல்லை, 3000 பாட-சாலைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதோடு அந்தப் பாட-சாலைகள் இருக்கும் வலயங்களில் உள்ள மாணவர்களது வாழ்க்கையும் கேள்விக்குரியதாகியுள்ளது.

இந்த நிலைமையையும் இது போல் பட்டியல் பட்டியலாக நீண்டு செல்லும் பின்னடைவுகளையும் நீக்க வேண்டுமாக இருந்தால் நடைமுறைச் சாத்தியமான கல்விக்கான மாற்று ஒழுங்குகள் செய்யப்பட வேண்டுமென்பது கல்வி ஆர்வலர்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

1939 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு அப்போதைய நிலைமையில் பூரணமான கல்விச் சட்டம் எனக் கருதப்பட்ட கல்விச் சட்டத்தோடுதான் இன்று வரை நாம் இயங்கிக் கொண்டிருக்கின்றோம். எனவே சமகாலத் தேவை பல மாற்றங்களை வேண்டி நிற்கிறது. இது விடயமாக 2010 இல் பொதுக்கல்வி தொடர்பாக உருவாக்கப்பட்ட தேசிய சட்ட வரைவில் பல முன் மொழிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

தேசத்தின் சிறார்களுக்கு கல்விக்கான உரிமையை வழங்கும்போது நியாயம், பண்புசார் தரம் மற்றும் பொருத்தமான கல்வி ஆகிய மூன்று விடயங்களில் எமது கவனம் ஈர்க்கப்பட வேண்டும் என்று கூறுகிறார் பொதுக் கல்விக்கான புதிய சட்டமூலத்தை வகுக்கும் தேசிய குழுவின் தலைவர் கலாநிதி ஜீ.பீ. குணவர்த்தன அவர்கள்.

தேசத்தின் அடையாளத்தைக் கௌரவித்து தேசிய நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வைக். கட்டியெழுப்புவதனை உறுதிசெய்து அதனூடாக இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்ப சகல துறைகளிலும் அபிவிருத்திகளை மேற்கொள்ளும் தேசிய நோக்குடன் பொதுக்கல்வி திட்டமிடப்பட வேண்டும் என்பது இந்தச் சட்டமூலத்தின் நோக்கமாகும்.

ஆசிரியர் தொழில் புரியும் அனைவரும் தமது தொழில்சார் அனுமதிப் பத்திரத்தைக் (லைசென்ஸ்) கொண்டிருக்க வேண்டும், தேசிய நவோதய மற்றும் 1AB ஆகிய பல்வேறுபட்ட பெயர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் வகைப்படுத்தல் ஒழிக்கப்படவேண்டும், நாளொன்றிற்கு வகுப்பில் கற்பிக்கும் நேரம் ஆரம்ப வகுப்புகளுக்காக 5 மணித்தியாலங்களாகவும் இடைநிலை வகுப்புகளுக்காக 6 மணித்தியாலங்களாகவும் இருக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 105 ஆலோசனைகளும் பரிந்துரைகளும் பொதுக் கல்வி தொடர்பான தேசிய சட்ட வரைவு முன்மொழிவில் முன்மொழியப்பட்டுள்ளது. சகல தரப்பினரையும் தழுவக் கூடியவாறு சுபிட்சத்திற்கும், வேலை உலகிற்கும், தாயகத்திற்கும் பொருத்தமான தரம்மிக்க கல்வியை மறுசீரமைத்து அதனைத் தேசத்தின் சிறார்களுக்கு வழங்குவது அனைவரினதும் பொறுப்பாகும்.

தனக்கும் குடும்பத்தினருக்கும் சமூகத்திற்கும் நிலைப்பாட்டுத் தன்மையையும் - பாதுகாப்புத் தன்மையையும் பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் சகல குடிமக்களையும் வலுப்படுத்த வேண்டும். இந்தச் சிறப்புத்தன்மையை கல்வியால் மாத்திரமே பெற்றுக்கொடுக்க முடியும். தனித்தன்மை, மதக்கோட்பாடுகள், தனிப்பட்டவர்களின் பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றிற்கு அடிபணியாமல் முழு வியூகத்தையும் நடு-நிலையாக, சுதந்திரமாகப் பார்க்கும் மனிதர்களாக மாற்றுவதற்கு புதிய கல்விச் சீர்திருத்தத்தின் முன்மொழிவுகள் துணை செய்யும் என கல்வி ஆர்வலர்கள் எதிர்பார்க்கிறார்கள். ■

# அவலம் சுமந்த அகதிகள்

அத்திமுகத்தோன்

அவலம் 29

"நாங்கள் கைவேலி வரைக்கும் வந்து நிற்கிறம். இனி எஞ்சிய இடங்களுக்கும் வந்து நிப்பம். முடியுமானால் இயக்கத்தை நேரில் வந்து அடிபடச் சொல்லுங்கோ. இல்லையெண்டால் சரணடையச் சொல்லுங்கோ..." இராணுவ இளைஞன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு அதிர்ச்சியும் ஆச்சரியமும் கலந்த உணர்வோடு அப்புவும் - அவனும் நின்றார்கள்.

நிலைமை இனித்தான் மிகவும் மோசமடையப் போகுது... என்பதை அவனால் விளங்கிக் கொள்ள முடிந்தது. ஒரு காலத்தில் சிங்கள இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்கி சாப்பாடும், தண்ணீரும் செல்லவிடாது தடுத்த புலிகளின் அன்றைய செயற்பாடுகள் அவன் மனதில் வந்து நின்றன. யாழ். கோட்டை மீதான முற்றுகையை அவன் நினைத்துக் கொண்டான். அன்றைய கள யதார்த்தங்களை இன்றைய நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் பாரிய இடைவெளி விழுந்திருப்பதையும், அது இவ்வாறு தோற்றம் பெற்றுத் துவண்டு விழுந்து போனதற்கு புலிகளின் தலைமைப்பீடத்துக்குள் ஏதோ எங்கோ ஒரு இடத்தில் 'ஓட்டை' விழுந்து விட்டதையும் அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

"என்ன யோசிக்கிறியள்?"

இராணுவ இளைஞனின் குரல் அவர்கள் இருவரையும் சுயநிலைக்குக் கொண்டு வந்தது.

"ஒண்டுமில்லை. நீங்கள் சொன்ன மாதிரியே சொல்லிவிடுகிறம்..." அவன் அவசர அவசரமாகக் கூறிமுடித்தான்.

"இயக்கத்தின் கட்டமைப்பு சீர் குலைஞ்சு போச்சு. இனி இவர்களால ஒண்டும் செய்ய முடியாது. நீங்கள் குடும்பகாரர் எண்டபடியாலும் இயக்கத்துக்கு ஒரு விடயம் சொல்ல வேண்டியிருப்பதாலும், உங்களை நான் உயிரோடை விடுகிறன். திரும்பிப் போற வழியில வேற ஏதாவது 'குரூப்'பிடம் நீங்கள் மாட்டுப்பட்டால் அதற்கு நாள் பாத்திரவாளியல்ல..." என்று கூறிய அந்த இராணுவ இளைஞன், முல்லை -பரந்தன் நெஞ்சாலைக்கு அப்பால் வடக்கே செல்லும் ஒரு கிரவல் வீதியையும் அவ்வீதியின் ஒரு திருப்பத்தில் நிற்கும் வேப்பமரத்தையும் அதற்கப்பால் உள்ள சில இடங்களையும் அந்த இளைஞன் குறிப்பிட்டுச் சொல்லி, அந்தப் பாதையால் போகும்படியும், வேறு பாதைகளில் இராணுவம் நிற்பதாகவும் கூறியபோது, அவன் தனக்குள் பலவாறாக யோசிக்கத் தொடங்கினான்.

தனக்கு முன்பாக இராணுவ சீருடையில் இருந்தபடி... சுத்தமான பிசிறற்றதாக தமிழ் பேசும் இளைஞன் ஒரு முஸ்லிம் இனத்தவனாகவோ அன்றி தமிழ் படித்த சிங்கள இனத்தவனாகவோ இருக்க முடியாது. இயக்கத்தால் ஏதோ ஒரு வகையில் பாதிப்படைந்தவனான இராணுவத்தின் உளவாளியாக அந்த இளைஞன் மாறிவிட்டதையும், வன்னிப் பெருநிலப் பரப்பின் மூலைமுடுக்கெல்லாம் இளைஞனுக்கு அத்துப்படியான விடயம் என்பதையும், அதனால் தான் இராணுவம் இவ்வளவு தூரத்திற்கு முன்னேற முடிந்ததையும் அவனால் ஊகித்துக் கொள்ள முடிந்தது.

தனது சுயநலத்துக்காகவும், சுகபோக வாழ்க்கைக்காகவும் காட்டிக் கொடுப்பவனாக அந்த இராணுவ இளைஞன் இருக்கவில்லையென்பதையும் சற்றுமுன்பு "நாங்களும் பிள்ளைகுட்டி காரர்தான். எங்களுக்கும் மனிதம் எண்டதொண்டு இருக்குது..." என இளைஞன் கண் கலங்கிய நிலையில் கூறியதையும் அவன் நினைத்துப் பார்த்ததோடு 'தமிழன்' என்ற இன உணர்வின் அடிப்படையில் தங்கள் இருவரையும் இம்சைப்படுத்தாது விட்டதையும் அவன் விளங்கிக் கொண்டான்.

"என்ன யோசிக்கிறியள் ரண்டு பேரும்..?" திரும்பவும் அந்த இராணுவ இளைஞன் கேட்டான். அவர்கள் பதில் கூறவில்லை.

"சரி இருட்டிவிட்டது. நீங்கள் இனிப்போக முடியாது. இங்கே இரவு இருந்துவிட்டு நாளைக்கு காலமை நீங்கள் போகலாம். போகேக்கை அவங்களைக் கண்டால் நான் சொன்னதை மறக்காமல் சொல்ல வேணும். சரியா...? அந்த இளைஞன் கூறிவிட்டு எழுந்து தரப்பாள் முகாமின் வாசலுக்கு வந்தான். சிங்களத்தில் ஏதோ மெதுவாகக் கூறினான். இரண்டு இராணுவச் சிப்பாய்கள் அவனருகில் வந்து நின்று கொண்டு அவன் சொல்வதை உற்றுக் கேட்டார்கள். இளைஞன் திரும்பி முகாமுக்குள் வந்தான். அவர்களும் உள்ளே வந்தார்கள்.



அப்புவும் - அவனும் அவர்களை கூர்ந்து கவனித்த போது, தங்களை முதன் முதலில் பிடித்து தாக்கிய இருவரும் என்பது தெரியவந்தது.

"ஆ... அப்பு கொகெமத...? சிப்பாய்களில் ஒருவன் அவரைச் சீண்டிப் பார்க்க விரும்பினான், அப்பு எதுவும் கூறவில்லை. வாய்க்குள் உடைந்த பல்லின் வலி இன்னமும் குறையாத நிலையில், சிப்பாய்க்கு பதில் ஏதும் கூறத் தோன்றாது மௌனமாக நின்றார்.

திரும்பவும் அந்த இராணுவ இளைஞனோடு சிப்பாய்கள் இருவரும் வெளியேறினார்கள். வெகுநேரமாக நின்றதால் கால்கள் வலியெடுக்க அவன் அந்த இடத்திலேயே குந்தினான். அவன் இருந்ததைக் கண்டதும் அப்புவும் அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்தார்.

தரப்பாள் முகாமுக்குள் ஒரு மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருந்தது. மெழுகுவர்த்தியின் வெளிச்சம் அருகில் இருப்பவர்களுக்குத் தெரியாதபடியாக தரப்பாள் முகாமின் யன்னல் மற்றும் கதவு மறைப்புகள் யாவும் சீராக இழுத்து மூடப்பட்டிருந்தன. முகாம் அறையின் ஒரு மூலையில் கடதாசிப் பெட்டிகள் அடுக்கப்பட்டிருந்தன. வெளியே மெல்லிய ஒலியில் சிங்கள மொழியிலான வார்த்தைகள் பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தன. அப்புவுக்கு உடல் அசதியாக இருந்தது. அவனுக்கு தன் மனைவி, பிள்ளையின் நினைவு எழுந்தது. மாத்தளனுக்குப் போவதாகக் கூறிவிட்டு இரவாகி இவ்வளவு நேரத்திற்குப் பின்பும் தன்னைக் காணவில்லையென்றால், நிச்சயமாக மனைவி, மச்சாள், சகலன் எல்லோரும் குழப்ப நிலைக்கு - ஆளாகுவார்கள்... என்று அவன் நினைக்கத் தவறவில்லை.

"எட பொடியா! என்னடாப்பா யோசிக்கிறாய்...?" என்று கேட்டபடி அப்பு சரிந்து படுத்துக் கொண்டார்." அப்புவை நினைக்க அவனுக்குச் சிரிப்பு வந்தது. மாத்தளனுக்குப் போக வேண்டிய தன்னை, அப்புவின் வடிவத்தில் வந்த தனக்கான விதியை நினைத்துச் சிரித்துக் கொண்டான். ஏதோ ஒரு சக்தி ஒரு வடிவில் ஒருவனை இயக்கும்... என்பதை அறிந்திருந்த அவன், சில உண்மைகளை தெரிந்து கொள்வதற்காக தன்னை எப்படியெல்லாம் வழிநடத்திக் கொண்டு வந்திருக்கிறது... என்பது விளங்கியது அவனுக்கு.

"ஒண்டுக்கும் யோசிக்காமல் பேசாமல் படு." அப்பு, மீண்டும் கூறுகிறார். அவன் திரும்பி அப்புவைப் பார்த்தான். அதேசயம்... அந்த சிங்கள இராணுவ இளைஞனின் முகமும் நினைவுக்கு வந்தது.

அவர்கள் நினைத்திருந்தால் சுட்டிருக் கலாம்; அல்லது உயிரோடு தீமூட்டி எரித்திருக்கலாம்; சித்திரவதைகள் பல செய்திருக்கலாம்...? ஆனால் ஒன்றும் செய்யவில்லை. அவனுக்கு அதை நினைக்கக் குழப்பமாக இருந்தது. இளைஞன் கூறியது போன்று, தாங்கள் வந்திருப்பதான செய்தியை இயக்கத் திடம் போய் சொல்வதற்காகத்தான் சுடாமல் விட்டார்களோ அல்லது பொதுமக்கள் இருவரைச் சுடுவதால், புலியள் பணிந்துவிடப் போவதில்லை என்று நினைத்தார்களோ?

அப்படியாயின் அகதிகள் பரவலாகச் செறிந்து வாழும் இடத்தில் ஏன் தாக்குதலை நடத்தினார்கள். இப்பொழுதும் ஏன் நடத்துகிறார்கள் என்பது புரியவில்லை அவனுக்கு.

அப்பு சற்று கண்ணயர்ந்திருந்தார். அவரிடமிருந்து சீரான சுவாசம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. இராணுவ இளைஞனின் வார்த்தைகள் அவருக்கு சற்று நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். இல்லாவிட்டால், பொறிக்குள் அகப்பட்ட நிலை தெரிந்தும், இப்படிச் சாதாரணமாக துயில் கொள்ளமாட்டார்.

அவனுக்கு வீட்டாரின் ஞாபகம் வந்து மனதை உபத்திரவப்படுத்திக் கொண்டிருந்தது. தூக்கம் வரமறுத்த நிலையில், அவனும் அப்புவுக்குப் பக்கத்தில் சரிந்து கொண்டான். படுக்கும் போது நெஞ்சின் வலி கனதியா-கத் தெரிந்தது. A.K. துப்பாக்கியின் அடிப்பாக இரும்புச்சட்டமானது நெஞ்சில் பலமாகத் தாக்கியுள்ளதை வலியின் கனத்தில் இருந்து புரிந்துகொள்ள முடிந்தது.

இராணுவ இளைஞன் கூறியுள்ளது போன்று, நாங்கள் வேறு ஒரு 'குறூப்'பிடம் அகப்பட்டிருந்தால்... அவன் திரும்பி அப்புவைப் பார்த்து விட்டுத் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

வன்னிப் போர்க்களம் பலரது தலைவிதியை நிர்ணயிக்கக் காத்துக் கொண்டிருப்பாகத் தெரிந்தது. கைவேலிக் காட்டுக்குள் இராணுவம் நிற்பது தெரியாமல் முல்லை - பரந்தன் நெஞ்சாலையில் இடம்பெயர்ந்து செல்லும் வாகனங்கள்... ஒருசில பொதுமக்கள்... காட்டுக்குள் அமைதியாய் இருக்கும் இந்த இராணுவம் முன்னேற முயற்சிக்கும் போது... எவ்வளவு உயிரிழப்புக்கள் ஏற்படப் போகின்றன... என்பதை அவன் உணர்ந்து கொண்ட போது, இரணைப்பாலையிலும் தற்போது இருப்பது உசிதமானதல்ல என்பதையும், வீட்டை போன பின்பு, குடும்பத்தைக் கூட்டிக் கொண்டு மாத்தளனில் உள்ள மாமி வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டான்.


புதுஇடத்தில், காற்றுப் புகாத நிலையில் உள்ள தரப்பாள் முகாமுக்குள் படுத்திருக்க அவனுக்குச் சிரமமான தாகவே இருந்தது. தலைக்கு கையை மடித்து வைத்திருந்த நிலையில் கண்களை மூடியபடி, பல்வேறு சிந்தனைகளோடு அப்படியே அவன் உறங்கிப் போனான்.

மறுநாள் காலை காட்டுக்குள்ளிலிருந்து இராணுவத்தினர் ஏவிய ஷெல்லொன்று விண்ணதிரக் கூவிக் கொண்டு சென்ற போதுதான், திடுக்கிட்டு கண்விழித்ததும், எழுந்து வந்து தரப்பாள் வாயிலின் திரைச்சீலையை சற்று நீக்கி வெளியே பார்த்தான்.

(அவலம் தொடரும்...)

**"வன்னிப் போர்க்களம் பலரது தலைவிதியை நிர்ணயிக்கக் காத்துக் கொண்டிருப்பாகத் தெரிந்தது. கைவேலிக் காட்டுக்குள் இராணுவம் நிற்பது தெரியாமல் முல்லை - பரந்தன் நெஞ்சாலையில் இடம்பெயர்ந்து செல்லும் வாகனங்கள்... ஒருசில பொதுமக்கள்... காட்டுக்குள் அமைதியாய் இருக்கும் இந்த இராணுவம் முன்னேற முயற்சிக்கும் போது... எவ்வளவு உயிரிழப்புக்கள் ஏற்படப் போகின்றன... என்பதை அவன் உணர்ந்து கொண்ட போது, இரணைப்பாலையிலும் தற்போது இருப்பது உசிதமானதல்ல என்பதையும், வீட்டை போன பின்பு, குடும்பத்தைக் கூட்டிக் கொண்டு மாத்தளனில் உள்ள மாமி வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டான்."**





**பொழுது** சாயும் நேரம்...

புல்வெளியில் கூட்டமாக நின்று மேய்ந்து கொண்டிருந்த மான்கள், தங்கள் மேய்ச்சலை முடித்துக் கொண்டு இருப்பிடம் நோக்கி கிளம்பின. சிரித்துப் பேசியபடி வந்து கொண்டிருந்த மான்களின் பேச்சும், நடையும் சட்டென நின்றது. அவற்றின் பார்வை மரத்தடியில் அழுதுகொண்டிருந்த இரண்டு சின்னஞ்சிறு புலிக்குட்டிகள் மீது நிலைத்தது.

மான்கள் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டனவே தவிர, அருகில் செல்லவில்லை. ஆனால், இளம் வயது மான் ஒன்று புலிக்குட்டிகளை நோக்கி செல்லத் தொடங்கியது.

அதைப் பார்த்த தலைமை மான், "அவற்றின் அருகே செல்ல வேண்டாம் குழந்தை" என்று எச்சரித்தது.

"புலிகள் அபாயகரமானவை. நம்மை அதன் இனத்திற்கு இரையாக்க இந்தப் புலிக் குட்டிகள் பாசாங்கு செய்யலாம். அதன்மேல் பரிவு வேண்டாம்" தடுத்தது இன்னொரு மான்.

குட்டிகளின் கண்ணீர் பாசாங்காகத் தெரியவில்லை. ஏதோ ஒரு ஆழ்ந்த துயரம் இருப்பதாகவே தெரிந்தது.




# உதவியின் உத்தமம்!

எனவே, சக இனத்தவரின் பேச்சை காதில் வாங்கிக் கொள்ளாமல் புலிக்குட்டிகளின் அருகே சென்றது அந்த மான்.

"ஏன் அழுகிறீர்கள்?" புலிக்குட்டிகளைப் பார்த்து பரிவுடன் கேட்டது மான்.

"எங்கள் அம்மா அந்த புதருக் கடியில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறார். தயவுசெய்து எங்கள் அம்மாவைக் காப்பாற்றுங்கள் அண்ணா" இரண்டும் கதறின.

'சரி வாருங்கள்' மான் வேகமாக புதரை நோக்கிச் சென்றது. புலிக்குட்டிகள் அதன் பின்னே ஓடின. அங்கு, புலியின் கழுத்திலிருந்து இரத்தம் போய்க் கொண்டிருந்தது. குட்டிகளோடு உருண்டு புரண்டு விளையாடியதில், மண்ணில் புதைந்திருந்த கண்ணாடித் துண்டு அதன் கழுத்தில் ஆழமாய்க் குத்தியிருந்தது.

உடனே துரிதமாய் செயலில் இறங்கியது இளம்வயது மான். ஓடிச்சென்று பச்சிலைகளைப் பறித்து வந்தது. புலியின் அருகே சென்று, அதன் கழுத்தில் இறங்கியிருந்த கண்ணாடியை வெளியில் எடுத்ததும், பச்சிலையின் சாற்றை காயத்தில் விட... இரத்தம் வருவது நின்றது. அதுவரை வலியில் துடித்துக் கொண்டிருந்த புலி, ஓரளவுக்கு வலி குறைந்ததும் எழுந்து அமர்ந்தது.

"மான் அண்ணா, இந்த வழியாகக் காட்டெருமைகள், வரிக்குதிரைகள் எல்லாம் சென்றன. எல்லோரிடமும் எப்படிக் கெஞ்சினோம் தெரியுமா? யாருமே எங்கள் அம்மாவைக் காப்பாற்ற முன்வரவில்லை. நீங்கள் மட்டும்தான் உங்களுடைய இனத்தின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் எங்கள் அம்மாவைக் காப்பாற்ற முன்வந்தீர்கள். ரொம்ப நன்றி அண்ணா! அமைதியாய் அவற்றின் தலையை வருடிக்கொடுத்தது.

"உன் இனத்தை நாங்கள் தான் கொன்று தின்போம் என்று தெரிந்திருந்தும், என்னைக் காப்பாற்ற உன்னால் எப்படி முடிந்தது?

"நீங்கள் என் இனத்தை வேட்டையாடுபவராக இருக்கலாம். அதேசமயம், இப்போது நீங்கள் இந்தப் புலிக்குட்டிகளின் தாய். ஒரு தாயாகத்தான் நான் உங்களைப் பார்த்தேன். தாயின் இழப்பு எத்தகைய மீளாத்துயரம் என்பது அதை அனுபவிப்பவர்களுக்குத்தான் தெரியும். நான் படும் கஷ்டத்தை இந்தக் குட்டிகளும் அனுபவிக்கக் கூடாது என்பதற்காகத்தான் உங்களைக் காப்பாற்றினேன்" என்றது மான். அதன் பெருந்தன்மையை எண்ணி புலியும், அதன் குட்டிகளும் வியந்தன.

---

மின்மினிப் பூச்சி எவ்வளவு ஒளியுடன் திகழ்ந்தாலும் அது தீ ஆகாது.

சாணக்கியர்

## வாரம் ஒரு திருக்குறள்



சான்றாமை

**குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**
**எந்நலத்து உள்ள தூஉம் அன்று.**

சான்றோரின் நலம் என்று கூறப்படுவது அவருடைய பண்புகளின் நலமே; மற்ற நலம் வேறு எந்த நலத்திலும் சேர்ந்துள்ளதும் அன்று.

குறள்:982

# அதிசயங்கள்




## கிசா பிரமிட் - எகிப்து

'பாரோ' எனப்படும் பழைய எகிப்திய அரச வம்சத்தைச் சேர்ந்த வர், 'குபூ' என்ற மன்னர். இவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தின்மீது எழுப்பப்பட்ட மிகப் பிரமாண்டமான கல்லறை இது.


நான்கு பக்க அமைப்பு கொண்ட இந்தப் பிரமிட், முழுவதும் கற்களால் வடிவமைக்கப்பட்டது. ஒரு நாட்காட்டி போலவே இந்தப் பிரமிட் கட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதை வைத்தே ஆண்டுகளின் அளவைக் கணக்கிட்டுக் கொள்ள முடியுமாம்.

## தொங்கும் தோட்டம் - பாபிலோன்



'யூப்ரடிஸ்' என்ற நதியின் கிழக்குக் கரையோரத்தில் அமைந்த இந்த தொங்கும் தோட்டம், கி.மு. 605ஆம் ஆண்டளவில் இரண்டாம் நெபுசட் நிசார் என்ற மன்னரால் உருவாக்கப்பட்டது. பக்கவாட்டில் அடுத்தடுத்து எழுப்பப்பட்ட சுவர்களினால் கட்டப்பட்ட ஒரு மாளிகையின் மேல்தளத்தில் இந்தத் தோட்டம் அமைக்கப்பட்டது. பெர்சிய நாட்டைச் சேர்ந்த தனது மனைவி அபிடிஸ்சின் நினைவாக நெபுசட் மன்னர் இதை உருவாக்கி இருக்கலாம் என்று வரலாறுகள் தெரிவிக்கின்றன.

## ஜீயஸ் சிலை - ஒலிம்பியா (கிரீஸ்)



வேலைப்பாடுகள் மிகுந்த சிம்மாசனத்தின் மீது வைக்கப்பட்டுள்ள இந்தச்சிலை, கிரேக்கர்களின் தலைமைத் தெய்வமாகும். அடித்தளத்தில் இருந்து இதன் உயரம் 40 அடி, அகலம் 20 அடி. எதென்ஸ் நாட்டைச் சேர்ந்த பிடியாஸ் என்ற சிற்பியின் கைவண்ணத்தில், கி.மு. 435ஆம் ஆண்டு இந்தச் சிம்மாசனம் வடிவமைக்கப்பட்டது. கருங்காலி மரம் மற்றும் யானைத் தந்தத்தால் உருவாக்கப்பட்ட இது, விலை உயர்ந்த கற்கள் மற்றும் தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டது. இந்த தெய்வத்தின் நினைவாகத் தான் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

---

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 25.05.2011

வர்ணம் தீட்டும் போட்டி இல.889
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 887**

**பரிசுக்குரியவர்:** ச.தபிஷன், 74/1 பத்திரகாளி கோவிலடி, வண்ணார்பண்ணை.

பாராட்டுக்குரியவர்கள்

01. அ.சோபிகன், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி
02. ஞா. லக்ஸ்சனா, கைதடி வடக்கு, யாழ்ப்பாணம்.
03. கோ.சீராளன்,கடற்கரைவீதி, திருகோணமலை.
04. எஸ்.கவிதன், கொழும்பு-06.
05. கே.ஜமுனன், பாரதிலேன், வவுனியா.
06. ச.சபீனன்,பேசாலை, மன்னார்.
07. யோ.கயல்வாணன், வாழைச்சேனை, மட்டக்களப்பு.
08. த.பரிமளா,மூளாய் மேற்கு, சுழிபுரம்.

---

**அதிகளவில்** புரதம் மற்றும் கொழுப்பைக் கொண்டது முட்டை. இதன் வெள்ளைக்கரு 17கலோரியும், மஞ்சள்கரு 59 கலோரியும் கொண்டது. சமைக்கும் முறையைப் பொறுத்து, கலோரிகளின் அளவு மாறுபடும். உடலுக்குத் தேவையான அனைத்து வகையான விற்றமின்களும் (ஏ, பி, சி, டி, இ) இதில் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, தைராய்ரோயிட் ஹோர்மோன் சுரப்பதற்குத் தேவையான அயோடின், பற்கள் மற்றும் எலும்புகளின் ஆரோக்கியத்துக்கு தேவைப்படும் பொஸ்பரஸ் போன்றவையும் முட்டையில் உண்டு. காயங்களைக் குணமாக்குவதற்கும் நோய் எதிர்ப்புச்சக்திக்கும் தேவைப்படும் துத்தநாகம் என்னும் தாதும் இதில் உண்டு.

# முட்டையில் இருப்பது என்ன?




## பொருத்துங்கள்

எண்கள் உள்ள கட்டங்களில் வர வேண்டிய படத்துண்டுகள் தனித்தனியாக இருக்கின்றன. சரியாக கண்டுபிடித்து பொருத்துங்கள்.




## பென்டிரைவ் மூலம் பரவும் வைரஸ்களைத் தடுக்க...




**தற்பொழுது** பென்டிரைவ் மூலமாக பரவும் வைரஸ்களின் தொல்லை மிகவும் அதிகமாக உள்ளது. இதனை தடுக்க ஒரு இலவச மென்பொருள் உள்ளது. USB Firewall எனப்படும் இந்த மென்பொருளை உங்கள் கணினியில் நிறுவிக் கொள்ளவும். அதன் பின் எந்தவொரு பென்ட்ரைவையும் கணினியுடன் இணைக்கும் பொழுது, இந்த மென்பொருளானது அதுவாகவே பென்ட்ரைவை ஸ்கேன் செய்துவிடும்.

கணினியில் நுழைய முயற்சிக்கும் கோப்புகளை தடுத்து நிறுத்தும். (முக்கியமாக Autorun.inf) உங்கள் கணினியில் வேறு அன்டி வைரஸ் மென்பொருள் நிறுவப்பட்டிருந்தாலும் அதனோடு இதையும் உபயோகப்படுத்தலாம்.

## மடிக்கணினிகளை வாங்கும் போது கவனிக்க வேண்டியவைகள்



**இன்றைய** தொழில்நுட்ப உலகில் மடிக்கணணிகளை பயன்படுத்துபவர்கள் ஏராளம். ஏனெனில் எங்கு சென்றாலும் நாம் அதை எடுத்துச் சென்று பயன்படுத்த முடியும்.

நமது வேலைகளும் தடைப்படாமல் இருக்கும். கடைகளிலிருந்து மடிக்கணினிகளை வாங்கும் போது கவனிக்க வேண்டியவைகள்:

கடைக்காரரிடம் அவை Unlock செய்யப்பட்டுள்ளதா என்று முதலில் கேளுங்கள். திடமான, உறுதியான ஆனால் பாரமில்லாத மடிக்கணினிகளை தெரிவு செய்யுங்கள். கீபோர்ட்டை உபயோகித்துப் பாருங்கள்.

உங்களுக்கு அது சௌகரியமாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். மேசை மற்றும் உங்கள் மடி மீது வைத்து இயக்கி பரிசோதித்துப் பாருங்கள்.

Ointing Device, Track Pad போன்றவற்றையும் மாற்றீடாக உள்ள Tiridயும் பரிசோதித்துப் பார்க்க மறக்க வேண்டாம். Track Ball, External mouse களை நீங்கள் பயன்படுத்த முடியும்.

ஆனால் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு அது உகந்ததல்ல. மடிக்கணினி பயன்பாட்டில் இருக்கும் போது அளவுக்கதிகமாக சூடாகிறதா என்று அவதானியுங்கள்.

ஒருவேளை உங்கள் மடியில் வைத்துப் பாவிப்பதாலும் இந்தப் பிரச்சினை எழக்கூடும். Screenஇன் அளவு மற்றும் Resolution போன்றவை மீதும் கவனத்தை செலுத்துங்கள். தற்போதைய LCD Screenகள் 13 முதல் 21 இஞ்சி அளவுகளில் கிடைக்கின்றன.

Screen Resolution மிகக் குறைந்தது 800-600 pixels முதல் 1600-1200 pixels வரை இருக்கக்கூடும். பலதரப்பட்ட Settingsகளை செய்து Screen ஐப் பார்வையிடுங்கள்.

சாதாரண அறையினுடைய வெளிச்சத்தில் நன்றாகத் தெரியக்கூடிய Settings அதிக வெளிச்சம் அல்லது குறைந்த வெளிச்சத்தில் மிக மோசமாகத் தெரியக்கூடும்.

USB2 மற்றும் Firewire Connection இருக்கக்கூடிய மடிக்கணணிகளைத் தெரிவு செய்யுங்கள். இவை Pods, Digital iPods, Digital கமெராக்கள் மற்றும் சில கைத்தொலைபேசிகளை இணைக்க செய்வதற்கு பயன்படுகின்றன.

இணைய இணைப்புகளைப் பெறுவதற்கு வயர்களைப் பயன்படுத்துவதைவிட Wireless Network Card பயன்படுத்தலாம். Bluetooth இணைப்பு இருப்பின் அதுவும் சிறந் தது-தான். DVD Burner உள்ளதா என்பதையும் அவதானியுங்கள்.



**53**

# திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு

எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலை காரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் பிரசுரிக்கப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது.

"கால்வலிக்கிறதா?" என்றான் மல்லா. வலிக்கிறது என்று சொன்னால் தோளில் போட்டுத் தூக்கிக்கொண்டு போவீர்களாக்கும் என்று நினைத்தேன். கேட்கவில்லை.

"இல்லை சும்மா கேட்டேன்!"

"பக்கத்திலேதான்!" என்றான் மல்லா. நானும்தான் பக்கத்தில் இருக்கின்றேன் என்று நினைத்தேன். சொல்லவில்லை.

நடு இரவான போது மலைக்குன்றுகள் நிறைந்த ஒரு பகுதிக்கு வந்து சேர்ந்தோம்.

அங்கேயே கூடாரம் அமைத்தார்கள். கொண்டு வந்த உணவைப் பிரித்து எல்லோரும் பங்கிட்டுச் சாப்பிட்டு முடித்தோம்.

அன்றிரவு கூடாரங்களுக்கு வெளியே யார் யார் காவல் பார்ப்பது என்பதை மாது சிங் கூறினான். அவன்தான் லெப்டினன்ட். இதெல்லாம் அவனது வேலைகள்தான் என்று தெரிந்துகொண்டேன்.

தூங்கச் செல்ல முன்னர் அனைவரையும் ஒரே இடத்திற்கு வருமாறு அழைத்தான் மல்லா.

மல்லா ஒரு கல்லின் மேல் அமர்ந்திருந்தான். அவன் இருபுறமும் லெப்டினன்ட்கள் பாரத்சிங்கும், மாதசிங்கும் நின்றிருந்தனர்.

"பாபுசிங் குஜார் தலைவராக இருந்துபோது சாதி சொல்லியே நம்மைப் பிரித்து வைத்திருந்தார். இனிமேல் நமக்குள் சாதி பார்ப்பது வேண்டாம். இனிமேல் நாம் கொள்ளையடிக்கப்போவது கூட பெரிய இடங்களாக இருக்கட்டும். பெண்கள் விடயத்தில் நாங்கள் மிருகங்கள்போல் நடந்துகொள்ளக் கூடாது. விரும்பி வந்தால் எடுத்துக்கொள்ளுங்கள். அனுபவியுங்கள். நான் தடுக்கப்போவதில்லை. கட்டாயப்படுத்துவதோ குற்றமாகக் கருதப்படும். அப்படி யாராவது குற்றம் செய்தால்..."

நிறுத்திவிட்டு எல்லோரையும் ஒருமுறை பார்த்தான் மல்லா. இருட்டிலும் அவனது கண்கள் பளபளத்தன. குரலை உயர்த்திக் கண்டிப்பான தோரணையில் சொன்னான் மல்லா.



"நான் மன்னிக்கவே மாட்டேன். சுட்டுவிடுவேன்!" போய்த்தூங்குங்கள். பொலிஸ் மோப்பம் பிடித்துத்திரிகிறது. காவலுக்கு இருப்பவர்கள் தூங்கிவிடக்கூடாது. நான் இடைக்கிடையே கவனிப்பேன்!"

"மல்லா நீதான் ஐயா தலைவன்" என்று உரத்துக் கூவலாமா என்று ஆசையாக இருந்தது.

எல்லோரும் கலைந்து போன பின்னர் மல்லா என்னை அழைத்தான்.

"பிடித்திருக்கிறதா?" என்றான். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

பிடித்திருக்கிறதா என்று மல்லா கேட்டதும் எனக்குத் திகைப்பாக இருந்தது. எதிர்பாராத சந்தோசமும் திகைக்க வைத்து விடும் தானே?

"ம்" என்றேன் வெட்கத்துடன்.

"எங்கள் கோஷ்டியில் நீ மட்டும்தான் ஒரு பெண். ஒருவேளை எங்களைப் பிடிக்காமல் இருந்தால் தைரியமாக வீட்டில் சேர்ப்பிப்பது என் பொறுப்பு!" என்றான் மல்லா.

பிடித்திருக்கிறதா என்று கேட்டது இதனைத்தானா? பொத்துக்கொண்டு கொட்டிய மழை சட்டென்று நின்றுவிட்டது போல், என் மனம் காய்ந்துபோனது.

"என்ன யோசிக்கிறாய்?" என்றான் மல்லா.

"ஒன்றுமில்லை. நான் உங்களோடு இருப்பது யாருக்காவது பிடிக்கவில்லையா?" என்று கேட்டேன். கேட்கும்போது அழுகை வந்துவிட்டது.

"சேச்சே.. அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது."

நான் மல்லா முகத்தைப் பார்த்துவிட்டு, பார்வையை விலக்கி, அவன் கையில் இருந்த துப்பாக்கியைப் பார்த்துக்கொண்டே சற்றுக் குரலை உயர்த்திச் சொன்னேன்; "அப்படி விருப்பமில்லையென்றால் சொல்லிவிடுங்கள், நான் போய்த்தொலைந்து விடுகிறேன்."

மல்லாவின் முகத்தை என் கண்களை மேலே உயர்த்திப் பார்த்தேன். மல்லா என்னையே பார்த்துக்கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் அமைதி நிலவியது.

பின்னர் மல்லா திடமான குரலில் சொன்னான்.

"இனிமேல் நான் அப்படிக் கேட்கமாட்டேன். இப்போது சந்தோசம்தானே?"

"சந்தோசம் என்றேன் கண்களைத் துடைத்துக்கொண்டு.

அடுத்து என்ன பேசுவதென்று தெரியவில்லை. மல்லா மட்டும் எதிரில் இல்லையென்றால் அவனுடன் என்னவெல்லாமோ பேச வேண்டும் என்று எண்ணங்கள் தோன்றும். இப்போது என்னால் மல்லாவின் முகத்தை நேரடியாகப் பார்க்க முடிந்தது.

"என் பெரியப்பாவின் மகன். பணத்திமிர் பிடித்த நாய். நானும் என் குடும்பமும் சீரழியவைத்த பாவி! கொடும்பாவி!"

"என் குரலில் இருந்த சீற்றத்தைக் கண்டு மல்லாவின் முகத்தில் வியப்புத் தெரிந்தது.

"மையாதீன் சொல்லித்தான் பாபுசிங் உன்னைக் கடத்திவந்தான்" என்றான் மல்லா.

மல்லா சொன்னது எனக்குப் புதிய செய்தி. ஆனாலும் நான் ஆச்சரியப்படவில்லை. மையாதீன் செய்யக் கூடியவன்தான்.

"உங்களுக்கு அவனைத் தெரியுமா?"

"தெரியும், பழக்கமில்லை. மையாதீனுடன் உனக்கென்ன அவ்வளவு கோபம்?"

(திருப்பங்கள் தொடரும்...)


# ஆர்யாவின் திடீர் குழப்பம்

கிட்டதட்ட ஒன்றரை வருட காலத்திற்கு திடீர் வெற்றிடம் ஆகியிருக்கிறது, ஆர்யாவின் இந்த இடைவெளிக்கு அவரின் வரிசையாக அவர் ஒப்புக் கொண்ட படங்களின் வரிசை திடீர் குழப்பம் தான் காரணம். லிங்குசாமியின் வேட்டை படத்தை முடித்துவிட்டு பிரபுசாலமன் இயக்கும் படத்தில் நடிப்பதாக இருந்தார். அதை லிங்குசாமியே தயாரிப்பதாக இருந்தது. ஆனால் மைனாவையே இந்தியில் இயக்கிக் கொடுங்களேன் என்றார்களாம். அவர் இந்தி படிக்க போய்விட்டார்.

அப்புறம் மிஷ்கின் படத்தில் நடிக்க சம்மதித்திருந்தார். அந்த படமும் பட்ஜெட் காரணமாக இழுபறியில் தள்ளாட இடையில் மிஸ்கின் - சிம்பு சந்திப்பு நடந்திருக்கிறது. எனவே ஆர்யா -மிஸ்கின் இப்போது இல்லை என்றாகிவிட்டது. இவ்வளவுக்கு இடையிலும் தானாக ஆர்யாவே போய் கேட்ட வாய்ப்பு தான் பொன்னியின் செல்வன். இந்த ஒரு காரணத்துக்காகவே ஆர்யாவை ராஜா வாக்கினார் மணிரத்னம். கடைசியில் அந்த படமும் கைவிடப் பட்டதாக தகவல். ஆனால் ஆர்யா யாரை கை காட்டினாலும் அவருக்கு பணம் ரெடி என்று பண மூட்டையோடு கோடம்பாக்கத்தை சுற்றி வருகிறார்கள் முதலீட் டாளர்கள். ஆர்யாவுக்கு பிடிச்சிருந்தா உடனே முன்பணம் கொடுத் திடலாம் என்று சுற்றி சுற்றி வருகிறார்கள் தயாரிப்பாளர்.



# சைக்கோ வில்லனாக விவேக்



சைக்கோ வில்லன் வேடத்தில் நகைச்சுவை நடிகர் விவேக் நடிக்கிறார். இதுகுறித்து அவர் கூறுகையில், 25 வருடங்களில் தமிழ், மலையாளத்தில் 450 படங்களில் நடித்து விட்டேன். இப்போது பெயரிடப்படாத படம் ஒன்றில் சைக்கோ வில்லன் வேடத்தில் நடிக்கிறேன். காமெடி பாணியிலிருந்து விலகி, வித்தியாசமாகச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் இந்த கேரக்டரை தேர்வு செய்தேன். மிதுன் ஹீரோ. அன்புச்செழியன் இயக்குகிறார். மலைப்பகுதிகளில் ஷீட் டிங் நடக்க உள்ளது. இதற்காக எனது கெட்டப்பை மாற்றுகிறேன். இதற்குமுன் நடித்த எந்த நடிகரின் சாயலும் இல்லாமல், வில்லன் வேடம் ஏற்றுள்ளேன். எனக்குள் எப்படி சைக்கோத்தனம் புகுந்தது, ஏன் வில்லன் ஆனேன் என்பதற்கான காட்சி புதுமையாக இருக்கும்.

# மெய்சிலிர்க்கும் தம்பி ராமையா!

மைனாவில் நடித்த பிறகு படத்தின் நாயகனுக்கு இணையாக பேசப்பட்டார் தம்பி ராமையா. படத்தைப் பார்த்த ரஜினியே, தம்பி ராமையாவை பெரிதும் பாராட்டியிருந்தார். சினிமாவில் எத்தனையோ படங்களில் நடித்திருந்தாலும் என்னை பற்றி பேச வைத்தது "மைனா" படம்தான் என நகைச்சுவை நடிகரும், இயக்குநருமான தம்பி ராமையா கூறினார். நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டியில், "இந்த படத்திற்கு பின் அதிகளவு ரசிகர்கள் என்னை தொலைபேசி மூலமும், நேரடியாகவும் வாழ்த்து தெரிவிக்கின்றனர் ரசிகர்கள். இப்போது கழுகு, கள்ள சிரிப்பழகா, வாகை சூடவா, வேங்கை உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறேன்."



# பட[illegible]கிற

உலகம் முழுவது
பக்தர்களை கொண்
இவர், கடந்த 24
மறைந்தார். சிறுவ
மிகுந்த ஈடுபா
பிரசாந்தி நிலை
நடத்தினார். அ
சேவைகளிலும்
பின்தங்கிய கிராமப

# பொரிந்து தள்ளுகின்றா[illegible]

தமிழ் படங்களில் கவனம் செலுத்துவதில்
என்கிறார்கள். நல்ல கதை[illegible] வரும்
நடித்துக் கொண்டுதான் இருக்கி[illegible]. இந்தி
'ரெடி' படம் நடித்துள்ளேன். தமிழில் வெளிய
'உத்தமபுத்திரன்' தான் இந்தியில் ரீமேக் ஆ
தமிழில் ஜெனிலியா ஹீரோயினாக நடித்திரு
அவரைப்போல் நீங்கள் நடித்திருக்கிறீர்களா?
கேட்கிறார்கள். அதற்கு அவசியமே இல்லை.
ஏற்ற கேரக்டரை முற்றிலுமாக மாற்றி இருக்கிற
சீன்கள், திரைக்கதை மற்றும் கேரக்டரின் தன்
என்று படம் முழுவதுமே மாற்றம் செய்யப்பட்டு
மேலும் படத்தின் கேரக்டர் என்ன டிமாண்ட் செய்
அதை நிறைவு செய்வதுதான் எனது
அதேநேரம் வேறு யாரையும் கொப்பி அடித்து
மாட்டேன், என்று பொரிந்து தள்ளுகின்றார் அ

# டாக்டர் பட்ட

நடிகர் பிரபுவுக்கு, சத்ய பாமா பல்கலைக்
டாக்டர் பட்டம் வழங்குகிறது. பிரபு இது
200 படங்களில் நடித்துள்ளார். அவரது
சேவையை பாராட்டி இப்பட்டம் வழங்கப்படு





# ப்ரியாமணிக்கு அடித்தது அதிரஷ்டம்

தமிழிலும் சரி தெலுங்கிலும் சரி ப்ரியாமணிக்கு சரியான வாய்ப்புகளில்லை. அதிலும் தமிழ் பட வாய்ப்புகள் ப்ரியாமணிக்கு சுத்தமாக கிடைக்கவில்லை. தமிழ் முன்னணி ஹீரோக்கள் எல்லாம், தமன்னா, அமலா பால், அனுஷ்கா, சமீரா ரெட்டி போன்றவர்களை மட்டும் தேர்வு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில் ஜுனியர் என்டிஆரின் படத்தில் ப்ரியாமணிக்கு நடிக்க வாய்ப்பு கிடைத்தது ஏறக்குறைய ஜாக்பாட். ஜுனியர் என்டிஆரின் அடுத்தப் படத்தில் ஸ்ருதிஹாசன் நடிப்பார் என அனைவரும் கூறி வந்தனர். திடீரென ஸ்ருதியின் இடத்தில் நுழைந்திருக்கிறார் ப்ரியாமணி.



## காற்றுள்ள போதே தூற்ற விரும்பும் நடிகை

காதல் படங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக ஹரிப்பிரியா கூறினார். 'முரண்' படத்தில் சேரனுக்கு ஜோடியாக நடித்து வரும் அவர் கூறியதாவது, 'முரண்' படம் தமிழில் எனக்கு திருப்புமுனை தரும் படமாக இருக்கும். அந்தப் படம் வெளிவந்த பிறகே வேறு தமிழ் படங்களில் நடிப்பது என்று முடிவு செய்திருக்கிறேன். கன்னடத்தில் ஒரே நேரத்தில் 3 படங்களில் நடித்து வருகிறேன். மூன்றுமே காதல் படங்கள். இளமையும், அழகும் இருக்கும்போதே நிறைய காதல் படங்களில் நடித்து விட வேண்டும். அதனால் காதல் படங்கள் என்றால் ..டனே ஒப்புக் கொள்வேன். வித்தியாசமான கேரக்டர்களில் நடிக்க இன்னும் கொஞ்சம் வயதாக வேண்டும். தெலுங்கில் ..ரு படத்தில் நடித்து வருகிறேன். ஒரு இந்திப் படத்தில் ..டிக்க வந்த வாய்ப்பை தவிர்த்தேன். காரணம் அந்த ஒரு படத்துக்காக தென்னிந்தியாவில் நான் நான்கு படங்களை இழக்.. வேண்டியது இருக்கும்.

## ..றது சாய்பாபா வரலாறு

..வதும் லட்சக்கணக்கான ..காண்டவர் சத்ய சாய்பாபா. .. 24ஆம் திகதி புட்டபர்த்தியில் ..று வயதிலேயே ஆன்மீகத்தில் ..டுபாடு கொண்ட பாபா, ..நிலையம் என்ற ஆசிரமம் .. ஆன்மீகத்துடன் சமூக ..வும் ஈடுபடத் தொடங்கினார். ..ராமமாக இருந்த புட்டபர்த்தி உலகத்தினரின் கவனத்தை ஈர்ப்பதற்கு காரணமாக இருந்தது பாபாவின் ஆன்மீகப்பணி. இதை மையமாக வைத்து அவரது வாழ்க்கை வரலாறை சி.சி மோஷன் பிக்சர்ஸ் என்ற கார்பரேட் நிறுவனம் படமாகத் தயாரிக்கிறது. 'இதில் நடிப்பவர்கள் உள்ளிட்ட விடயங்கள் பற்றி பேச்சு நடக்கிறது. விரைவில் அறிவிப்பு வெளியாகும்' என்று பட நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ..அசின்!

..வதில்லையா ..ரும்..து ..இந்தி.. ..வளியான ..க் ஆகிறது. ..த்திருந்தார். ..ளா? என்று ..லை. அவர் ..க்கிறார்கள். ..தன்மைகள் ..பட்டுள்ளது. ..செய்கிறதோ ..ாண்ணம். ..த்து நடிக்க அசின்.

## ..டம்

..லக்கழகம் .. இதுவரை ..து கலைச் ..ப்படுகிறது.

## காதல் தோல்வி!

ஒருவரை உயிருக்கு உயிராக நேசித்தேன். அவரை பிரிந்துவிட்டேன். இது எனது மனதை பெரிதும் பாதித்தது என்கிறார் கிரண். இது பற்றி அவர் கூறியதாவது, ஓரிரு ஆண்டுகளுக்கு முன் மும்பையை சேர்ந்த ஒருவரை காதலித்தேன். அவர்தான் வாழ்க்கை என இருந்தேன். திடீரென எங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதையடுத்து அவரை பிரிந்துவிட்டேன். இது எனது மனதை மிகவும் பாதித்தது. பல நாட்கள் சோகமாக இருந்தேன். இப்போது முழுமையாக அதிலிருந்து விடுபட்டு வந்துவிட்டேன். இப்போது எனது கவனம் எல்லாம் சினிமாவில் மட்டும்தான். இந்நிலையில் எனக்கு திருமணம் ஆகிவிட்டது என்றும் எனது போய்பிரெண்டை நான் கரம் பிடித்ததாகவும் தகவல் பரப்புகிறார்கள். இதில் சற்றும் உண்மை கிடையாது. ஒரு முறைதான் காதல் வந்தது. அதுவும் தோல்வி. மீண்டும் காதலில் விழவில்லை. காதலிக்கும் எண்ணமும் கிடையாது, என்று கூறும் கிரண் தமிழில் நடிக்க கதை கேட்டு வருகிறாராம்.






# தேன் கிண்ணம்

## வலிகள்

போதுமடி
நீ தந்த பாசவலிகள்.

நான் பார்க்கின்றபோது
நீ பார்க்காதிருப்பதும்
நான் பேசுகின்றபோது
நீ பேசாதிருப்பதும்
போதுமடி.

சின்னச் சின்ன வார்த்தைகளினூடே
செல்லமாக நீ சிரிப்பதும்
கண்களால் சைகை காட்டிவிட்டு
கைகளால் முகத்தை மறைப்பதும்
போதுமடி.

என்வீட்டுச் சாலையோரம்
எதிரெதிரே சந்திப்பதும்
வானம்பார்த்து பூமிபார்த்து
மணிக்கணக்காய் மௌனிப்பதும்
போதுமடி.

கண்ட இடத்திலுன்னோடு
கண்டபடி கதைத்துவிட்டு
நாட்கள் ஒவ்வொன்றிலும்
நினைவுகளோடு இருந்ததும்
போதுமடி.

எனக்காக நீயும்
உனக்காக நானும்
வலிதாங்கியது போதும்
எமக்காக நாம் வாழ்வோம்
எந்தனிடம் வந்துவிடு.

வே.முல்லைத்தீபன் ஒட்டுசுட்டான்.



## தாயால் ஒரு வாழ்வு

பதுக்கப்பட்ட
உன் போர்வைக்குள்
என் வாழ்வுக்கான
எதிர் காலத் தேடல்
தாயே...

தாயே உன்
சுவாசம் இன்றி
சுவாசித்தேன்
அதுவே உனதின்
கரு வறை.

தாயே உன்
உயிரில் எனக்கும்
ஒரு வாழ்வு தந்தாயே
என் புனித தாயே....

யுனைதீன் பசீர்,
கிண்ணியா.

## தப்பு

வட்டிக்குப் பணம்
வாங்குவது தப்பு!
வட்டிக்கு மேல்வட்டி
வசூலிப்பது தப்பு!

குட்டக் குட்டக்
குனிவது தப்பு!
குனியக் குனிய
குட்டுதல் தப்பு!

முட்டிக் குனிவது
மோதிப் பணிவது
தப்புக்குமேல் தப்பு!

காட்டிக்கொடுப்பது தப்பு
களவு செய்து,பிறரை
மாட்டிவிடுவது
மாபெரும் தப்பு!

ஒட்டி உறவாடி
கெடுப்பது தப்பு!
உண்மையை மறைக்க
பொய்பேசுதல் தப்பு?

முட்டாள் உறவை
வளர்ப்பது தப்பு
மூத்தோர் சொல்லை
மீறுதல் தப்பு!
புட்டிப்பால் அபிஷேகம்
செய்வது தப்பு
போலிச் சாமிமார்
பூசை செய்வது தப்பு!

கவிக்குயிலன், சேனையூர்-06

## வாழ்வுக்கான ஆரம்பம்

தொடர் கதையான
வாழ்வுக்கு முற்றுப்புள்ளி
வைக்க கதியற்ற
நான் விதியை
எண்ணி அழுகிறேன்.

சோகத்திலும் தாகத்திலும்
தேகம் நொந்து
உள்ளத்துக் கனவுகளால்
கண்ணீர் சொரித்துக்
கொண்டிருக்கிறேன்.


என் வாழ்வுக்கு வழி கிட்டுமா?
மண்டியிட்டுக் கேட்கிறேன்
உஷ்ணமாகிப்போன நரக வாழ்வில்
தீயின் விடியல் சீந்துகிறேன்.

ஊதி ஊதியே
மெலிந்து போன
இன்றைய யுகப்பொழுதுகள்
சொர்க்கமாக இனிக்க
கவலைகளை விட்டு
மீளவும் மீள் சுழற்றிக்குள்ளாகிறேன்.

நரைக்கும்
நெஞ்சமெல்லாம் சந்தோஷ
நுரைகளால் பரவ
வழி செய்கிறேன்.

எனதின் கனவுகள்
என்றாவது ஒருநாள்
நிறைவேறும் அப்போது
எனது எதிர்பார்ப்புக்கள்
தினம் சிரிக்கும்.

நஸார் இஜாஸ்,
கிண்ணியா-05




## ஏங்கும் இதயம்!



கற்பனையில் கட்டிய
கோட்டைகளை
கண்ணீரால்
அழிக்கின்றேன்
கனவுகளில் பார்த்த
காட்சிகளை
சோகத்தால்
மறைக்கின்றேன்
உன்னையே தேடும்
கண்களை
இறுக்கமாய் மூடுகின்றேன்
ஆனால்... உனக்காக
அழும் என் உள்ளத்தை
எதைக்கொண்டு
அடைப்பது..?

த.றாகினி,
புன்னாலைக்கட்டுவன்.

## புலாராவில் அலைகிறது மும்தாஜின் ஆவி




மும்தாஜின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடம் தான் ஆக்ராவில் இருக்கும் தாஜ்மஹால் என்பது பலருக்கும் தெரியும். ஆனால் தாஜ்மஹால் கட்டுவதற்கு முன்பு வரை மும்தாஜின் உடல் புர்ஹாம்புரில் உள்ள புலாரா மஹாலில் தான் இருந்தது என்பது ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும். மேலும், இந்த புலாரா மஹாலில் தான் மும்தாஜின் ஆவி உலவுவதாகக் கூறப்படுகின்றது.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர் புலாராவில் முகாலயப் பேரரசியான பேகம் மும்தாஜ் மரணமடைந்த போது, மும்தாஜின் நினைவாக ஒரு நினைவு மண்டபம் கட்ட வேண்டும் என்று ஷாஜஹான் ஆசைப்பட்டார். அப்போதுதான் தாஜ்மஹால் கட்டுவது என்ற எண்ணம் ஷாஜஹானின் எண்ணத்தில் உதித்தது.

மேலும், தாஜ்மஹாலை புர்ஹாம்புரில் கட்டுவது என்றே திட்டமிட்டார். ஆனால் பல்வேறு காரணங்களால் தாஜ்மஹால் ஆக்ராவில் கட்டப்பட்டது. அதுவரை மும்தாஜின் உடல் புலாரா மஹாலில்தான் வைக்கப்பட்டிருந்தது. தாஜ்மஹால் கட்டி முடிக்கப்பட்டதும், மும்தாஜின் உடல் அங்கு கொண்டுவரப்பட்டது. மும்தாஜின் உடல் மட்டுமே புலாரா மஹாலில் இருந்து தாஜ்மஹாலுக்கு கொண்டுவரப்பட்டது.

ஆனால் மும்தாஜின் ஆவி இன்னமும் புலாரா மஹாலில் தான் உலாவிக் கொண்டிருக்கிறது என்றே கருதப்படுகிறது.

புலாரா மாளிகையில் இருந்து அவ்வப்போது சத்தங்களும், கத்துவது போன்றும், அலறுவது போன்றும் சத்தங்கள் வருவதாகவும், ஆனால் அந்த ஆவி இதுவரை யாரையும் துன்புறுத்தியது இல்லை என்றும் அங்கு வாழும் மக்கள் கூறுகின்றனர். அதாவது, 1631ஆம் ஆண்டு ஒரு பெண் குழந்தையை பெற்றெடுத்துவிட்டு மும்தாஜ் மரணமடைந்துவிட்டார். அதனால்தான் அந்த இடத்திலேயே அவரது ஆவி இன்னமும் அலைந்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.



# பெண்மையின் சக்தி

பெண் விடுதலை சுதந்திரம் தொடர்பாக விழிப்புணர்வு இன்றைய உலகில் அதிகரித்துவருவது முன்னேற்றமான விடயம். குறிப்பாக ஆண்களும் கடந்தகால ஆண்மைத் தன்மையின் இயல்புகளின் தவறுகளையும் அதன் பெண்ணீய எதிர்ப்புணர்வையும் புரிந்து கொள்ளவும் அதிலிருந்து விடுபடவும் முயற்சிக்கும் முக்கியமான காலகட்டம் இது.

பெண்மையின் சக்தி கண்டு பயந்த ஆரம்ப கால மனிதர் பெண்மையின் இயல்புகளை பண்புகளை குற்றம் கூறி குறை கண்டனர். அதனை வெளிப்படுத்தாதவாறு வரைமுறைகளை அமைத்து அடக்கினர். மீறி வெளிப்படுத்தியவர்களை பல்லாயிரம் ஆண்டுகளாக கண்டித்தனர், தண்டித்தனர். கீழ்த்தரமாகவும் தாழ்நிலையிலும் அவமதிப்புக்குள்ளாக்கப்பட்டனர். இது பெண்களின் இரத்தத்திலும் எலும்புகளிலும் நன்றாக ஊடுருவியுள்ளது.

ஆண்களின் குறிப்பாக ஆண்தன்மையின் இயல்புகளும் பண்புகளும் பெண்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை.

ஆண்களால் முடியாத ஒன்று பெண்களால் முடியும் என்பது ஆண்களிடம் தாம் அவர்களைவிட குறைந்தவர்கள் என்ற தாழ்வுச் சிக்கலையும் இயலாமை உணர்வையும் உருவாக்கிவிட்டது. குறிப்பாக பெண்கள் குழந்தைகளைப் பெறுவதும் உணர்வை அடுத்தடுத்து இயல்பாகப் பெறுவதும் ஆண்களால் முடியாத ஒன்று. இதுவும் ஆண்களிடம் தாழ்வுச்சிக்கலை உருவாக்கியது. தாம் உயர்ந்தவர்கள் என்பதை நிலைநாட்டுவதற்கு பெண்களை தம் உடற்பலம் கொண்டு அடக்குவதையும் அவர்களது பண்புகளையும் இயல்புகளையும் சட்டங்கள் இயற்றிக் கண்டித்தனர். இவ்வாறு மிகப் பலமாக இருந்த பெண்ணை பெண்மையை பல்லாயிரம் ஆண்டுகளாக 'பெண் பல வீனமானவள்' எனக் கூறி பெண்ணினது அடி மன ஆழத்தில் இக்கருத்தியலைப் புதைத்துள்ளனர்.

இயற்கை மிகவும் சக்திவாய்ந்தது. புத்திக் கூர்மையானது. இதனால் தான் பெண்களுக்கும் ஆண்களுக்கும் வெவ்வேறு பண்புகளையும் இயல்புகளையும் படைத்துள்ளது. ஒவ்வொரு பண்புக்கும் இயல்புகளுக்கும் ஒவ்வொருவிதமான பொறுப்புக்கள் வாழ்க்கையில் உண்டு. எந்த ஒரு இயல்போ பண்போ ஒன்றைவிட ஒன்று குறைந்ததுமல்ல, கூடியதுமல்ல. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பணி. இதைப் புரிந்துகொண்டு நம் பணிகளையும் பொறுப்புக்களையும் முழுமையுடன் செய்யும் பொழுது வாழ்வு மட்டுமல்ல ஒவ்வொரு கணமும் நிறைவு பெற்று ஆனந்தமயமாக இருக்கின்றது. இதுவே எதிர்பார்ப்புமாகும்.

இனிவரும் காலம் பெண்களின் காலம் என்பதே என் பார்வை. இது பெண்களுக்கான சந்தர்ப்பம். பெண்மையின் சக்தி செயற்பட இனி சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

பெண் தன்மையின் அடிப்படையில் பெண்கள் இயங்கவேண்டும். இதுவே எதிர்காலத்திற்கு நம்பிக்கையையும் ஒளியும் வழியும் தரும் என ஓசோ கூறுகின்றார்.

## லேடிஸ் ஸ்பெஷல்

பெண்கள் பக்கம்...



லேடிஸ் ஸ்பெஷல் லேடிஸ் ஸ்பெஷல் லேடிஸ் ஸ்பெஷல் லேடிஸ் லேடிஸ் ஸ்பெஷல்

# முக்கனி ஜூஸ்



**தேவையானவை:**

மாம்பழம் -01
பலாப்பழம் -05
வாழைப்பழம்-01
பால் - மூன்று டம்ளர்
தண்ணீர் -1டம்ளர்
ஐஸ்கட்டிகள் -பத்து

**செய்முறை:**

மாம்பழம் மற்றும் பலாப்பழத்தை கொட்டை இல்லாமல் பொடியாக அரிந்து எடுத்து கொள்ளவும். வாழைப்பழத்தை அரிந்து கொள்ளவும்.

பாலை காய்ச்சி ஆற வைக்கவும்.

மிக்சியில் பழங்கள், பால், தண்ணீர், ஐஸ்கட்டிகள் அனைத்தையும் சேர்த்து நன்கு நுரை பொங்க அடியுங்கள், பின்பு விருந்தாளிகளுக்கு ஊற்றி பரிமாறுங்கள்.

# முகம் பொலிவு பெற...



***பேரீச்சம் பழத்தை தேனில் ஊற வைத்து சாப்பிட்டு வந்தால் உடல் பருமன் அதிகரிக்கும்.**

***தேங்காய் பாலை முகத்தில் தேய்த்தால் முகத்தில் இருக்கும் சுருக்கங்கள் நீங்கும்.**

***ரோஜாப்பூ இதழை வெந்நீர் சேர்த்து அரைத்து உதட்டில் தடவி வந்தால் உதட்டின் நிறம் மாறும்.**

***வெந்தயம், துளசி இரண்டையும் அரைத்து முகப்பரு இருக்கும் இடத்தில் தடவி வந்தால் வந்தால் முகப்பரு நீங்கும்.**

***சந்தனம், தேன் இரண்டையும் சேர்த்து முகத்தில் தேய்த்தால் முகம் பளிச்சென்று இருக்கும்.**

***உலர்ந்த சருமமாக இருந்தால் கடலை மா, தேன், பாலோடு பன்னீர் சேர்த்து 15 நிமிடம் முகத்தில் ஊற வைத்து கழுவினால் முகம் பளிச்சென்று தோற்றமளிக்கும்.**

***கடலைமா , பயத்தம் மா வெயிலில் காய வைத்த தோடம்பழத்தோல் மூன்றையும் அரைத்து முகத்தில் பூசி வந்தால் முகம் பளபளக்கும்.**

***கஸ்தூரி மஞ்சள், பயத்தம் பருப்பு ஆகியவற்றை அரைத்து முகத்தில் பூசி வந்தால் பொலிவான நிறம் பெறலாம்.**

# சாயம் போகாமல் இருக்க...



பலருக்கும் புதிததாக வாங்கிய துணிகளில் சாயம் போவது மிகவும் பிரச்சினையாக இருக்கும். அதற்கு ஒரு எளிய வழி உண்டு. புதிதாக வாங்கிய துணிகளில் சாயம் ஒட்டாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் தெரியுமா?

ஒரு பக்கெட்டில் தண்ணீர் நிரப்பி, அதில் பாதி கப் உப்பை சேர்க்கவும். கரைத்துத் துணிகளை அதில் ஒரு அரை மணி நேரம் ஊற வைத்து, பின்னர் பிழிந்து எடுக்கவும். வேறு தண்ணீரில் அலச வேண்டாம். பிறகு காய வைத்து பயன்படுத்தவும். அடுத்த முறை நீங்கள் இந்தத் துணிகளை தோய்க்கும் போது சாயம் மற்ற துணியில் ஒட்டாது.

இப்படி செய்வதால், சாயம் போய் துணிகள் சீக்கிரம் வெளுத்துப் போகாது. முதலில் வெறும் நீரில் துவைத்துவிட்டு, அடுத்த முறை துணிகளை வாங்கியதும் அதனை சோப்புப் போட்டு துவைப்பதைத் தவிர்ப்பது நல்லது. முதலில் வெறும் நீரில் துவைத்து விட்டு அடுத்த முறை சோப்புப் போட்டுத் துவைக்கலாம்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 268**

கேள்வி : உடல் பருமனாக வருவதற்குச் செய்யவேண்டியது என்ன?

**பரிசு 1000/- ரூபா.**

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும்.
அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 268**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **25.05.2011**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

**பரிசுப் போட்டி இல:- 266 இற்கான விடை:-** பழச்சாறு, காய்கறிச்சாறு, சூப்.
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:-செ.பவளராணி, சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.**

**268**

பெயர் : ....................
முகவரி : ....................
....................
....................
தே.அ. அட்டை இல : ....................
விடை : ....................
கையொப்பம் : ....................

# நிறையவே எதிர்பார்க்கலாம்

DLF IPL

**உலகளாவிய** கிரிக்கெட் ஆட்டங்களில் காலத்துக்குக் காலம் பல மாற்றங்கள் வந்தாலும், IPL அறிமுகத்தின் பின் ஏற்பட்ட பலதரப்பு மாற்றங்கள், கிரிக்கெட் உலகையே ஒரு புரட்டுப் புரட்டிவிட்டது. முன்பெல்லாம் கிரிக்கெட்டின் மூலம் செல்வந்தர்கள் ஆனவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே. ஆனால் IPL அறிமுகத்தின் பின் ஐந்நூறு, ஆயிரக்கணக்கானவர்கள் செல்வந்தர்கள் ஆகிவிட்டார்கள். இதனை நடாத்தும் BCCI மிகப்பெரும் பொருளா-தாரப் பலம் வாய்ந்தது. இவர்கள் உள்ளூர் வீரர்களுக்கு மட்டுமன்றி, வெளிநாட்டு வீரர்களுக்கும் சந்தர்ப்பம் அளித்து அவர்களையும் செல்வந்தர்கள் ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு தரவின் படி அவுஸ்திரேலியா, நியூசிலாந்து வீரர்கள் தம் நாட்டுக்காக விளையாடிச் சேர்க்க இயலாத பல மடங்கு செல்வத்தை IPL ஊடாகப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று அறியப்படுகின்றது.

IPLஇன் பெறுமதி 413 கோடி அமெரிக்க டொலர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சராசரியாக ஒரு வீரர் பெறும் ஊதியம் ஏறத்தாழ 33 இலட்சம் அமெரிக்க டொலர்கள் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை IPLஇல் இருந்தே விளையாடும் எல்லா வீரர்களும் ஒரே அளவாக வேதனம் பெறுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 2011 ஒப்பந்தத்தில் 35 வீரர்கள் ஒரு இலட்சம் டொலர்கள் மட்டுமே பெறுகிறார்கள் என்பது தெரியவருகின்றது. இதேவேளை பதினெட்டு வீரர்கள் பல கோடி ரூபாய்களுக்கு மேல் வேதனம் பெறுகிறார்கள். இதில் என்ன விசேடம் என்றால் குறைந்த வருமானம் என்பது கூட ஆயிரங்கள் பத்தாயிரங்களில் பேசப்படுவதில்லை. அவைகூட கோடிகளில் தான் பேசப்படுகின்றன.

இப்படி பணமழை கொட்டும் IPL எப்படி வளம் கொழிக்கிறது. BCCI மிகப்பெரிய பொருளா-தாரச் சுரங்கம். இவர்களோடு கைகோர்த்துச் செல்பவர்கள் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப்புள்ளிகள், மற்றும் நிறுவனங்கள். அதோடு இந்திய சினிமாவின் பங்களிப்பும் இங்கு நிறைய உண்டு. சில IPL அவதா-னிகளின் உரிமையாளர்கள் இந்திய சினிமாத்துறையினர். எனவே பணம் என்பது IPL இல் கொட்டித் தீர்க்கும் மாரி மழைதான்.

ஒருவகையில் IPL வரவேற்கத்தக்கதே. ஏனெனில் விசாலமான இந்திய நாட்டில் எத்தனை பேர் கிரிக்கெட் ஆடி வாழ்வைக் கொண்டுநடத்த முடியும்? அந்தவகையில் நிறையவே வசதி வாய்ப்புக்கள் குறைந்த திறமை குறைந்த வீரர்களுக்கு, அதோடு கிராமப்புற, சிறு நகர வீரர்களுக்கு வாழ்க்கையில் ஒரு பெரும் வசந்தத்தை IPL காட்டித்தான் இருக்கின்றது.

இதேவேளை IPL மூலமான இன்னொரு எதிர்பார்க்கையை மனிதநேய ஆர்வலர்கள் வெளியிட்டுள்ளார்கள். IPL தனது அமைப்புச் சார்ந்த எல்லாத்தரப்பாரையும் இணைத்து உலகளாவிய ரீதியில் பொதுநலன் சார்ந்த விடயங்களிலும் கவனம் செலுத்தலாமே என்பதுதான் அது. அவர்கள் கூறும்போது, சுகாதாரத்தேவைகள், கல்வி அபிவிருத்திப் பணிகள், விளையாட்டு மேம்பாடு என்ற பல்துறைகளில் நிதி சார்ந்த உதவி களைச் செய்தால் IPLஇன் பிரதிமை என்பது உலகளாவிய ரீதியில் மிகவும் உன்னதமானதொரு இடத்தைப் பெறும் என்கிறார்கள். IPLக்கும் இப்படியான திட்டங்கள் இருக்கக் கூடும். எனவே எதிர்காலத்தில் இப்படியான சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டால் IPL எம்முடைய வாழ்வுடன் இணைந்த தொன்றாக மாறிவிடும்.

# உதைபந்தாட்ட உலகின் சிகரம்

**உலக** விளையாட்டு வீரர்களில் தம் திறமையால் எப்போதுமே பேசப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் வெகுசிலரே. அவர்களில் முதன்மையானவர் என்று ஆர்ஜென்ரீன தேசிய அணி வீரர் லயனல் மெஸ்ஸி என்றால் அதில் மிகையில்லை. முன்பு இவர் செய்த சாதனைகள் என்று தொடங்குவதைவிட இப்போதும் ஒரு சாதனை செய்திருக்கிறார் என்று தொடங்குவது பொருத்தமாக இருக்கும். அதாவது ஸ்பானிய லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் ஒரு சீசனில் ஐம்பது கோல்கள் போட்ட முதல் வீரர் மெஸ்ஸி என்ற சாதனையைப் பதிவு செய்திருக்கிறார் இவர். இதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் இன்னொரு சாதனைக்கும் இவர் உரிமையாளர் ஆனார். 1960-61 இல் ரியல் மட்ரிட் அணி தொடர்ச்சியாக பதினைந்து ஆட்டங்களில் வெற்றி பெற்றிருந்தது. தற்போது பார்ஸலோனா அணி அத்லெடிகோ அணியை 3-0 என்று வீழ்த்தியதன் மூலம் அந்தச் சாதனையை முறியடித்துள்ளது. இந்த மூன்று கோல்களையும் போட்டவர் மெஸ்ஸி. 1987 இல் பிறந்த இவர் தனது 13 வயதில் பார்ஸலோனா அணியில் இணைந்தார். இந்தக் குருகுலவாசத்தின் தொடர்ச்சியாக 2003 இல் நட்பு ரீதியான ஆட்டத்தில் களமிறங்கி தனது 17 ஆவது வயதில் பார்ஸலோனா கழகத்தின் முன்னணி வீரராகக் களமிறங்கினார். 2005 இல் இளையோருக்கான விருதினை வென்றவர் இவர். 2005 இல் உலகக்கிண்ணப் போட்டிகளில் களமிறங்கியபோது வயதில் மிகவும் இளைய வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.



அண்மையில் FIFA பலுன் டீஓர் விருதைப் பெற்றபோது அதிலும் கவனிக்கத்தக்க பதிவை ஏற்படுத்தினார். இவ்விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட பெயர்கள் மூன்று. மெஸ்ஸஸி, மற்றும் ஸ்பானிய தேசிய அணியைச் சேர்ந்த ஸேவி மற்றும் இனியெஸ்ரா. இம்மூவரும் பார்சலோனாக் கழக வீரர்கள். இவர்களுள் மெஸ்ஸியே இவ்விருதைப் பெற்றவர். மேலும் 2007 இல் பிரேசிலின் காகாவும், 2008 போர்த்துக்கலில் கிறிஸ்ரியானோ றொனால்டோவும் இவ்விருதைப் பெற்றபோது இவர் முறையே 2ஆம் இடம் பெற்றார்.

தற்போது ஸ்பானிய சாம்பியன்ஷிப் பேட்டியின் முதலாவது அணிக்கு 2 கோல்கள் போட்டு பார்ஸலோனாவை (2-0) வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றுள்ளார். இவர் இந்த ஆட்டத்தைப் பார்வையிட்ட ஆர்ஜென்ரீனா பயிற்றுனர் சேர்ஜியோ படிஸ்டா தினமும் முன்னேற்றங் களைக் காட்டும் மெஸ்ஸி உலகின் Greatest ஆகும் நாள் தொலைவில் இல்லையென்று பாராட்டியுள்ளார். 1986 இல் உலகக்கிண்ணம் வென்ற மரடோனாவின் அணியில் இவரும் ஒருவர். இவர் இப்போது, மரடோனாவை விட மெஸ்ஸியே சிறந்தவர் என்று பிரமித்துப்போய் நிற்கிறார். 2010 உலகக் கிண்ணப் போட்டிகளில் மெஸ்ஸியை அவதானித்த மரடோனா, என்னைவிட மெஸ்ஸியே சிறந்தவர் என்று பாராட்டியது இன்னொரு விடயம்.

இப்படியாக மெஸ்ஸியின் திறமைகள் பிரகாசித்துக்கொண்டே இருக்கின்றன. இதுவரையில் பார்சலோனாவுக்காக இந்த சீசனில் 52 கோல்கள் தாண்டி இவரின் வேட்டை தொடர்கிறது. இன்னும் பல இவருக்கு உண்டு என்பது நிச்சயம்.. Most Popular Player என்ற தட்டிச் சென்றார். இவருக்குப் போட்டி கிறிஸ்ரியானோ றொனால்டோ திறமைகளுக்கு அப்பால், மற்றவர் பணிவு, அடக்கம், நட்புணர்வு, கருத்தில் கொண்டதில் லயனல் வாக்குகளைப் பெற்று விருதைத்

கோல்கள் கடந்த வருடம் விருதையும் இவரே யாக இருந்தவர் ஆனால் உதைபந்தாட்டத் களை மதித்தல், எளிமை, மனப்பாங்கு என்பவற்றையும் மெஸ்ஸியே அதிக விருப்பு தட்டிச் சென்றவர். இப்படியாக உதைபந்தாட்ட உலகின் நட்சத்திரமாகத் திகழும் மெஸ்ஸி சாதிக்கப்போவது இன்னும் எத்தனையோ என்பதில் சந்தேகமில்லை.

## விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா



# புதிய சிந்தனை

**இலங்கைக்** கிரிக்கெட் அணிக்குப் புதிய தேர்வுக்குழு அமைக்கப்பட்டதன் பின் சில சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது என்கிறார்கள் விமர்சகர்கள். இங்கிலாந்துக்குச் செல்லும் இலங்கை அணி மிடிலெசெக்ஸ் அணியுடன் விளையாடவுள்ள பயிற்சியாட்டத்தில் சேர்ந்துகொள்ளும்படி தற்போது லங்காஷயர் கவுன்ரியில் ஆடிவரும் பர்வேஸ் மக்ரூவுக்கும், இலங்கையில் உள்ள கௌஷால் சில்வாவுக்கும் தேர்வுக்குழு அழைப்பு விட்டுள்ளது. மக்ரூவ் இலங்கை அணியின் நிரந்தர வீரராக நீண்ட காலம் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் காயம் காரணமாக ஒதுங்கிச்செல்ல நேரிட்டது. இதன் பல சகலதுறை ஆட்ட வீரர் ஏஞ்சலோ மத்தியூஸ் அவ்விடத்தைப் பிடிக்கவே மக்ரூவின் நிலை அணியில் இருந்து நீக்கம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஆனால் தற்போதுள்ள நிலையில் எதிர்கால முக்கியமான சுற்றுப் போட்டிகளைக் கருத்தில் கொண்டு முன் ஜாக்கிரதையாக மக்ரூவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இவரது திறமையும் மீண்டும் ஒரு பந்துவீச்சாளராக இவரை உள்கொண்டுவரும் என்றே நோக்கர்கள் நம்புகிறார்கள். இதேவேளை இங்கிலாந்து செல்லும் இலங்கை அணி வேகப்பந்து வீச்சாளர்களாக தில்ஹாரா பெர்ணான்டோ, வெலகெதா, சுரங்க லக்மல், நுவன் பிரதீப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். டில்ஹார நீண்டகாலம் அணியில் இடம்பிடித்திருந்தாலும் 35 டெஸ்ட் போட்டிகளில் மட்டும் ஆடி, 90 விக்கெட்டுக்கள் மட்டும் பெற்றவர். இது சிறப்பானதொரு சராசரியல்ல. வெலகெதர ஆறு டெஸ்ட் போட்டிகளிலும், சுரங்க இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் மட்டும் ஆடியவர்கள். மற்றவர் புதியவர். இந்நிலையில் லசித் மலிங்கவும் இல்லாத நிலையில் தொடர்ந்து வரும் தொடர்களுக்கு மக்ரூவ் இன்றியமையாதவர் என்று தேர்வுக்குழு எண்ணியிருக்கலாம்.

முன்னதான இங்கிலாந்துத் தொடரில் மஹேல தலைமையிலான அணி மூன்று டெஸ்ட் போட்டி களை 1-1 என்று சமன் செய்தும் 5 ஒரு நாள் போட்டிகளிலும் வென்றும் சிறப்பாகச் செயற்பட்டிருந்தது. இந்நிலையில் அன்ட்ரூ ஸ்ரோஸ் கணக்குத் தீர்க்கவேண்டும் என்ற ஒரு எண்ணத்தையும் கொண்டிருப்பவர் அல்லவா?

எனவே புதிய அணித்தலைவர் டில்ஷான் எவ்வாறு பதிலளிக்கப்போகிறார் என்பதை எல்லோரும் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். மஹேல, சங்கக்கார இருவரும் இருந்தாலும் இங்கிலாந்துத் தொடர் இலங்கைக்கு எளிதாக இருக்கப்போவதில்லை என்றே எண்ணப்படுகின்றது.

தற்போது ஒப்பிடுகையில் இலங்கை அணியைவிட இங்கிலாந்து அணி பலமானது என்றே கணிப்பிடப்படுகிறது. இந்த நிலையில் இங்கிலாந்துத் தொடரிலேயே மக்ரூவுக்கு இடம் கிடைத்தாலும் (லங்காஷயர் அனுமதித்தால்) ஆச்சரியப்படுவதற்கில்லை.

எது எவ்வாறாயினும் துலிப்மென்டிஸ் மாத்தியோசிக்கிறார் என்று தெரிகிறது. எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் போக்கு, திறமையைக் தேடி அங்கீகரிக்கும் போக்கு துலிப்மென்டிசிடம் தெரிகிறது. இந்தப் பாதை இலங்கை அணிக்கு வெள்ளிப் பாதையாகவே அமையும். துலிப்மென்டிசுக்கும் மக்ரூவுக்கும் வாழ்த்துக்கள்.




# வாழ்வின் அற்புதங்களைப் படம்பிடிப்பது கவிதை!

**கவிதையால்** நாம் காப்பாற்றப்படுவோம் என்றார் மத்யூ ஆர்னோல்ட். தொழிற்சாலையை விட மனிதனுக்கு கவிதை அவசியம். தொழிற்சாலை உயிர் வாழத் தேவையானதைத் தருகிறது. ஆனால், கவிதையோ வாழ்வதற்கான விருப்பத்தையும் வாழ்வை எதிர்கொள்வதற்கான வலுவையும் வழங்குகிறது என்று சொன்னார் ஹொஸே மார்த்தி. ஒருவன் எந்த அளவுக்கு மனிதன் என்பதைக் கண்டுகொள்வதற்கு அல்லது தீர்மானிப்பதற்கு அவனுக்குள் எந்த அளவுக்குக் கவிதை இருக்கிறது என்று கேட்டுக் கொள்ளலாம் என்கிறார் கோவை ஞானி.

கவிதை என்பது பற்றி பல ஆயிரம் விளக்கங்கள் சொல்லப்பட்டு விட்டன. இருந்தும் கவிதையை விளக்க அவை போதவில்லை என்றே காண்கிறோம். எனவே புதிய புதிய விளக்கங்களை கோட்பாடுகளைத் தேடிச் சென்றபடியே இருக்கிறோம். கவிதை விளக்கிவிட முடியாதது என்ற மலைப்பில், கவிதையும் கடவுளும் ஒன்றுதான் என்று கூட ஒருவர் சொல்லியிருக்கிறார்.

ஜெர்மானிய கவிஞர் ரெய்னர் மரியா ரில்கே கவிதையின் உருவாக்கம் பற்றி இப்படிச் சொல்கிறார். ஒரு கவிதையை உருவாக்க வாழ்நாள் முழுவதும் கூட காத்திருக்க வேண்டி வரும். கவிதைகள் மனிதன் நினைக்கும்போது உண்டாக்கிக் கொள்ளக் கூடியவையல்ல. அவை வெறும் உணர்ச்சி நிலைகள் மட்டுமல்ல, அவை அனுபவங்கள். ஒரு கவிதையின் பொருட்டு நீ நிறைய நகரங்களை, நிறைய மனிதர்களை, பொருட்களைக் காண வேண்டியதாயிருக்கும். இதற்காக நீ பறவை எப்படிப் பறக்கிறது என்பதை அறிந்துகொள்ள வேண்டியதாயிருக்கும். விபரிக்க முடியாத பால்யத்தை, கடலை, இரவுப் பயணத்தை, பிரசவ வேதனையில் கத்தும் பெண்ணின் அலறலை, பிரசவித்த பெண்ணின் வெற்றியை, சாந்தமான உறக்கத்தை, சாவு அறைகளை, பிரேதங்களை இப்படி இப்படியாக. எத்தனையோ காணக்கூடுமானால் ஒருவேளை அப்போது கவிதையின் முதல் வார்த்தை உனக்குள் எழுந்து அருகில் வரக்கூடும்.

ஆயினும் ஒரு கவிதை உருவான விதம் கவிஞர்களுக்கு என்றும் புதிராகவே இருக்கிறது. "கவிஞன் கவிதையை உண்டாக்குவதில்லை. கவிதை எங்கோ பின்னால் காலங்காலமாக இருந்து வருகிறது. கவிஞன் அதைக் கண்டுபிடித்து விடுகிறான்" என்கிறார் செக் கவிஞரான ஜான் ஸ்கெஸல். கவிதை உருவாக்க அனுபவம் குறித்து கவிஞர் சுகுமாரன் தன் அனுபவத்தைத் தருகிறார்: "கவிதை எப்படி உருவாகிறது என்பது தொடர்ந்து புதிராகத்தான் இருக்கிறது. பலமுறை யோசித்துப் பார்த்தால் சிலசமயம் ஒரு வரி வந்து இந்தக் கவிதையைத் தொடர்ந்து கொண்டு போயிருக்கும். சிலசமயம் படிமம் கவிதையைக் கொண்டு போயிருக்கும். ஒவ்வொன்றுக்கும் உதாரணம் சொல்ல முடியும். "கையில் அள்ளிய நீர்" என்கிற கவிதையை முதலில் அறுபது வரிகள் எழுதியிருப்பேன். ஆனால் எதுவுமே நிறைவாகத் தோன்றாததால் கிடப்பில் போட்டு விட்டேன். வேறொரு நாள் அந்தப் படிமம் திரும்பத் தோன்றியபோது இப்போது இருக்கிற ஆறேழு வரிகள் மட்டும்தான் மிஞ்சின. அந்தக் கவிதையை அதே வடிவத்தில் தக்க வைச்சுக்கிட்டேன். இது கவிதை வந்த ஒரு வழி.

சிலது சித்திரங்களாக வரும். போபால் பற்றிய விஷயத்தில் அந்த ஆட்கள் ஓடிவரக் கூடிய ஒரு விடயம். அது எனக்குக் கிடைத்த ஒரு காட்சி. அதேபோல கொஞ்சக் காலம் ரொம்பப் பயணம் செய்யக்கூடிய தொழிலில் நான் இருந்தேன். அப்போது நான் பார்த்த ஒரு காட்சி. நீலகிரி மலையில் நிறைய மரங்கள் வெட்டப்பட்டு அடுக்கிக் கிடந்தன. எனக்கு இந்த இரண்டு காட்சிகளுக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகத் தோன்றியது. அதுதான் இந்த நூற்றாண்டில் மூன்று காட்சிகள் என்னும் கவிதை.

யார்கிட்டயோ ஏதோ கேள்வி கேட்கும்போது சும்மா "ச்சோ" அப்படீன்னு ஒலிக்குறிப்பை மட்டுமே பதிலாத் தந்தாங்க. அது ஒரு கவிதையை முழுக்கவுமே கொடுத்திருக்கு. "பெயர்களின் கவிதை" என்பது. எழுதி முடித்ததும் கவிதை என்னை விட்டுப் போயிடுது. அது வாசகனுடையதாக ஆயிடுது. இருந்தாலும் இது எப்படி வந்தது என்ற கேள்வி தொடர்ந்து இருந்துகிட்டேதான் இருக்குது. அந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்காத வரைக்கும் நான் கவிதை எழுதிக்கிட்டேதான் இருப்பேன். அந்தக் கேள்விக்குப் பதில் கிடைச்சிருச்சுன்னா கவிதை எழுதுவதை நிறுத்திக்குவேன்.

சுகுமாரனின் வியப்பை மேலும் விள்க்குகிறார் க.மோகனரங்கன். தர்க்க ஒழுங்குகளை மீறி மொழி தன்னை நிகழ்த்திக் கொள்ளும் தருணமே கவிதையின் பிறப்பாகிறது. சுண்டிவிடப்பெறும் ஒரு சொல் அல்லது வரி சென்று தைக்கும் அந்தரங்கத்திலிருந்து பெருகும் மனவெழுச்சியின் பாற்பட்ட நுண்ணிய பிம்பங்களும், படிமங்களும் முடிவின்மை நோக்கி நம்மை செலுத்தக்கூடியது. மனதை மீட்டி அதிரச் செய்வதில் சொற்களின் ஒலிப்பிற்கும் அவை இணையும் விதத்தில் உண்டாகும் தாளகதிக்கும் கணிசமான பங்கு உண்டு. அவ்வாறு பெறப்படும் பிம்பங்களுக்கும் காட்சிகளுக்கும் பல சமயங்களில் நாமறியாத ஆழ்மனதின் அர்த்தங்கள் இருக்கக்கூடும் என்பதை இன்றைய உளவியல் நிரூபிக்கிறது.

கவிதை எப்படி வந்தது என்னும் வியப்பு ஒருபுறம் என்றால், கவிதை என்பது என்ன என்று விளக்கிச் சொல்ல முடியாத தவிப்பு மறுபுறம். கவிஞர் அபி சொல்கிறார்: எது கவிதை? அவரவர் போக்கில், நான் உள்பட ஆயிரம் அடையாளங்கள் சொன்னாலும் கவிதை எல்லா வற்றையும் ஏற்று, மீறி நடந்து போகிறது. கவிதை உரத்துப் பேசத் தெரியாதது. குரல் இல்லாதது. சொல்லுக்கு அடியில் அல்லது வெளியில் இயங்குவது. அதிக உண்மையை உணர்த்துவதற்காகச் சாயைகளைப் பேசுவது. த்வனிகளின் நீல விரிவில் தொலைப் புள்ளியாகப் பறந்து திரிவது. பாவனைகளின் அனைத்து வாசல்களிலும் நுழைந்து வெளியேறுவது. நிர்ணயங்களுக்கும் துல்லியங்களுக்கும் உடன்படாதது. தெளிவு என்னும் பகட்டில் மயங்காதது. இருளின் தீட்சண்யத்தில் கண் திறப்பது. உள்-வெளி பேதங்களை ஏதாவது இரண்டு இமைத் திறப்புக்கு நடுவில் ஒழித்து விடுவது. மௌனத்தை நோக்கி நகர்ந்து கொண்டே இருப்பது. தன் தொடர்ச்சியில் கவிஞர்களைப் படைத்துவிட்டுச் செல்வது அல்லது உடன் அழைத்துச் செல்வது சொல்லிக்கொண்டே போகலாம். கவிதை எதுன்னு. எல்லாம் தற்காலிகமானவை என்று அவர் தன் வியப்பை முடிக்கிறார்.

கவிதை அல்லாததுடன் ஒப்பிட்டு கவிதையை தன் பாணியில் விளக்குகிறார் ஜெயமோகன். கவிதை அல்லாததின் வாசிப்புக்கும் கவிதை வாசிப்புக்கும் உள்ள வேறுபாடு என்ன? ஒரு அறிவியல் சூத்திரத்தையும் கவிதை வரியையும் ஒப்பிட்டால் இதை நாம் காணலாம். அறிவியல் சூத்திரம் அமைப்பிலும் சொல்லழகிலும் கவிதை போலவே இருக்கலாம்.

"ஆற்றலை உருமாற்றலாம்
அழிக்க இயலாது
இது ஓர் அறிவியல்"

தேற்றம். இங்கு கூறப்படும் கருத்தில் நம் கற்பனையைக் கலப்பதற்கே இடமில்லை. இதன் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு சொல்லிணைப்பும் கேட்பவர் சொல்பவர் இருவருக்கும் பொதுவாக திட்டவட்டமாக வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆகவே இதை கூறுபவர் பெறுபவர் இருதரப்பிலும் ஒரு பொருளே உள்ளது. பொருள்மயக்கம் என்பது இங்கு பிழை என்றே பொருள்படும்.


என் கரங்களின் ஆற்றலில்
ஆற்றப்படுகின்றது
என் பிரபஞ்சம்

இது ஒரு கவிதை வரி. இங்கு கூறப்படும் உணர்வும் சரி, கருத்தும் சரி வாசகனின் கற்பனையினாலேயே முழுமைப்படுத்தப்படுகின்றன. வாசகனின் கற்பனையைத் தூண்டும்போதே இவ்வரி தன் அர்த்தங்களை உருவாக்க ஆரம்பிக்கிறது. இதில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் வாசகன் தன் கற்பனை மூலம் விரித்தெடுக்க வாய்ப்பு உள்ளது. கரங்கள், ஆற்றல், பிரபஞ்சம் ஆகிய சொற்களுக்கு அவன் தன் அனுபவம் சார்ந்து தனக்குரிய பொருள் தரலாம்.

(22ஆம் பக்கம் தொடர்ச்சி)


## மலையாள மாந்திரீகம்





### 45 வருட காலம் தொட்டுச் செய்யும் எமது தெய்வீக சேவை

மழைக்கு முளைக்கும் காளான் பயிரைப் போல் அல்லாது தொன்று தொட்டு பரம்பரை பரம்பரையாக, வாழையடி வாழையாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை ஆணிவேராகக் கொண்டு வளர்ந்து வரும் எமது மகத்தான மாந்திரீக சேவையின் நிமித்தமே நாம் வாரா வாரம் செய்து வரும் விளம்பரம்.

வாடிக்கையாளர் ஒருவர் தன் பிரச்சினையை என்னிடம் ஒப்படைத்த அடுத்த விநாடியே ஒருவர் புது வீடு கட்டத் திட்டமிட்டு அஸ்திவாரம் போட்டு அவ்வீடுவரை உறுதியாக, உண்மையாக உழைக்கின்றாரே, அதேபோல் வாடிக்கையாளரின் பிரச்சினைகளை உள்வாங்கி முழுமனதோடு அவரின் பிரச்சினை தீரும் மட்டும் இருந்து இரவு பகலாக தியான பூஜைகள் நடைபெறுவது என்பது உறுதி.

தொடர்ந்து வாராவாரம் விளம்பரம் செய்வது என்றாலே அது எமது மாந்திரீக உச்சாடன பீடம் மட்டுமே. கருணை, அன்பு, நேர்மை, உண்மை, உழைப்பு இவை அனைத்தையும் கொண்டு வாடிக்கையாளர்களுக்குச் சேவைபுரிந்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து அவர்களின் சிரிப்பிலே இறைவனைக் காண ஆதி பராசக்தி எனக்கு இந்த அற்புத அருள்ஞான சக்தியை அருளியுள்ளார்.

"நேரம் காலம் பாராது காலா காலம் பழைமை வாய்ந்த ஜோதிட மாந்திரீக சேவை என்றால் அது எனது சேவையே!" என நான் சொல்வதில் பெருமிதம் அடைகிறேன். நல்லது நடக்க நல்வாழ்வு பெற என்னை ஒரு முறை சந்திக்கலாமே!

ஒரே கூரையின் கீழ் சகல சாந்தி பரிகாரங்களும் செய்வதற்கு விசேட பிரிவுரைகள் உண்டு. உண்மையையும், நேர்மையையும் அடித்தளமாகக் கொண்டு, பரிசுத்தமாகச் செய்யும் என் பரிகாரத்தால், எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்குப் பிரச்சினைகள் தீரும், நல்லது நடக்கும் எனத் திட்டவட்டமாக உறுதியாக உறுதிமொழி வழங்குவது மட்டுமல்லாது உறுதிக்கடிதம் வழங்குவது மாந்திரீக சேவை யில் நான் மட்டுமே.!

வெளிநாட்டவர்கள் அவரவர் குறைநிறைகளுக்கு ஜாமபிரம்ப முகூர்த்தத்தில் தியான பூஜைகள் கடல் கடந்து செயல் புரியும் வண்ணம் உத்வேகத்துடன் நடைபெறுகின்றது. மேலும் வெளிநாட்டவர்கள் என்னிடம் தொடர்புகொள்ள 24 மணிநேர தொலைபேசி சேவையும் எம்மால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திட்டவட்ட ஜாதகக் குறிப்பு என்றால், என் கணிப்புத் திட்டவட்டமாக இருக்கும். செல்வாக்கு, செல்வாக்கு அருளியது எனது குருநாதர், சிவகாமியின் செல்வ குமரகுருபரனே!

நல்லது செய்ய நினையுங்கள், நல்லது நடக்கும்,
நல்வாழ்வு பெற என்னிடம் வாருங்கள்.
எல்லாம் நன்மைக்கே!

(என்னைச் சந்திக்க முன் அனுமதி பெற்று வருவது மிக முக்கியம்.)

* வெளிநாட்டவர்கள் ஐயாவிடம் நேரடியாக கதைக்க விரும்பினால் முன் அறிவித்தலுடன் (ஸ்கைப்) (Skype:drpksamy) மூலம் கதைக்கலாம்.

**DESABANTHU Prof.P.K.SAMY (J.D.G.A.N.) JP. ஐயா**

SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO.23,MAYFIELD ROAD, KOTAHENA, COLOMBO-13.
011-2470615, 011-2342463, 011-2342464. FAx.094-112344831

நுவரெலியா கிளை இல.33, Daily Fair Complex052-2222508



## காணி விற்பனைக்குண்டு

மட்டக்களப்பு நகரசபை எல்லைக்குட்பட்ட 15 போச் பரப்புள்ள காணி விற்பனைக் குண்டு. 10 ஆம் வட்டாரம் கண்ணகி அம்மன் கோவில் வீதி வெட்டுக்காடு எனும் முகவரியில் இக்காணி பிரதான வீதியில் இருந்து 25 மீற்றர் தூரத்தில் உள்ளது.

தொடர்புகொள்ள:-0653653674 R/029



## கம்சன் ஹாட்வெயர்

(மொத்த விற்பனையாளர்கள்)

நேரடி இறக்குமதியாளர்கள்

எம்மிடம்

மின்சார உபகரணங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், குளியலறைச் சாதனங்கள், விவசாய உபகரணங்கள், தச்சுவேலை உபகரணங்கள், மோட்டார் பொறியியல் உபகரணங்கள், ரைல்ஸ் கட்டிங், கதவுப் பூட்டுக்கள், ஆமைப் பூட்டுக்கள், வெல்டிங் உபகரணங்கள், பாதுகாப்பு உபகரணங்கள், கதவு, யன்னல் பிற்றிங் பொருட்கள், மற்றும் இதர ஹாட்வெயர் பொருட்கள்.



Tel:- 011 243 5413
011 233 2834
011 233 7353

235, பழைய சோனகத்தெரு,
(Old Moor Street)
கொழும்பு-12

(C/708)




அப்போது மேற்குத் திசையிலிருந்து அடிக்கும் ஊதல் காற்றிலிருந்து தப்பிப்பதற்காக அங்கு இருக்கும் காவல்காரர் தனது சேட்டின் கொலரை உயர்த்திவிட்டிருந்தார். பின்னர் தனது பொக்கற்றிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்து உதட்டில் பொருத்தி, நெருப்புக் குச்சியைப் பற்றவைத்தார்.

அப்போது ராபின்சன் அந்தக் காவல்காரரின் முகத்தைக் கவனித்தான். பருமனான, ஆட்டுக்கிடா மீசை வைத்த மனிதர் அவர். அவரின் உருண்டு திரண்ட கைகால்களை அவனால் அடையாளம் தெரிந்துகொள்ள முடிந்தது.

காவலுக்குப் போட்டிருப்பது சரியான பேர்வழியைத்தான். அவனுக்கு ஒரு விசயம் புரிந்தது. அவனால் விரைவாக ஓட முடியாது. தண்ணீரில் தூக்கிப் போட்டால் விரைவாக நீந்தவும் முடியாது.

பருமனான அந்தக் காவல்காரர் சிகரெட்டை ரசனையுடன் ஆழ்ந்து உறிஞ்சினால், இரண்டு இழுப்புக்குப் பிறகு பாண்ட் பொக்கட்டிலிருந்து சப்பையான போத்தல் ஒன்றை வெளியே எடுத்தார். அது அநேகமாக ரம் ஆகத்தான் இருக்க வேண்டும். மூடியை முரட்டுத்தனமாகத் திறந்தவர், அப்படியே வாய்க்குள் கவிழ்த்தார். சோடாவோ, தண்ணீரோ சேர்த்துச் சாப்பிடும் வழக்கம் அவருக்கு இல்லையென்று தோன்றியது.

சற்று நேரத்துக்குப் பிறகு விளக்கு வெளிச்சத்தில் போத்தலில் எவ்வளவு மீதி உள்ளது என்பதுபோல் தூக்கிப் பார்த்தார்.

அந்த விநாடியில்தான் ராபின்சன் பின்னாலிருந்து அவர் மீது பாய்ந்து அவர் கழுத்தைப் பிடித்தான். உண்மையிலேயே அப்போது ராபின்சனுக்கு ஒரு கருஞ்சிறுத்தையின் வேகம் இருந்தது.

ராபின்சனின் பிடி விநாடிக்கு விநாடி இறுகிக்கொண்டு வந்தது. எவ்வளவுதான் திமிறியும் முயன்றும் அந்தக் காவலாளியால் ராபின்சனிடமிருந்து விடுபட முடியவில்லை!

அவர் கண்விழிகள் துருத்திக்கொண்டு வந்தன. ஒரு சில நிமிடங்களுக்குள் அவர் துவண்டு விழுந்தார்.

அவரைக் கீழேவிட்ட ராபின்சன் ஒரு விநாடி நேரம் ஏரிப் பக்கம் பார்த்தான். பின்னர் "அது வேண்டாம்!" என்று நினைத்தவன் போல் அந்த உடலை இழுத்துக் கொண்டுபோய் மெதுவாக பங்களாவின் சுவர்ப்பக்கமாக நகர்ந்த ஒரு தூணின் நிழல் மறைவில் போட்டான்.

ராபின்சன் சத்தம் எழுப்பாமல் பங்களாவின் மையப் பகுதியை நெருங்கியபோது அங்கிருந்த காவல்காரர்கள் இருவரும் ரோஸியுடன் சுவாரஸ்யமாகப் பேச்சில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் ராபின்சனை எதிர்பார்க்காததாலோ என்னவோ அவன் பக்கமாகத் திரும்பவே இல்லை.

இந்த வாய்ப்பை நழுவவிடக் கூடாது என்று தீர்மானித்த ராபின்சன் பங்களாவின் நிலைவாசலை அடைந்தான்.

முன்னும் பின்னும் பார்த்தவாறு மெதுவாகக் கதவைத் தள்ளினான். "டக்" என்ற சத்தத்துடன் அந்தக் கதவு உள்வாங்கிக்கொண்டது.

உட்புறம் பார்த்தான். ஒரே இருட்டாக இருந்தது.

ராபின்சன் சற்றும் யோசிக்காமல் அந்த இருளுக்குள் இறங்கினான்.

இருளில் தட்டுத்தடுமாறி இரண்டு எட்டுக்களை முன்னோக்கி வைத்தபோது படிக்கட்டு ஒன்றில் கால் மோதியது.

உள்பொக்கட்டிலிருந்து பொலித்தீன் கவருக்குள் பத்திரமாக வைத்திருந்த பென் டோர்ச் லைட்டை எரியவிட்டான்.

தெளிவற்ற வெளிச்சம் அங்கு பரவியது. மேற்புறமாக வளைந்து வளைந்து செல்லும் இரும்புப் படிகள் தென்பட்டன. கீழிருந்து பார்த்துபோது ஒரு ஸ்க்ரூ போல் தெரிந்தது.

அதன் மூலம் மேல்மாடியை அடையலாம். ஒரு பூனை மாதிரி அவன் மேற்புறம் ஏறினான். அப்போது அவன் டோர்ச் லைட்டைப் பயன்படுத்தவில்லை. மேற்புறத்தை அடைந்தபோது அவன் தலை கதவு போன்ற ஒன்றில் மோதியது.

அது ஒரு நிலவறையின் மேற்புறக் கதவு மாதிரி இருந்தது. அவன் கையால் உந்தினான். கரகரவென்ற சத்தத்துடன் அது மேற்புறமாக உயர்ந்தது. அந்தக் கதவு பின்புறம் மட்டமல்லாக்க விழுந்து சத்தம் ஏற்படுத்தக் கூடாது என்பதில் ராபின்சன் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட்டான்

பக்குவமாக அந்தக் கதவைப் பிடித்துக்கொண்டு மேற்புறம் தலையை மட்டும் நீட்டி எட்டிப் பார்த்தான். சுற்றுமுற்றும் கவனித்தான்.

எங்கும் ஒரே இருள் மட்டுமே. சூழ்நிலை தனக்கு அனுகூலமாகத்தான் இருக்கிறது. உடம்பை எம்பி இடுப்பு வரை உயர்ந்தவன், அங்கு அமர்ந்தபின் கால்களை வெளியே எடுத்தான்.

அறைக்குள் எழுந்து நின்று பார்த்தான். அது இடுங்கிய ஓர் அறை. மிக நெருக்கத்தில் மேலிருந்து கீழ்நோக்கி ஒரு மெல்லிய கோடு மாதிரி வெளிச்சம் தெரிந்தது.

நெருங்கிப் பார்த்தான்.

அது ஒரு கதவு.

திறக்க முயன்றான். முடியவில்லை. அந்தக் கதவை மறுபுறம் தாழ்ப்பாளிட்டுப் பூட்டியிருக்க வேண்டும்.

சுவரில் கை வைத்து நான்கு புறமும் தடவிப் பார்த்தான். அங்கு ஜன்னலோ மற்றும் வேறு எந்தவிதமான திறப்போ தென்படவில்லை. அங்கிருந்து மறுபுறம் செல்ல வேண்டுமானால் தாழ்ப்பாளை நீக்க வேண்டும்.... வேறு வழியில்லை!

எப்படியிருந்தாலும் அது வரையிலான தனது பரிசோதனை வெற்றிபெற்றிருக்கிறது.

(தொடரும்...)

## ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையை அரசியல் சாணக்கியத்துடன்

# நோக்குவது எப்படி?

**தமிழ் கட்சிகளுக்கு ஓர் பகிரங்க வேண்டுகோள்...**

உயர உயரப் பறக்க முற்பட்டாலும் தமது வாழ்வு என்னவோ தரையில்தான் என்று விரக்தியுடன் பேசுகிறார்கள் அவர்கள். இந் நிலைமைகளில் இன்றைய இலங்கைச் சூழலில் தமது உடனடித் தேவையாக அழிவுகளற்ற, சமாதானமும் சுபிட்சமும் நிறைந்த வளமான வாழ்வையே கோருகிறார்கள் அம்மக்கள். சிறைகளில் அடைபட்டிருக்கும் தமது கணவர்கள், பிள்ளைகளின் விடுதலையை எதிர்பார்த்து தினம் தினம் கண்ணீர் வடிக்கிறார்கள். காணாமல்போன தமது உறவுகள் பற்றிய விபரங்களை அறியத் துடிக்கிறார்கள்.

மேலும் 30 ஆண்டுகால யுத்தச் சூழலில் சிதைந்துபோன தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான உதவிகளுக்காக காத்திருக்கிறார்கள். பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கான வழிகளை எதிர்பார்க்கிறார்கள். யுத்தச் சூழலில் இளமைக் கல்யாணத்துக்குட்பட்ட தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும் ஏங்குகிறார்கள். போரும் புதர்களும், களவும்,வன்முறைப் புணர்வும், அடிதடிகளும், கைது நடவடிக்கைகளும் அற்ற, சமாதானம் மிக்க சகவாழ்வையே தமது பிரதானமான எதிர்ப்பாகக் கொண்டிருக்கிறார்கள், அதற்காகவே ஏங்கித்தவிக்கிறார்கள் இன்றைய இலங்கைவாழ் எமது உறவுகள்.

ஐ.நா. பொதுச்செயலர் குழுவின் அறிக்கை, ஆளும் தரப்புக்கு தண்டனையைப் பெற்றுத் தருகிறதோ இல்லையோ தமது வளமான நீதியான சமாதானமான வாழ்வுக்கு வழிவகுத்தால் அதுவே போதுமானது என்கின்றனர் பொதுமக்கள். அப்பாவி மக்கள் விளங்கிக்கொண்ட இவ் அரசியல் சாணக்கியத்தில் சிறு துளியைக்கூட விளங்கிக்கொண்டவர்களாக தமிழ் அரசியல் தரப்புக்கள் இல்லை என்பதே கவலைக்குரிய விசயம். புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள், தனிமனிதர்கள். ஆனால் புலம்பெயர்வாழ் தமிழர்கள் கருத்துக்களோ நேர்மாறானவை. பாதுகாப்பான ஜனநாயகச் சூழலில் இருந்துகொண்டும், தமது பிள்ளைகளை தமது கமக்கட்டுக்குள் வைத்துப் பராமரித்துக்கொண்டும், அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆரோக்கியமான பார்வைகள் ஏதுமின்றியும், வெறுமனே பழிவாங்கும் மனநிலையில் இருந்து பேசுகிறார்கள். நாட்டில் வாழும் தமது சொந்தச் சகோதரங்களின் வாழ்நிலைகளை மறந்து மிகக் குறுகிய சிந்தைக்குட்பட்டிருப்பதையே இவர்களது பேச்சுக்கள் வெளிப்படுத்துகின்றன.

(யாழ்ப்பாணத்தில் இருந்து ஓர் இரவில் முஸ்லிம் சகோதரர்களை வெளியேற்றியதன் மூலம் இனச்சுத்திகரிப்புச் செய்தவர்கள் என்ற வகையிலும், காத்தான்குடி படுகொலைகளை மேற்கொண்டவர்கள் என்ற முறையிலும் அதற்கான பகிரங்க மன்னிப்பைக் கோராதவர்கள் இவர்கள். அவ்வகையில் நோக்கின், பிரித்தானிய தமிழர் பேரவை, நாடுகடந்த தமிழ் அரசின் உருத்திரகுமாரன், நெடியவன் குழு போன்ற புலிசார் நிலைப்பாட்டில் உள்ள இவர்களுக்கு போர்க்குற்றங்கள் பற்றிப் பேசுவதற்கு எந்தவித தார்மீக உரிமையும் கிடையாது என்பதே உண்மை. இவர்கள் தமது பழிவாங்கும் முயற்சிகளைக் கூட தாங்களோ அல்லது தங்களது பிள்ளைகள் மூலமோ செயற்படுத்த வேண்டும் என்றும் நினைக்கமாட்டார்கள். யாரோ ஒரு ஏழைக் குடிமகன் அதற்காக வருவான் என்பதே அவர்களது எண்ணம். அவ்வளவு சுயநலத்துடன் வாழும் இவர்கள் தமது சுயநலச் சிந்தை பற்றிய தெளிவற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

இந்நிலையில், புலம்பெயர்ந்து வாழ் தமிழர்கள் பற்றிய ஐரோப்பிய ஆய்வொன்று நினைவுக்கு வருகிறது. ஆம். இங்கு வாழும் 30 வீதத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் Post Trauma Stress Disoder (PTSD) எனும் விரக்தியினால் ஏற்படும் ஒருவகை மன அழுத்தத்திற்கு ஆழாகியிருக்கிறார்கள் என்பதே அவ் ஆய்வின் சாரம். இவ் ஆய்வை உண்மைப்படுத்தும் விதத்திலேயே, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களில் பெரும்பான்மையினரும் புலி சார் அமைப்புக்களும் ஊடகங்களும் கூட, இலங்கை வாழ் எமது உறவுகளின் வேதனைக்குரிய வாழ்நிலை குறித்து எவ்வித ஆய்வும் அக்கறையும் இன்றி, பழிதீர்க்கும் நோக்கில் தமது கருத்துக்களை முன்வைக்கின்றனர். பி.ரி.எஸ்.டி எனும் இவ் மனஅழுத்தத்திற்கு ஆட்பட்டிருக்கும் இம் மக்களின் ஆரோக்கியத்திற்கு உதவும் வகையில் இவை பற்றிய விரிவான தகவல்களை வெளிப்படுத்தவேண்டியதும் ஊடகங்களின் கடமை ஆகும். ஆனால் ஐ.பி.சி, ஜி.ரி.வி போன்ற ஊடகங்கள் தமது அரசியல் நோக்கத்திற்குச் சாதகமான முறையில் அம் மக்களை தொடர்ச்சியாக மனஅழுத்தத்திற்கு உட்படுத்தும் வகையில் மிகையான, யதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட வகையில் கருத்துக்களைப் பரப்பி வருகின்றன.

(தொடரும்)

# மனதுக்கு நிம்மதி

# சுயமுயற்சியின் பிரதிபலன் இதுதானா?



"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்

பொருளல்லது இல்லை பொருள்"

என்ற குறளை அறிந்திருப்பீர்கள். பொருள் என்னும் ஒற்றைச் சொல்லுக்கு இருக்கக்கூடிய அனைத்துப் பொருட்களையும், விளக்கங்களையும் இந்த ஒரு குறள் பேசிவிடுகிறது.

எந்த விதத்திலும் ஒரு பொருட்டாக மதிக்கத் தகுதியில்லாதவனிடமும் பணம் இருந்து விட்டால், அவனுக்கு மதிப்பும் முக்கியத்துவமும் கூடிவிடுகிறது.

பணத்தின் முக்கியத்துவம் இன்று கூடிவிட்டதாகவும், பணம் இருப்பவனுக்கு மட்டுமே மதிப்பு இருப்பதாகவும் நாம் சலித்துக் கொள்கிறோம். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் அதுதான் நிலைமை என்கிறார் வள்ளுவன். அதனால்தான், "செய்க பொருளை.." என்று வேறோர் இடத்தில் நமக்கு கட்டளை இடுகிறான்.

தனது கால்களில் வலிமை குன்றாமல் தரையில் ஊன்றி நிற்கும் ஒருவனால்தான், பக்கத்தில் வழுக்கி விழுபவரைக் காக்கவும் முடியும். தவறி விழுபவரைத் தூக்கி நிறுத்தவும் முடியும். அடுத்தவருக்கு ஓடியோடி உதவி செய்ய விரும்பும் ஒருவன், தனது கால்கள் உறுதி குறையாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்வது அவசியம்.

பிறருக்கு உதவி செய்ய நினைக்கும் எவரும், அதற்குத் தகுதியானவனாகத் தன்னை எப்போதும் வைத்துக் கொள்ளல் அவசியம். பொருளின்றி வாடும் ஒருவனால், எப்படி பிறரின் வறுமையைப் போக்கிவிட, துயரினை நீக்கிவிட முடியும்? வள்ளுவன் முதல் இன்றுவரை உள்ள சமூக ஆர்வலர் எவருமே, 'உனக்கு முதலில் பணத்தைத் தேடிக் கொள்" என்றே அறிவுறுத்துகிறார்கள்.

சுயமாகப் பொருள் தேடும் வழியை இளமையிலேயே கற்றுக் கொள்வது அவசியம். தாத்தா, தந்தை சம்பாதித்த பொருளன்றி, தனது அயராத உழைப்பினால் பொருள் தேடுபவரையே சாதனையாளராக உலகம் ஏற்றுக் கொள்கிறது.

"சுயமுயற்சியில் பொருள் தேட வேண்டும்" என்ற கருத்தில் வெளியே தெரியாத ஒரு கருத்து உண்டு. பொருளை எப்படி வேண்டுமானாலும் சேர்க்கலாமா? சிலர் அப்படி நினைக்கவே செய்கிறார்கள்.

"நாய் விற்ற பணம் குரைப்பதில்லை: கருவாடு விற்ற பணம் நாறுவதில்லை: என்ற பழமொழியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நாணத்தை மறந்து, நெறி பிறழ்ந்து பொருள் சேர்ப்பவர்களுக்கு, இந்த பழமொழி பயன்பட்டு விடுகிறது.

எது பொருளாகக் கருதப்படும் என்பதற்கும், பொருள் எப்படி தேடப்பட வேண்டும் என்பதற்கும், நமது முன்னோர்கள் நெறி வகுத்துத் தந்துள்ளனர். அறம், பொருள், இன்பம், வீடு என்பதற்கான விளக்கத்தை ஔவை சொல்லும் விதமே அழகு!

முறைதவறி, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, அடுத்தவரைச் சுரண்டி, அவர்கள் மனம் வருந்த நம்மிடம் சேரும் பணத்தைப் பொருள் என்றே நமது முன்னோர்கள் ஒப்பவில்லை. தனது சுய முயற்சியில், சுய உழைப்பில் ஒருவன் சம்பாதிக்கும் பணமே, அவனுக்கும் நன்மைகளைச் செய்யும்; அடுத்தவருக்கும் நன்மைகளைச் செய்யும்.

தீவினைகளால் சேர்ந்த செல்வம் என்றுமே நிம்மதி தருவதில்லை. ஆயிரம் ரூபாய் முறையற்ற வழியில் சம்பாதித்துவிட்டு, அதில் நூறு ரூபாயைக் கோயிலுக்கோ அல்லது தர்ம காரியங்களுக்கோ செலவு செய்வதில் எந்தக் கடவுளும் மகிழ்ச்சியடையப் போவதில்லை. அப்படி மகிழ்ச்சி அடைந்தால் அது கடவுளும் இல்லை!

திறனறிந்து, தீதின்றி வந்தபொருள் மட்டுமே அறத்தையும் இன்பத்தையும் தரும் என்ற வள்ளுவரின் கருத்து ஆழமானது. தீதின்றி வரவேண்டியது பணம் மட்டுமல்ல பதவி, செல்வாக்கு உட்பட எந்தச் செல்வமும்தான்.

வாழ்வில் வெற்றி பெறுவதும், சாதிப்பதும் மிக முக்கியமானவை. அதைவிட முக்கியமானது, அந்த வெற்றிகளும் சாதனைகளும் நிரந்தரமானவையாக இருக்கவேண்டும்.

நமது வியப்பிற்குரிய வெற்றியாளர் சிலர், சில நேரங்களில் வெற்று மனிதர்களாகி நிற்பதைக் காண்கிறோம். காரணம் ஒன்றுதான். "அவரை வெற்றியாளராக்கியது எதுவோ, அது தீது கலந்ததாக இருந்தது" என்பதுதான் அந்தக் காரணம்!

எந்த வெற்றியும் நிலையானதாக இருக்க ஒரே வழி, அது வரும் வழி நியாயமானதாக இருப்பதுதான். வாழ்க்கைக்குத் தேவையான பொருளையும் உயர்வையும், குறுக்கு வழி ஏதுமின்றி, உழைத்து நேர்மையாகத் தேடுவேன் என்ற உறுதியுடன் செயல்படுபவர் எவரும், எங்கும் சறுக்குவதே இல்லை.

வாழ்க்கைக்குத் தேவையான பொரு ளையும் உயர்வையும், குறுக்கு வழி ஏதுமின்றி, உழைத்து நேர்மையாகத் தேடுவேன் என்ற உறுதியுடன் செயல்படுபவர் எவரும், எங்கும் சறுக்குவதே இல்லை.

வாழ்வில் வெற்றி பெறுவதும், சாதிப்பதும் மிக முக்கியமானவை. அதைவிட முக்கியமானது, அந்த வெற்றிகளும் சாதனைகளும் நிரந்தரமானவையாக இருக்கவேண்டும்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 418

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | ■ |
| 13 | 14 | 15 | ■ | 17 | 18 |
| 19 | 20 | 21 | ■ | ■ | 24 |
| 25 | ■ | 27 | ■ | ■ | 30 |
| 31 | ■ | ■ | 34 | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

01. உலகப் பொதுமறை எனப்படும்.

07. உயிரினத்தின் ஆரம்ப நிலை. (திரும்பியுள்ளது)

10. ஒருவர் மீது சுமத்தப்படுவது. (திரும்பியுள்ளது)

13. நறுமணம் என்றும் அழைக்கலாம். (குழம்பியுள்ளது)

17. ஊழியம் என்றும் கூறலாம். (திரும்பியுள்ளது)

19. பெருங்காற்றை இப்படியும் கூறுவர். (குழம்பியுள்ளது)

34. வேட்டையாடுபவனை இவ்வாறு அழைப்பர்.

**மேலிருந்து கீழ்**

01. மாணிக்கவாசகர் அருளிய நூல்.

02. சீனியின் மூலப்பொருள். (குழம்பியுள்ளது).

04. பள்ளம் என்றும் கூறலாம்.

05. இறகுகள் கொண்ட உயிரினத்தின் பொதுப்பெயர். (குழம்பியுள்ளது).

15. வீட்டுக்கு வீடு இது என்று கூறுவர். (குழம்பியுள்ளது)

18. சேவை செய்பவனை இவ்வாறு கூறுவர்.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 24.05.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-418

தினமுரசு வாரமலர்,

த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.416க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

செ.கனகசபை,பீக்காசோ செரமிக் 97/A கண்டிவீதி, கம்பளை

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ப.முருகேசபிள்ளை, அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
02. மு.பத்மராணி, ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
03. செ.றொபேர்ட் 114 1/1, நியூநாம்குயர், கொழும்பு-13
04. சு.பாலமுரளிதரன், இந்துக்கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு.
05. ஏ.ஜே.பாத்திமா பஸ்னா, மகாபுத்கமுவ,கொட்டிகாவத்தை.
06. அ.சந்தியாகோ,தென்னங்கும்புர, கண்டி.
07. இ.லக்ஷ்மணன், ஜெயந்திநகர். கிளிநொச்சி.
08. கே.தனோஜிகா, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
09. எஸ்.காவியா,தோணிக்கல், வவுனியா.
10. அ.அருண்மொழி,கைதடி, சாவகச்சேரி.

## குறுக்கெழுத்துப் போட்டி 416- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மே | 2 தி | 3 ன | 4 ம் | ■ | 6 ரை |
| ■ | 8 த் | ■ | 10 தி | 11 ற | 12 ம |
| ■ | 14 அ | ■ | 16 ண் | ■ | ■ |
| 19 தி | ■ | ■ | 22 ம | 23 சு | 24 ஞ் |
| 25 தி | 26 து | ■ | ■ | 29 வை | ■ |
| 31 அ | 32 சா | 33 ச் | 34 ணி | ■ | ■ |

# சிறுநீர்ப் பிரச்சினைகளை போக்கும் முள்ளங்கி



சிவப்பு, வெள்ளை என இரண்டு வகையான முள்ளங்கிகள் இருக்கின்றன. இதில் வெள்ளை முள்ளங்கிதான் மருந்தாகவும், உணவாகவும் சாப்பிட ஏற்றது. சிவப்பு முள்ளங்கி கொஞ்சம் சுவையாக இருக்கும், அவ்வளவுதான்! கந்தகமும், பொஸ்பரசும் இதில் அதிகமாக இருக்கின்றது.

உடலுக்கு குளிர்ச்சியைத் தரும் இயல்புடையது முள்ளங்கி. குழந்தைகளைத் தாக்கும் காய்ச்சல், வயிற்றுப் பிரச்சினைகளுக்கு, முள்ளங்கிப் பிஞ்சின் சாறு நிவாரணம் தரும். இட்லி வேகவைப்பது மாதிரி முள்ளங்கிப்பிஞ்சை ஆவியில் வேக வைத்து, அதில் இருந்து சாறு எடுத்து பாலாடையில் வைத்து குழந்தைகளுக்கு பருக்கலாம். குழந்தைகள் குடிக்க மறுத்தால், கொஞ்சம் தேன் அல்லது சீனி கலந்து கொடுக்கலாம். இப்படிச் செய்தால் மலச்சிக்கல், சளித் தொந்தரவு போன்ற பிரச்சினைகள் இருக்காது.

சிறுநீர்ப்போக்கு இயல்பாக இல்லாமல் இருப்பது, சிறுநீர்ப் பாதையில் பிரச்சினை உள்ள பெரியவர்களும் இந்த முள்ளங்கிச் சாற்றைக் குடிக்கலாம். இருந்தாலும், இதை அடிக்கடி சாப்பிட்டால் வயிற்றில் பொருமல், எரிச்சல் போன்ற பிரச்சினைகள் வரும். எனவே, அளவாக சாப்பிடுவது நல்லது.



# தீண்டும் இன்பம் 17

**“நான் சொல்வது** தப்பென்றால் இந்தத் தொழிலை விடுறன்... என்ர பரிசோதனை தப்பிறதே இல்லை யம்மா.”

டொக்ரர் கொடுத்த பேப்பர் கைக்குட்டையில் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

“முதல்ல திகதி சரியாத் தெரிய வேணும்... அதைப்பொறுத்துத்தான் சிகிச்சை முறையே வேறுபடும். மூணு மாதம் ஆனால் எதுவுமே பண்ண முடியாது... முதல்ல போய் உன் அம்மாவைக் கூட்டிக்கொண்டு வா...”

“ அம்மாவையா?”

“ஏன் அம்மா இல்லையா?”

“இருக்காங்க, வரமாட்டாங்கா...”

“சரி... அப்பா..?”

“அவரும்...”

“பாரம்மா பொறுப்பெடுத்துச் செய்யிற பெரியவங்க இல்லாம” அவர் குரலை உயர்த்தி “இந்தமாதிரித் தனியா வந்துசெய்துகொண்டு போறதுக்கு நான் எதும் பியூட்டி பார்லர் நடத்தேல்லை. உன்னைப் போல உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவங்கள் எல்லாம் எங்க உசுரை வாங்கறதுக்குப் பதிலாகப் பேசாம ரெயில்ல விழுந்து சாகலாம்.”

அகல்யா மற்றொரு பாட்டம் அழுதாள்.

“ அழாத...” மீண்டும் தொலைபேசியை எடுத்து கிருத்திகாவுடன் பேசினாள்.

“ நீ ஒரு பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்தாய் பாரு நேற்று... அது மறுபடியும் வந்திச்சு. காலையில யூரின் எடுத்துக்கிட்டு, அவ கர்ப்பமாக இருக்கிறாள் என்று தெளிவாகிற்று” என்றாள் கிருத்திகாவிடம்.

டொக்ரர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள் அகல்யா. அவள் வயிற்றில் கலக்கம் பரவியிருந்தது. இல்லை... இல்லை... எல்லாமே பொய். எனக்கு ஏதும் ஆகவில்லை.

“சரியாகவே பாத்திட்டேன். எச்.ஸி.ஜி லெவல் யூரின்ல அறுபதாயிரம் எம்.எல்.யு இருக்கு. நூறு இருந்தாலே கர்ப்பம் என்று சொல்லுவோம். ஒரு இரத்தப் பரிசோதனை எடுக்கிறன். பெரும்பாலும் முடிவாகிடும். என் கேள்வி என்னென்றால் என்ன செய்யிறது. ஆனால் இந்தப் பெண்ணை யார் பொறுப்பேத்துக்கப் போறாங்க.. அம்மா, அப்பா யாராவது ஒருத்தரோட சம்மதம் வேணும்... அது இல்லாம நான் தொடமாட்டேன்.”

**அகல்யா கர்ப்பமாக இருப்பதை கிருத்திகா சாரீமேடம் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தாலும் அகல்யாவுக்கு அடிவயிற்றில் கத்தி வைத்தது போல் இருந்தது. அவள் தனக்கு ஏற்பட்ட சில சம்பவங்கை மீட்டிப்பார்த்தாள். ப்ரமோத்துடன் விருந்துக்குப் போனது பின் ஸ்ரீதருடன் தனது விடுத்திக்கு வந்ததும் விடுதி பூட்டியிருந்தால் ஸ்ரீதரின் விடுதியில் தங்கியது. பின்பு நடு இராத்திரியில் வீழிக்கும் போது ஒரு ஸ்பரிசம்... உடனும் அகல்யா டொக்ரருடன் பேசினாள். பின்னர் அகல்யாவின் யூரின் பரிசோதனையின்படி அவள் முற்றுமுழுதாக கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது. ஆனால் இது எப்படி தனக்கு நிகழ்ந்தது என்று தெரியாமல் அகல்யா விழித்தாள்.**

டொக்ரர் போனை அகல்யாவிடம் கொடுத்து, “இந்தா, கிருத்திகா உன்னோட பேசணுமாம்...” அகல்யா அதை நடுங்கும் கரங்களால் வாங்கிக்கொண்டு ஹலோ சொல்வதற்குப் பதில் அழுதாள்.

“அகல்யா அகல்யா பாரு... டொக்ரர் என்னிடம் எல்லாம் சொன்னா. உன்னைப் பதினொரு மணிக்கு வந்து பார்க்கிறேன். பதட்டப்படாதே. நான் எல்லாத்தையும் பொறுப்பெடுக்கிறேன். நடக்கக் கூடாதது நடந்திடுச்சு. நீ வா... சும்மா பேசிக்கொண்டிருக்க வேண்டாம். டொக்ரரிடம் போனைக்கொடு.

“என்ன கிருத்திகா”

“........”

“எனக்கென்னமோ அறிகுறிகளைப் பார்த்தா இது கர்ப்பம்தான். ஆனால் விபரம் தெரியாத பெண்ணா இருக்கு. சரி அப்படியே செய்யிறேன்.”

போனை வைத்துவிட்டு அகல்யாவிடம், “இங்கேயே இரு... கிருத்திகா வாறாளாம். முதல்ல அழுறதை நிப்பாட்டு. யார் இதுக்குக் காரணமோ அவனை விடாதே என்ன” என்று சொல்லிவிட்டு அவளை அறையில் தனியாக விட்டுவிட்டுச் சென்றாள். ஒரு மருத்துவ தாதி வந்து அவள் இடது கையில் இரத்தக் குழாயை நிரடித் தேடி ஊசியைச் செலுத்தி கருஞ்சிவப்பாக இரத்தம் வாங்கிக்கொண்டு,“கையைக் கொஞ்சநேரம் உயர்த்தி வைச்சுக்கம்மா... கல்யாணம் ஆகிடுச்சா?” என்று கேட்டுவிட்டுச் சென்றாள்.

யார்? யார்? அகல்யாவுக்குச் சரியாகச் சொல்ல முடியவில்லை. ஏதோ பெயர் சொன்னானே, அவனா?

சற்று நேரத்தில் கிருத்திகாசாரி மேடம் வந்து நேராக டொக்ரரின் அறைக்குள் சென்று பத்துப் பதினைந்து நிமிடம் பேசிவிட்டு வெளியே வந்தாள்.

“கலைப்படாதே அகல்யா... கலைச்சிட ஏற்பாடு செய்யலாம். இதை உங்க அப்பா,அம்மாக்கிட்ட நீ சொல்லுறியா நானும் கூட வரட்டுமா?”

“வேண்டாம் மேடம்.”

“அதிக நாள் தாமதிக்கக் கூடாது. வாற வெள்ளிக்கிழமை வைக்கலாம் என்று டொக்ரர் சொன்னா. காலைல சாப்பிடா வெறும் வயத்தோட வரச் சொன்னா. அப்பா அல்லது அம்மா யாராவது ஒருவருடைய சம்மதம் இல்லாம அவ பண்ணமாட்டா. அதனால...”

“மேடம்... நிச்சயமா அது? எனக்கென்னவோ தப்பா சொல்றாங்க போல...”

“ஒண்டும் தெரியாம வளந்திருக்கிறியே... இப்பவெல்லாம் கண்டுபிடிக்கிறது மிகவும் சுலபம். ஒரு பெண் கர்ப்பமான உடனே அவ உடம்பில எச்.ஸி.ஜி என்று ஒரு ஹோர்மோன் உற்பத்தியாகிறது. அதன் அளவை சிறுநீரிலையும் இரத்தத்திலையும் சுலபமா கண்டுபிடிக்க முடியும். கர்ப்பமான இரண்டாவது வாரத்திலேயே தெரிஞ்சிடும். அஞ்சு நிமிஷத்தில எல்லாம் கண்டுபிடிக்கலாம்.”

உலகமே தலையில் வந்து நொறுங்கி விழுந்தாற்போல உணர்ந்தாள் அகல்யா. “இப்ப நான் என்ன செய்வேன்?”

“ஏதும் செய்ய வேண்டாம். யார்க்கிட்டயும் சொல்லாதே. டொக்ரரும் வேற யாரிட்டையும் சொல்லமாட்டா. உனக்குப் பணம் தேவைப்படும். வெள்ளிக்கிழமை வரைக்கும் என்கூட இரு. விடுதிக்குப் போக வேண்டாம். அதற்குள் உங்கம்மாவிடம் பேசிப்பாரு. என்ன? தைரியமாக இருக்கணும். யாரும் இதுக்காக உன்னைச் சுட்டுர முடியாது. பயப்படாதே. உனக்கு இயற்கையா என்ன உணர்ச்சிகள் வருதோ அதைக் கட்டுப்படுத்தாதே. அழவேணும் என்றால் அழு. சந்தோஷமாக இருந்தாலும் சரிதான்.

அகல்யா அவளை விநோதமாகப் பார்த்தாள்.

“ சில சமயம் பெண்களுக்கு அதிக சந்தோஷம் கூடத் தோன்றுமாம். மற்றொரு உயிரை உண்டாக்கிறதிலயும் அதில உள்ள அபாயத்திலயும் உனக்கு எப்படி இருக்கு?”

“செத்துப்போகணும் போல இருக்கு.”

“நீ மிகவும் நல்ல பெண் என்று நினைச்சேனம்மா. யாரோ ஏமாத்தியிருக்காங்க உன்னை. யார் காரணம்? உன்னோட பழகின அந்த ப்ரமோத்தானா? கடன்காரன். அவனைக் கூப்பிட்டுவைச்சு கன்னம் கன்னமா அடிக்கோணும். பாரு அகல்யா அதெல்லாம் பிறகு பார்ப்பம். இப்ப உடனே அவசரமாக மிக அதைக் கலைக்கவேணும். ஓசைப்படாம... யார்க்கிட்டேயும் ஏதும் பேசாதே என்ன..”

“மேடம் எங்கம்மாவை என்னால கேட்கவே முடியாது.”

**இன்பம் தொடரும்**

இவ்வாரச் சிறுகதை



# அம்மா + அப்பா = நான்

நன்றி - இணையம்

**அம்மா** அப்பாவுக்குள்ள எப்பவும் சண்டைதான். எதுக்குத்தான் சண்டை வருதென்று சொல்லவே முடியாது. எப்பப்பார்த்தாலும் சண்டைதான். ஏதாச்சும் ஒன்றை அம்மா சொல்ல, அதை அப்பா மறுத்துப் பேச அல்லது அப்பா சொல்ல அதை அம்மா முடியாது என்று சொல்ல, சண்டை வரும். அப்படியே பேச்சுக்குப் பேச்சு, வார்த்தைக்கு வார்த்தை என்று வளர்ந்துகொண்டே போகும்.

எதுக்காக இவங்க இரண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்கன்னு எனக்குத் தோணும். ஒருத்தருக்கொருத்தர் சண்டை போடணும்னு எங்கேயாவது, யாராவது சேருவாங்களா?. அல்லது சேர்த்துதான் வைப்பாங்களா? சந்தோஷமா, ஒத்துமையா வாழணும்னுதானே கல்யாணம் பண்ணி வைக்கிறாங்க? ஆனா இப்படி சண்டை போடுவாங்கன்னு அவுங்க என்ன நினைச்சா இருப்பாங்க? அப்படி நினைச்சிருந்தாந்தான் இப்படி வந்து வந்து சமாதானம் பண்ணுவாங்களா? அதுதாங்க இதிலே அதிசயம்! ஆச்சரியம்!!

““யேய் ஸ்ருதி! உங்க அம்மாட்ட ஒரு பேமிலி லுக் இருக்குடி. அது பார்க்க ரொம்ப அழகு.””

என் பிரண்ட் ரமா எத்தனை வாட்டி சொல்லியிருக்கா தெரியுமா? அது போல ““டீ...உங்கப்பா படு ஸ்டைலா இருக்காரேடி...” அன்றைக்கொருநாள் என் தோழி சாந்தினி சொன்னதைத்தான் அப்பா விருந்தாளிகளை வரவேற்றப்போ நினைச்சிக்கிட்டேன் நான்.

“ஹல்ல்ல்ல்லோ....”ன்னு சொல்லிக்கிட்டே அப்பா போய் கைகொடுத்துக் கூப்பிட்ட அழகிருக்கே! அது உண்மையிலேயே ஸ்டைலிஷ் தான்... அப்பா வலிய அப்படிச் செய்றதில்லை. அது இயற்கையாவே அவருக்கு அமைஞ்சு போயிருக்கு. அவ்வளவுதான். இவுங்க ரெண்டுபேரும் மூஞ்சியப் பார்த்துக் கிறதும், சிரிக்கிறதும், சுமுகமாப் பேசிக்கிறதும் எல்லாமும் போலி தானே? இல்லன்னா யாரும் இல்லா தப்போ ஏன் அப்படி வள்வள்னு விழுந்துக்கணும்?

அதனால என் மனசு எப்படி பாதிக்கப்படுது? என் படிப்பு எவ்வளவு பாதிக்கப்படுது?

அம்மா அப்பாவப் பார்த்துக்கிட்டே, அவுங்க முன்னாடி இருந்துக்கிட்டே, எதிர்க்க தாத்தா பாட்டி படத்து முன்னால உட்கார்ந்து படிக்கணும்னு ஆசை எனக்கு. ஜன்னல் வழியா, வேப்ப மரத்து இடுக்கு வழியாத் தெரியற நிலா வெளிச்சத்தைப் பார்த்துக்கிட்டே அது நகர்றபோது புள்ளிப் புள்ளியா இலைகளுக்கு நடுவிலே வெளிச்சம் தெரியுமே அந்த அழகைப் பார்த்துக்கிட்டே படிப்பேன் நான். இது இவங்களுக்குத் தெரியுதா? எப்படிப் படிச்சா, எந்த இடத்துல உட்கார்ந்து படிச்சா என் மூளைல ஏறும்ங்கிற புத்தி இவுங்களுக்கு வேண்டாம்? இதெல்லாம் சொல்லப் போனா சண்டைதான். ஏற்கனவே இருக்கிற சண்டை போதாதா?

‘ஸ்ருதி, போ உன் ரூமுக்குள்ளே!’ அங்கே போய்ப்படி...’ -இது மட்டும் சொல்லத் தெரயும். ஆனா சண்டை போடாம இருப்போம்ங்கிறது தெரியாது.

“ரொம்ப மனசு வெறுத்துப் போச்சுங்க எனக்கு. அப்பான்னா எனக்கு பிரியம் ஜாஸ்தி... அதுக்காக அம்மாவை எனக்குப் பிடிக்காதுன்னு சொல்ல மாட்டேன். என்னதான் சண்டை போட்டாலும் வச்சாலும், ஏனோ தெரியலை... அப்பாவைப் பார்க்க எனக்குப் பாவமா இருக்கும்...” பல சமயங்களில அப்பா தனியா உட்கார்ந்திருக்கச்சே.. எதையோ யோசிச்சிக்கிட்டே இருக்கிறாமாதிரி தெரியும் எனக்கு. மனசு சரியில்லன்னா, இல்ல இல்ல, அப்பா மாடில இருக்கிறார்னா அவருக்கு மனசு சரியில்லைன்னு அர்த்தம். அப்படிச் சமயத்துலகூட அப்பா எங்கிட்ட, ‘நீயும் வர்றியாடான்னு’ என்னைக் கூப்பிடுவாரு.

அதுதான் அப்பாட்ட எனக்குப் பிடிச்சது. டா போட்டுத்தான் அப்பா என்னைக் கூப்பிடுவாரு.

எப்படியாவது தனிமைல ரெண்டு பேரும் மனசு விட்டுப் பேசிக்கட்டுமேங்கிறது என் எண்ணம். ஆனா நாம நினைக்கிறது எங்கேங்க நடக்குது.

அப்பா வேலைல ரொம்ப சின்சியர். ஆனா அம்மா அப்படியில்லை. வீட்டு வேலைல கூட அம்மா அப்படி இப்படித்தான்... சாயங்காலம் அப்பா ஒபீஸ் விட்டு வர்றபோது, அம்மா கொஞ்சம் முன்னாடியே வந்திருப்பாங்க... அப்பாவுக்கு ஒபீஸ் ரொம்பத் தூரம். வீட்டுலேர்ந்து பத்துக் கி.மீ. தள்ளி இருக்குது. அம்மாவுக்குப் பக்கத்துலதான். இத்தனைக்கும் அப்பா காலைல ஒபீஸ் போறச்சே அம்மாவைக் கொண்டு விட்டிட்டுத்தான் போவாரு.

“நீ உன் ஒபீஸ் டயத்தை மதிக்கலே... லேட்டாப் போறே... ஆனா நான் அப்படி இருக்க முடியாது. மானேஜரே லேட்டா வர்றாருன்னு பேசுவாங்க... என்னைப் பார்த்து மத்தவங்களும் லேட்டா வர ஆரம்பிச்சிடுவாங்க... அதனால சீக்கிரம் கிளம்புன்னு அப்பா அவசரப்படுத்துவாங்க... அம்மா அதையெல்லாம் காதுல வாங்கிக்கிட்டாத்தானே? இப்டித்தாங்க ஒவ்வொண்ணுக்கும் சண்டை. ‘நீ பஸ்ல போய்க்கோ.... சொல்லிட்டு அப்பா விருட்டுன்னு வண்டிய எடுத்திட்டுப் போயிடுவாங்க...

ஆனா ஒண்ணுங்க... அடிக்கடி இவுங்க இப்படி ஒண்ணுமில்லாத விஷயத்துக்கெல்லாம் சண்டை போடுறதப்பார்த்தா... ஏதோவொண்ணுல சுத்தமாப் பிடிக்காமப் போயி, அந்த வெறுப்புலதான் இப்படி அடிக்கடி சண்டை வருதோன்னு தோணுது எனக்கு.

இதெல்லாம்தாங்க எனக்கு அட்வைஸ்.. வெறும் காசு வந்து என்னங்க புண்ணியம்? எங்க வீட்டுல சந்தோஷமில்லியே? அதே காசை வச்சிட்டு அம்மா அப்பாவோட ஹோட்டலுக்குப் போயி, விதவிதமா வாங்கிச் சாப்பிட்டு, கடைக்குப் போயி புதுசு புதுசா டிரஸ் எடுத்துக்கிட்டு, என் ப்ரெண்ட்ஸ்கிட்டெல்லாம் காண்பிச்சு... எல்லாந்தான் ஆசை. ரெண்டு பேரும் வரணுமில்லே? வர மாட்டாங்களே....?

இதுவரைக்கும் நான் ரெண்டு பேர்கூடவும் ஒரு தடவை கூடச் சேர்ந்து போனதில்லைங்க.. நீங்க நம்பினா நம்புங்க... நம்பாட்டிப் போங்க... இவுங்க ரெண்டு பேருக்குள்ளும் வேறே என்ன இருக்கும்?

அதுதான் எனக்கு இன்னைக்கு வரைக்கும் புரியல...

அதுனாலதான் என்னால வீட்டு வேலைகள்ல கூட அம்மாவுக்கு உதவ முடியல... அம்மா கூடச் சேர்ந்து செய்து பழகுடா கண்ணு...ன்னு அப்பா சில சமயம் சொல்வாரு... அவரைப் பார்த்தா பாவமா இருக்கும் எனக்கு... அவர் வார்த்தைக்காகச் எப்பவாவது செய்வேன்...

“அடடே! அங்க யாரு?... அப்பா...அப்பா...அங்கே பாருங்க...!!” எதையோ கண்டுவிட்டதுபோல அப்பாவின் முகத்தைத் திருப்பி, அந்த திசையை நோக்கிக் காண்பித்தேன் நான். அப்பாவின் பார்வை ஒரு நிமிடம் கலங்கி, பிறகு தெளிந்து, கூர்மைப்பட்டது. அங்கே....

“யாருப்பா அது? யாருப்பா...?அம்மாதானே? நம்ம அம்மாதானே??”

கண்கள் நிலைகுத்தி அங்கேயே வெறித்துக் கொண்டிருந்த அப்பாவின் முகம் அந்த நிமிடத்தில் ஏன் அப்படி விகாரமாகிறது? அய்யோ, என் அப்பாவின் முகமா இது? இதுவரை இப்படிச் சிவந்து, இருண்டு, பார்த்ததேயில்லையே? அது சரி... அந்த புடைவைக்கடையின் வாசலில், மஞ்சள் வெளிச்சத்தில், கையில் ஒரு பார்சலோடு அம்மாவிடம் நீட்டியபடி நிற்பது யார்? அதோ, அதை அம்மாகூட வாங்கிக் கொள்கிறார்களே? அந்த இன்னொரு ஆள் யார்? என்னவோ தோன்ற நான் அப்பாவின் முகத்தைப் பார்க்கிறேன். அடடே! ஞாபகம் வந்திடுச்சு.. ஹாங்...அந்த அங்கிளா இது? அவுங்கதானே? எங்க, இன்னும் கொஞ்சம் நல்லாப் பார்ப்போம்... ஆமாம், அவரே-தான்... அன்னைக்குக்கூட ஒரு நாள் வீட்டுக்கு வந்திருக்காரே? தெரிந்தும் தெரியாதது போல் நான் இருந்தேன்.

ஓடும் பஸ்ஸில் கலங்கியிருந்த அப்பாவின் கண்களைக் கண்டு என் மனசும் கலங்கிப் போக, அப்படியே அப்பாவின் நெஞ்சில் முகம் புதைத்து அவரின் இறுகிய அணைப்பில், என்னவோ மனதைப் பாதித்த உணர்வில், விசித்து அழ ஆரம்பிக்கிறேன் நான்!!! ■

# பொன்மொழி



சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பது என்பது பொருள்.

சுவாமி விவேகானந்தர்

## சிந்தியா பதில்கள்

✉சிந்தியா! ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராகத் தமிழ் மக்களிடம் கையெழுத்து வாங்கிய சம்பவம் எதை வெளிப்படுத்துகிறது?

**எஸ். வரதராஜா, யாழ்ப்பாணம்.**

● அண்மையில் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களிடம் கையெழுத்து வாங்கும் நிகழ்வொன்று முறையற்ற விதத்தில் நடைபெற்றதாகச் செய்திகள் தெரிவித்தன. இதேபோல் கிழக்கு மாகாணத்திலும் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் ஏற்புடையதல்ல. தமிழ் மக்களின் கருத்துக்கள் என்பது, கவசமானதாகக் கருதப்படுமேயானால் அதைச் சாதகமாக்கிக் கொள்வதற்குப் பல்வேறு வாய்ப்புக்கள் இருக்கின்றது.

பிரதானமானது. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குக் கௌரவமான தீர்வொன்றை வழங்குவதாகும். இவ்வாறான நடவடிக்கைகள் தமிழ் மக்களிடத்தே இருக்கும் நம்பிக்கையீனங்களை இல்லாது செய்துவிடும். அத்தகையதொரு நிலையானது ஐ.நா. சபை மட்டுமல்ல ஆண்டவன் சபையே எதிர்த்து என்றாலும் எங்கள் நாடு, எங்கள் தேசம், எங்கள் இறைமை, எங்கள் அரசு என்றொரு நிலையை உருவாக்கும். அதனை ஏனோ கையெழுத்து வேட்டைக்காரர்கள் புரிந்துகொள்ளவில்லை.

✉சிந்தியா! ஒசாமா பின்லேடனின் கடைசி ஒளி நாடாவில் இளவரசர் ஹரியைக் கொல்லும் திட்டத்தின் உள்நோக்கம் என்ன?

**கே. மதன், மட்டக்களப்பு.**

● பயங்கரவாதம் எப்போதும் பிரபலமான இலக்குகளைத் தெரிவு செய்வது இயல்பு. ஏனென்றால் தாக்கம் ஒன்றாயினும், வீச்சுப் பெரிதாக இருக்க வேண்டும் என்பதாகும்.

பயங்கரவாதத்திற்கு நேரெதிரானவர்கள் எப்போதும் தங்களது பாதுகாப்பில் அக்கறையாக இருப்பார்கள். ஹரி போன்ற பிரபலங்கள் பயங்கரவாதம் என்பதை செய்திகளாகப் படிப்பதில் மட்டுமே தெரிந்துகொண்டவர்கள். அத்தகையவர்களை நெருங்குவது எவரும் எதிர்பார்க்காத இலக்குகளாகவும் இருக்கும். அப்படி ஒசாமாவும் நினைத்திருக்கக்கூடும்.

✉சிந்தியா! 2 ஜி. ஸ்பெக்ட்ரம் ஊழல் சர்ச்சையின் முடிவுதான் என்ன?

**ந. தாமரைச்செல்வி. கண்டி.**

● நீதிமன்ற விசாரணை தொடர்கின்றது. கலைஞரின் மகள் கனிமொழியும் குற்றவாளியாக விசாரணைகளை எதிர்நோக்கியிருக்கின்றார்.

அந்தவகையில் ராசாவின் கைவண்ணத்தால் கோடிகளைப் பார்த்த கேடிகளைத் தேடி விசாரணைக் கை நீளும் முடிவு. முடிவு பறிமுதல் செய்வதே முடிவாக இருக்கலாம். மாற்றத்தையெல்லாம் அரசியல் பாதுகாக்கும்.

✉சிந்தியா! இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் ஒவ்வொரு வகைப் போட்டிகளுக்கும் வெவ்வேறு அணித்தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இது அணிக்கு ஆரோக்கியமாக அமையுமா?

**கு. பாஸ்கரன், திருகோணமலை.**

●இல்லை. ஒரே நோக்கத்திற்காகச் செயற்படுபவர்களிடையே குழுவாதம் தலைதூக்குவது ஆரோக்கியமானதல்ல. அது இருக்கின்றவற்றையும், சிதைத்துப் போட்டுவிடும்.

இங்கிலாந்து கிரிக்கெட்டின் தந்தை என்ற அந்தஸ்தில் இருந்தாலும் அவர்களால் உலகம் வியக்கும் வெற்றி ஒன்றை பெற முடியாமல் இருப்பது அவர்களின் இத்தகைய விஷப்பரீட்சையின் அடிப்படைக் காரணமாகும். அவர்களைப் பொறுத்தவரை எவர் தலைவரானாலும் தேவை உலக மகா வெற்றி ஒன்றேயாகும்.

✉சிந்தியா! எதிரியை நம்பினாலும் துரோகியை நம்பக் கூடாது என்பதில் நியாயம் இருக்கின்றதா?

**ம. தனோஜிகா. மன்னார்.**

●நிச்சயமாக எதிரி கண்ணுக்குத் தெரிந்தவன். துரோகி கண்ணுத் தெரியாதவன். தீங்கு விளைவிக்க அதிக வாய்ப்பு துரோகிக்கே உண்டு. ஆகையால் எதிரியை விடவும் துரோகி ஆபத்தானவன்.

துரோகிகள் துரோகிகளாகவே உருவாகுவதில்லை. நிச்சயமாக முன்னாள், இந்நாள் நண்பர்கள் அல்லது நட்புக்குரியவர்களே பெரும்பாலும் துரோகிகள் ஆகியிருக்கின்றார்கள். துரோகிகளை உருவாக்காமல் இருப்பதற்கு நாம் எவரையும், எதையும், எப்போதும் அளவோடும், சரியான மதிப்பீட்டோடும் வைத்திருக்க வேண்டும். உதாரணத்திற்கு கட்டிப்பிடிப்பவனுக்குத்தான் நமது உடம்பில் எது பலவீனமான பகுதி என்பது தெரியும்.

✉சிந்தியா! நாகரிகம் என்ற போர்வையில் அநாகரிகமாக நடப்பது பற்றி..?

**ஜே. கவிதா, வவுனியா.**

●இரண்டுக்கும் இடையே 'அ' தான் வித்தியாசம் ஏற்றுக் கொள்வதிலும், உள்வாங்கப்படுவதிலும் நிதானமாக இருப்பவர்கள், நாகரிகம் தெரிந்தவர்கள்.

நிதானம் இழப்பவர்கள் அநாகரிகமானவர்கள்.

✉மது, போதைவஸ்து பாவனை இலங்கையில் அதிகரித்துவிட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றனவே சிந்தியா?

**ஜே. கவிதா, வவுனியா.**

●பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கியிருப்பதற்காக அல்லது நம்மை மறந்திருப்பதற்காக போதையை நாடுவதாக நமது குடிப்பெரும் மக்கள் கூறுகிறார்கள்.

அவர்களை நம்பி அதை பரீட்சித்துப்பார்க்க நான் தயாராக இல்லை.

இன்னொரு வகையில் சொன்னால், போதைக்கு அடிமையாகின்றவர்கள் எண்ணிக்கை அதிகமானது என்றால், நாட்டில் தனி மனித சகிப்புக்கும் மேம்பட்ட பிரச்சினைகளும் உண்டு என்பதை ஒரு வாதத்திற்காக, ஏற்றுக்கொள்ளலாம்.

ஒருவேளை பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் குடிப்பெரும் மக்களின் எண்ணிக்கை குறையக் கூடுமோ?





# அலைமோதும் அபலை

**27**

**கே.வி. குணசேகரம்**



காதலைப் பற்றிச் சங்ககாலப் புலவர்கள் மிகவும் அருமையாகவும் உண்மையாகவும் கூறியுள்ளனர். சங்ககாலத்தில் வாழ்ந்த புலவர்கள் காதலைப்பற்றியும் வீரத்தைப் பற்றியும் விபரமாகவும் வித்தியாசமாகவும் கூறியுள்ளனர். வெள்ளிவீதியார் என்ற புலவர் காதல் கொண்ட ஒரு பெண்ணின் உணர்வுகளை உணர்ச்சி பூர்வமாகக் கூறுகிறார். ஒருத்தி ஒருவன் மீது காதல் கொள்கிறாள். அவன் பிரிந்துசென்று விடுகிறான். கடற்கரையோரமாக அவளும் அவளது தோழியும் சந்திக்கின்றனர். தோழி கேட்கிறாள், "என்ன ஒரு மாதிரியாக இருக்கிறாய்? முகம் வாடி களை இழந்திருக்கிறது. கண்கள் எதையோ இழந்துவிட்டதைப் போல வாடிச் சோர்ந்து இருக்கின்றன. முகத்தில் பொலிவில்லை. கதைகளிலும் மகிழ்ச்சியில்லை. ஏதாவது சுகமில்லையா...?" என்று கவலையுடன் கேட்கிறாள்.

மெதுவாகச் சிரித்த அவள் சொல்கிறாள். "அன்பான எனது தோழியே! கடற்கரையில் உள்ள மண் அணையைப் பார். மண்ணைக் குவித்து உயரமாகக் காட்டப்பட்டுள்ளது. அலைகள் வந்து மோதியதும் அம்மண் அணை இடிந்து சரிந்து கடலலையோடு செல்கிறது."

"அதற்கென்ன இப்போ...?" தோழி வியப்புடன் கேட்கிறாள்.

"அதுபோலத்தான் எனது மனதில் அச்சம், மடம், நாணம் என்ற அணை ஒன்று பலமாக இருந்தது. அது அவரைக் கண்டதும் மனதுள் எழும் காம உணர்வுகளால் அடித்துச் சென்றுவிட்டது. இன்று அச்சம், மடம், நாணம் என்ற எனது திடமான உறுதிகலந்து அவரின் நினைவு அலைகளாகப் பொங்கி அதை அடித்து விழுத்திக் கரைத்துச் செல்ல, அவரது அணைப்பு வேண்டும் என்று மனம் அலை அலையாகப் பொங்குகிறது. அதை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. என்ன செய்வது எனது பெற்றோர் இதற்கு உடன்படார்" என்று விம்மினாள் அவள்.

"இனி உன்னைக் காப்பாற்ற முடியாது. அவருடன் சென்றுவிடு" என்கிறாள் தோழி.

"அவருடன் செல்லச் சொல்கிறாயா...? என்று ஏக்கத்துடன் கேட்கிறாள் அவள்.

காதலி காதலனைக் காணாது படும் மனவேதனையை வெள்ளிவீதியார் என்ற புலவர் கற்பனையில்லாது உண்மையாக் கூறுகிறார். கடல் அலைகளைவிட சக்திவாய்ந்தவை காதல் உணர்வுகள் என்பதை இப்பாடல் மூலம் புலவர் உணர்த்துகிறார். காதல் கொண்டவர்களுக்குத் தீர்வு காதலனுடன் செல்வதுதான் என்பது புலவரது வாதம். புலவரது உணர்ச்சிமிகுந்த பாடல் இது.

**அளிதோதானே- நானே நம்மோடு**
**நனி ங்கு உழந்தன்று மன்னே; இனியே,**
**வான்பூங்கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை**
**தீம் புனல் நெரிதர வீந்து உக்கா அங்கு,**
**தாங்கும் அளவைத் தாங்கி,**
**காமம் நெரிதரக் கைந் நில்லாதே.**

மே மாதம் 12 ஆம் திகதி சர்வதேச தாதியர் தினமாக சர்வதேசமெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் கடந்தகால அசாதாரன சூழ்நிலைகளுக்கெல்லாம் முகம் கொடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றிய எமது சமூகத்துத் தாதியரையும் கௌரவிக்கும் முகமாக இக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டுகிறது.

# மக்களின் நன்னிலைக்கு பங்களிக்கும் தாதியம்

தாதியம் உத்தியோகமாக முன்னேறி உன்னத தொழிலா கப் போற்றப்படுவதற்குக் காரணமாக இருந்தவர் செல்வி புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையார். எனவே அவரை நினைவு கூர்ந்து நன்றி செலுத்துவதற்காகவும் தாதியரைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாகவும் அவரது பிறந்த தினமாகிய மே மாதம் 12 ஆம் திகதி சர்வதேச தாதியர் தினமாகப் பிரகடனப்படுத்தி உலகெங்கும் உள்ள தாதியரால் அத்தினம் பல்வேறு விதமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. எனவே இந்நாளில் தாதியம், தாதியக் கல்வி, உத்தியோகம் பற்றியும் தாதியர் பற்றியும் சற்று உற்றுநோக்கினால் மிகவும் பொருத்தமானது.

'தாதியம்' என்பது ஒரு உதவியும் செய்யும் உத்தியோகம். அத்துடன் அதனால் வழங்கப்படும் சேவைகள் மக்களின் சுகாதாரத்துக்கும் நன்னிலைக்கும் பங்களிப்பாகின்றன. சேவைகளைப் பெறும் ஒரு தனிநபருக்கு தாதியம் உயிர் போன்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கிறது. ஒரு மனிதனால் அல்லது ஒரு குடும்பத்தால் அல்லது மற்றைய மனிதர்களால் பெற்றுக்கொள்ளமுடியாத தேவைகளை தாதியம் இட்டு நிரப்புகிறது. (அமெரிக்க தாதியர் சபை)

தாதியம் என்பதற்குச் சர்வதேச தாதியர் சபையால் பின்வரும் வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. "சுகதேகி ஒருவர் சுயஅறிவு, பலம், மனஉறுதி ஆகியன இருக்கும்போது ஆரோக்கியமாக இருக்கவும் அதை மீளப்பெறவும் மற்றவர்களின் உதவியின்றி செய்யப்படும் செயல்களை ஒருவர் ஆரோக்கியமாக அல்லது ஆரோக்கியமற்று இருக்கும்போது செய்வதற்கு உதவுதல் அல்லது அவரின் அமைதியான மரணத்திற்கு உதவுதல் ஆகும்" தாதியத்தின் தேவை சர்வதேச மயமானது. ஒருவரின் வாழ்க்கை காலம் முழுவதும் எதுவித வித்தியாசங்களுமின்றி ஆதரவளிக்கின்றது.

இலங்கையில் முறையான தாதியக்கல்வி 1939 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் முதற் தாதிய பாடசாலை கொழும்பு தாதிய பாடசாலையை அடுத்து முறையே கண்டி, காலி, இரத்தினபுரி, குருநாகல், யாழ்ப்பாணம், அநுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கந்தளை, ஸ்ரீஜயவர்த்தனபுர, அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தறை, களுத்துறை, வவுனியா ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

உளதாதியப் பாடசாலையாக முல்லேரியாவில் ஒரு பாடசாலை 1966 இல் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு ஐந்து வாரங்கள் உள தாதியப் பயிற்சிநெறி இலங்கை முழுவதிலுமுள்ள அடிப்படை தாதிய மாணவருக்கு இரண்டாம் வருடம் அல்லது மூன்றாம் வருடம் நடாத்தப்படுகிறது. மேலும் அப்பாடசாலை பயிற்றப்பட்ட தாதியர்க்கு குறுகிய காலப்பயிற்சி நெறிகளுடன் உள தாதியத்தில் அடிப்படை பட்டப்பின் டிப்ளோமா கற்கையையும் நடாத்துகின்றது.

அடிப்படையின் பட்டப்படிப்பு பாடசாலையானது 1960 இல் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் உயர் தாதியக் கல்விக்கான ஒரேயொரு நிறுவனம் இதுவாகும். மேலும் இங்கு போதனாசிரியர்களுக்குக் கற்பித்தலும் மேற்பார்வையும் டிப்ளோமா பயிற்சிநெறியும் விடுதிச் சகோதரிகளுக்கு விடுதி முகாமைத்துவமும் மேற்பார்வையும் டிப்ளோமா பயிற்சிநெறியும் நடாத்தப்படுகிறது.

வேறு விஷேடமான சில குறுகியகால பயிற்சிநெறிகளாகச் சத்திரசிகிச்சைக்கூட தாதியம், அதிதீவிர கவனிப்புப்பகுதி தாதியம், குழந்தை மருத்துவ தாதியம், முறிவு தறிவு தாதியம் ஆகியனவும் அடிப்படையின் தாதிய கல்லூரியில் வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனம் களுத்துறையில் பொது சுகாதார தாதிய டிப்ளோமா பயிற்சி வழங்குகின்றது. இராணுவ தாதிய பாடசாலை 2001 இல் அநுராதபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பாடசாலை ஆரம்பிக்கப்பட முன்னர் மற்றைய தாதிய பாடசாலைகளில் இராணுவ பொலிஸ் விமானப்படை வீரர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. பொலிஸ் மாணவ தாதியர்க்குத் தற்போதும் அரசாங்க தாதிய பாடசாலைகளில் பயிற்சி வழங்கப்படுகிறது.

சகல தாதிய பாடசாலைகளினதும் பரீட்சைகள், மதிப்பீடுகள் யாவும் இலங்கை முழுவதும் பொதுப் பரீட்சையாக சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்டு வருகின்றது. மூன்றுவருட பயிற்சிநெறியில் 3 வருடங்களும் வெற்றிகரமாகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டு, "பதிவு செய்யப்பட்ட தாதி" (Registered Nurse R.N) என்னும் பதவிப் பெயரைப் பெயரின் பின்னால் பெற்றுக்கொள்ள முடியும். அதன் மூலம் நாட்டின் எப்பகுதியிலும் தாதியாக கடமையாற்றுவதற்கு அனுமதிப்பத்திரம்

**வ.ரஜீலாதேவி**

பெற்றவராகின்றார்.

'உத்தியோகம்' என்பது தனிமனிதனதும் சமூகத்தினதும் நலனை உயர்த்தும் நோக்கமாக நீதி நெறிக்கூறுகளை (பண்பு, ஒழுக்கம் அம்சங்கள்) கொண்ட ஒரு விசுவாசமுள்ள தொழிலாகும் உத்தியோகத்தில் பெறப்படுகின்ற சேவையானது கற்றல் மூலமும், விஞ்ஞானரீதியாகவும் விருத்திசெய்யப்பட்ட விசேடமான அறிவையும், திறன்களையும் அடிப்படையாகக்கொண்டது ஆகும். இவ் விசேட அறிவு அற்றல் என்பன விஞ்ஞான முறைக்கூடாக விருத்தியடைந்தவையாக இருக்கும்.

உத்தியோகபூர்வ தாதிய சேவை யானது மருத்துவ, துணை மருத்துவக் குழுக்களின் பங்களிப்புடன் வழங்கப்படுகிறது. மனிதனின் உடல் உள சமூக ஆன்மீகத் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடியவைகளாகவே உத்தியோகபூர்வ தாதிய சேவைகள் அமைந்திருக்கும். உத்தியோகபூர்வ தாதியானவர் அங்கீகரிக்கப்பட்ட தாதிய பாடசாலையில் பட்டம் பெற்றவராகவும் நாட்டின் பதிவு செய்யப்பட்ட தாதிக்குரிய தகைமையுடையவராகவும் அந்நாட்டில் தாதிய தொழில் புரிவதற்கு அனுமதிக்கப்பட்டவராகவும் இருப்பார். அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்தோர் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பாடவிதானத்தின்படி பயிற்சி பெற்று அடிப்படைக் கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து தாதிய டிப்ளோமா (Diploma in Nuring) என்னும் அந்தஸ்தைப் பெறுவர்.

செல்வி புளோரன்ஸ் நைற்றிங்கேல் தனது குறிப்பேட்டில் தாதி குறித்து பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "ஒரு தாதியானவர் அரட்டையில் ஈடுபடக் கூடாது, நேர்மையானவராகவும், மென்மையானவராகவும் இருக்க வேண்டும். தியாகப் பெண்மணியாக விளங்கவேண்டும். அழைப்புக்கு மரியாதையுடைவராக இருக்க வேண்டும், ஆழ்ந்த ஆற்றல் உள்ளவராக இருக்கவேண்டும். விரைவான அவதானிப்பாளர் இதைவிட மரியாதையான எண்ணங்களையுடைய அர்ப்பணிப்புடன் கூடிய பெண்ணாக விளங்க வேண்டும்." மொத்தத்தில் தாதியம் பரந்து விரிந்த தாதிய பாடவிதானத்தை உள்ளடக்கிய அதி உன்னத உத்தியோகமாகத் திகழ்கின்றது. இத்தகைய உன்னத தொழிலைப் புரியும் தாதியர் தாம் எவ்வாறு போற்றி பாராட்டு தற்குரியவர்கள்! எனவே சர்வதேசம் எங்கும் தாதியர் மகிழ்ந்து கொண்டாடும் நாளில் நாமும் தாதியராக தோற்றம் பெற்றமையையிட்டு பெருமைப்படுவதுடன் எதிர்பார்ப்புப்படி சிறந்த அர்ப்பணிப்புடன் கூடிய தாதிய சேவையை வழங்கி எம்மை உத்தியோகபூர்வ தாதியாக உயர்த்திக் கொள்வதுடன் இதற்கு அடிகோலிய செல்வி புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையாரையும் நன்றியுடன் நினைவு கூர்வேமாக.

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வாழ்வின் அற்புதங்களை...

ஆகவே இது நமக்களிக்கும் அனுபவம் நம்முடையது. அவ்வனுபவம் மற்றும் அர்த்தங்களின் சாரமே ஆசிரியன் அளிப்பது. கவிதையில் பொருள்மயக்கம் (ambiguity) என்பது ஓர் உயரிய அழகியல் தன்மை.

ஏற்கனவே சொல்லப்பட்ட விஷயங்களைத் திரும்பச் சொல்வதில்லை என்று மனிதர்கள் முடிவெடுத்தால் உலகில் பரிபூரண அமைதி நிலவும் என்பர். எல்லாம் ஏற்கனவே சொல்லப்பட்டு விட்டன என்றார் பைரன். வாழ்க்கையின் புதிய ஒரு சிக்கலைப் புதிய பார்வையில் அவிழ்ப்பதே கவிஞனின் சவால். கவிஞன் இன்றைய வாழ்க்கையை வெளிப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார் சுந்தர ராமசாமி. வாழ்க்கையைப் பற்றி இளம் கவிஞனின் எந்தையும் தாயும் சொல்லிக் கொண்டிருந்த விஷயங்களைச் சொல்வதற்கான தேவைதான் அவனுக்கும் இருக்கும் என்றால் அவன் கவிதைத் துறைக்கு வராமல் இருப்பது நல்லது. அவனுக்கு எவ்வளவு சாமர்த்தியங்கள் இருந்தாலும் அவன் நேற்றைய விடயத்தை வைத்து இன்றைய கவிதையை உருவாக்க முடியாது. இன்றைய வாழ்க்கையின் சிக்கலை அவனுக்குப் பார்க்கத் தெரியவில்லை என்றால், இன்றைய வாழ்க்கைக்கும் அவனுக்குமான முரண்பாடுகள் எதுவும் இல்லை என்றால், அவனுக்கு நெருக்கடியோ விசனமோ இல்லை என்றால் அவன் நிம்மதியாக இருக்க வேண்டிய பாக்கியசாலி. கவிதையை அவன் மறந்துவிடலாம்.

எத்தனை விளக்கங்களைச் சொல்லிய பிறகும், கவிதை அதற்கு மேலும் தனக்குரிய வியப்பை வைத்துக் கொண்டிருக்கிறது. வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஒலிவர் வெண்டல் ஹோம்ஸ் என்ற புகழ்பெற்ற அமெரிக்கப் பாதிரியார் ஒருமுறை கடற்கரைக்குச் சென்றார். அங்கே மேரி என்ற சிறுமியுடன் கொஞ்ச நேரம் விளையாடினார். குழந்தையின் பெற்றோருக்கு ஓர் இன்ப அதிர்ச்சியாக இருக்கட்டுமே என்று அவர் குழந்தையிடம் இப்படிச் சொன்னார்: நீ வீட்டுக்குப் போனதுமே உன் அம்மாவிடம் நான் ஒலிவர் வெண்டல் ஹோம்ஸுடன் விளையாடினேன் என்று சொல்லு என்ன?

குழந்தை சொன்னது, சரி. நீயும் வீட்டுக்குப் போய் உன் அம்மாவிடம் நான் மேரியிடம் விளையாடினேன் என்று சொல்லு.

இப்படி ஒரு எளிமையுடன் வாழ்வின் அற்புத கணங்களைப் படம்பிடிப்பதையே கவிதை செய்கிறது. வாழ்க்கைக்கு முன் அனைத்தும் சமம் என்ற ஞானத்தை நமக்குள்ளிருந்து திறந்து விடுகிறது. நம் மனத்தின் ஆழத்தில் அழுத்தமாக நிலைத்திருக்கும் அற உணர்வுகளை கவிதை விடுவிக்கிறது.

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கிழக்கில் விசித்திரமான...

ஆனால் இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களும் தம்முடை தற்துணிவினாலும் தமது பாதுகாப்பு கருதியும் தம்முடைய முயற்சிகளினால் தமது இருப்பிடங்களை அமைத்துக் கொண்டமையே ஏராளமாகும் என்பது இங்கு நினைவில் கொள்ளப்பட வேண்டும்.

ரிதிதென்னை எனக் கூறப்படுகின்ற பிரதேசம் தமிழர்களுக்குச் சொந்தமானது என்பதற்கு இப்போதும் பாழடைந்த நிலையில் இருக்கும் இந்துக் கோவில் நல்லதொரு உதாரணமாகும். இது போன்று பல உதாரணங்கள் காட்டப்பட முடியும்.

மட்டக்களப்பில் ஜெயந்திபுரம், ஏறாவூர் புன்னைக்குடா, கல்குடா, தியாவட்டவான், சிப்பிமடு உள்ளிட்ட பிரதேசங்களில் சிங்கள மக்கள் குடியிருந்துள்ளனர். 85 காலப்பகுதிக்கு முன்னர் மட்டக்களப்பில் சிங்கள மகாவித்தியாலயம் இயங்கியது போன்று பிரபல பாடசாலைகளான புனித மிக்கேல் கல்லூரி, புனித சிசிலியா ஆகிய பாடசாலைகளில் குறிப்பிடக் கூடிய அளவு சிங்கள மாணவ மாணவிகள் கல்வி கற்றுள்ளனர். அதேபோல் சிப்பிமடு, கல்குடா உள்ளிட்ட பிரதேசங்களிலும் சிங்கள மொழிப்பாடசாலைகள் இருந்துள்ளன.

திருமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், குச்சவெளி, நிலா வெளிப்பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற சிங்கள மக்கள தமது காணிகளுக்கு உரிமை கோரும் பிரச்சினைகள் ஆரம்பித்திருக்கின்றன. அதேபோல் மொறவெவ பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். ஆனால் இதில் தமிழர்கள் பெரும்பாலும் உள்வாங்கப்படவில். அதில் தமிழர்களுக்குள்ள அச்சமான நிலை தாக்கம் செலுத்துகிறது. அங்கு தமிழர்களுக்குரிய காணிகள் பறிபோக அது காரணமாக அமைகிறது.

இவ்வாறான நிலை பதவியா, திரியாய் பிரதேசங்களிலும் உள்ளது. தமிழர்கள் தாம் விட்டு வந்த பிரதேசக் காணிகளுக்கு செல்வதில்லை. என்றாலும் ஏனையவர்கள் அவ்வாறில்லை என்பது இங்கு நினைவில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

இவ்வாறு கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுவரும் காணித்தகராறு நல்லதொரு முடிவினைக் கொடுப்பதாக அமைய வேண்டிய கட்டாயத்திற்கு வந்திருக்கிறது என்றே கூறமுடியும்.

காரணங்கள் எவ்வாறானாலும் சாதகங்கள் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்படுகிறதோ, பாதகங்களும் அவ்வாறே பார்க்கப்பட வேண்டும் என்பதே அனைத்துத் தரப்பினரதும் நோக்கமாக இருக்கிறது.

# இந்தவாரம் உங்கள் பலன்

(12.05.2011 தொடக்கம் 18.05.2011 வரை

ஸ்ரீதர்

### மேடம்

இந்தவாரம் உங்களுக்கு நல்ல பலனைத் தரப்போகின்றது. எதிர்பார்த்தபடி எல்லாம் நடக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கப் பலன் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். பெரியவர்கள்,அறிவாளிகள் சந்திப்புக்களால் புகழ்சேரும். பண வரவில் குறையே இல்லை. கைநிறையக் காசு – வரும். வீட்டில் சுபகருமங்களுக்குப் பேச்சுவரும். தேகசுகம் ஆரோக்கியமாக இருக்கும். மாணவர்கள் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெறுவார்கள். கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர். புதிய முதலீடுகள் செய்யலாம். அதிர்ஷ்டநாள்: வியாழன்.

### இடபம்

இது அதிர்ஷ்டந்தரும் வாரம். செய்தொழில் விருத்தியாகி இலாபம் சேரும். மனத்தில் மகிழ்ச்சி பொங்கி விளையாடும். புதிய முதலீடுகள் இலாபத்தைத் தரும். அவசரப்பட்டு எதையும் செய்யவேண்டாம். குடும்பத்தில் நன்மதிப்பு உயரும். சுபகாரியங்கள், நற்கருமங்கள் பற்றி உரையாடல் துவங்கும். நண்பர்கள் உதவி கிடைக்கும். அரசியலில் இருப்பவர்கள் நினைத்ததைச் சாதிப்பார்கள். பொதுவாக நினைத்தகாரியம் கைகூடி வரும் தினமும் மாலைப் பொழுதை அவதானமாகக் கழிக்கவும். மாணவ உலகுக்கு முன்னேற்றம் உண்டு. கலைஞர்களுக்கு நன்மையான வாரம். அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

### மிதுனம்

தொழில் ஸ்தானத்தில் ஆதாயம் உண்டு. கூட வேலை செய்பவர்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படுவர். தாய் வழியில் பொருள் வரும் பலன் உண்டு. கடவுள் நம்பிக்கையோடு காரியங்களைச் செய்யவும். உடல்நலம் சற்றுக் குன்றியே காணப்படும். சுபகாரியங்களில் பங்கேற்பீர்கள். நீண்டதூரப் பயணம் வந்தாலும் வரலாம். மாணவ சமுதாயம் விளையாட்டில் கவனஞ் செலுத்தவும். நண்பர்கள் விரோதிகளாக மாறலாம். அரசியலில் இருப்பவர்கள் வீண்பழி கேட்க நேரிடும். கலைஞர்கள், எழுத்தாளர்களுக்கு நன்மையான வாரம். செய்காரியங்களால் நன்மை வரும். அதிர்ஷ்ட நாள்: புதன்.

### கடகம்

மகிழ்ச்சியும் மனக்கவலையும் மாறிமாறி வரும். எல்லாம் திட்டமிட்டபடி நடந்தாலும் குறைகேட்க நேரிடும். வீட்டில் குழப்பங்கள் கவலையை உண்டாக்கும். உடல் நலம் பாதிப்புறும். அதிக கவனம் எடுக்கவும். சிறு சிறு உடல் நோவால் நடப்பதும் கஷ்டமாக இருக்கும். விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் மந்தகதியிலேயே எல்லாம் நடக்கும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்காது. மாணவ உலகம் உற்சாகமாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும். அரசியல் உள்ளவர்கள் எதிர்பார்ப்புக்கள் சிலவேளைகளில் நிறைவேற இடமுண்டு. நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்வார்கள். ஓரளவான நன்மை மட்டுமே கிடைக்கும். அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

### சிங்கம்

தொழில் ஸ்தானத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். சக ஊழியர்கள் உதவுவார்கள். இரத்தத் தொடர்புள்ளவர்களால் பெரிய பண வரவுக்கு இடமுண்டு. கடவுள் நம்பிக்கையுடன் காரியங்களைச் செய்வீர்கள். எதிர்பாராத வகையில் உதவி கிட்டும். வீட்டிலேயே குடும்ப உறுப்பினர்களின் வாழ்த்துச் செய்தி கிடைக்கும். அதனால் மன மகிழ்ச்சியும் சந்தோஷமும் அதிகரிக்கும். உதவி செய்ய வந்தவர்களால் சிறு உபத்திரமும் உண்டு. மாணவ உலகம் கல்வியில் முன்னேறும் உடல்நலம் ஆரோக்கியமாக இருக்கும். எதிர்பார்த்தபடி எல்லாம் நடைபெறும். அரசியலில் இருப்பவர்களுக்கு மதிப்பு உயரும். அதிர்ஷ்ட நாள் ஞாயிறு.

### கன்னி

தொழில் ஸ்தானத்தில் பொறுமை யுடனும் புத்திசாதுர்யத்துடனும் நடந்த காரியங் களைச் சாதிப்பீர்கள். இருப்பினும் முற்கோபத்தால் சிலபேரைப் பகைத்துக்கொள்ள இடமுண்டு. வீட்டில் நிம்மதி கிடைக்கும். குடும்ப உறவுகள், நண்பர்கள், தாமாகவே வந்து உதவுவார்கள். மன மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிறைந்த வாரம். மாணவ உலகம் கல்வியில் கவனம் எடுத்துச் சாதனைகளும் செய்யக் கூடும். பெரியவர்கள், மூத்தவர்களின் புத்திமதிகளைக் கேட்டு நடக்கவும். அரசியலில் இருப்பவர்கள் இலாப முறுவர். கலைஞர்களுக்குக் கௌரவம் கிடைக்கும். உடலில் சிறுசிறு உபாதைகள் ஏற்படக் கூடும். அதிர்ஷ்டநாள் செவ்வாய்.

### துலாம்

தொழில் ஸ்தானத்தில் யாவும் மந்தகதியிலேயே நடக்கும். முரட்டுத் தனமும் முற்கோபமும் மதிப்பைக் குறைக்கலாம். சிறுசிறு பிரச்சினைகள் வந்தாலும் குழப்பம் வர இடமில்லை. குடும்பத்தில் சிறு சிறு சச்சரவுகள் வரலாம். எதிரிகளால் ஆபத்தும் வரக் கூடும். உடல்நலக் குறைவு உண்டு. பொறுமையை இழக்காமல் அமைதியாகச் செயற்படவும். உறவி னர், நண்பர்கள் உதவுவார்கள். எதிலும் அவதானமாக நடந்துகொள்ளவும். மாணவ உலகம் ஆசிரியர்களுடன் முரண்படக்கூடும். அரசியலில் இருப்பவர்கள் வாய்திறக்கக் கூடாது. வேண்டாத நிகழ்வுக்கு இடமுண்டு. அதிர்ஷ்ட நாள் திங்கள்.

### விருச்சிகம்

தொழில் ஸ்தானத்தில் அக்கறையாக நடந்துகொள்வீர்கள். வீணாகக் குறை கேட்க நேரிடும். பணவரவு சுமாராக இருக்கும். பிரச்சினைகள் குழப்பங்கள் நேரிட்டாலும் நேரிடலாம். உடல்நலக்குறைவு காணப்படும். நண்பர்கள், உறவினர்கள் தாமா – கவே வந்து குசலம் விசாரிப்பார்கள். நினைத்துத் திட்டமிட்ட காரியங்கள் தாமாகவே அரங்கேறும். மற்றவர்கள் உங்கள் மீது பொறாமைப்படுவர். மாணவ உலகம் கல்வியில் அக்கறை காட்டும். உங்களது நடவடிக்கைகளை மேலுள்ளவர்கள் அவதானித்துக்கொண்டு இருப்பார்கள். அரசியலில் இருப்பவர்கள் ஆதாயம் பெறுவர். விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் நன்மைகள் நடக்கும்.

### தனுசு

தொழில் ஸ்தானத்தில் அமைதி நிலவும். உங்கள் திறமையைப் பாராட்டுவார்கள். மேலதிகாரிகள் நல்ல அபிப்பிராயம் கொண்டு வாழ்த்துக் கூறுவர். தேக நலம் பரவாயில்லாமல் இருக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்களுடன் ஒத்துழைத்துக் காரியங்களில் ஈடுபடுவார்கள். கடவுள் வழிபாடு அவசியம். முன்னைய பகை காரணமாக சில – வேளை பாதிப்பு வரலாம். மாணவ சமுதாயம் கல்வியில் நாட்டங்காட்டும். மன மகிழ்ச்சியுடன் நடந்து காரியங்களைச் சாதித்து வெற்றிபெறுவீர்கள். மறைமுக எதிர்ப்புகள் இருந்தாலும் வெற்றி உங்களுக்கே. பண வரவு அதிகரிக்கும். அதிர்ஷ்ட நாள் ஞாயிறு.

### மகரம்

தொழில் ஸ்தானத்தில் மதிப்பு உயரும். குடும்ப உறவினர்கள், நண்பர்களால் தொல்லைகள் வரும். மிகவும் அவதானமாக நடந்துகொள்ளுங்கள். மற்றவர்களின் நடவடிக்கைகளைப் பார்க்கமாட்டீர்கள். நாமுண்டு நம் வேலையுண்டு என்றிருங்கள். குடும்பத்தில் மன நிம்மதி மருந்துக்கும் இராது. உடல்நலக் குறைவு வரும். சிறுசிறு நோவுகளால் நடக்கமுடியாமல் கஷ்டப்படுவீர்கள். நீங்கள் நன்மையாக முடியும் என நினைத்துச் செய்த காரியம் தீமையே பயக்கும். மாணவ உலகம கேளிக்கைகளில் ஈடுபடும். அரசியலில் இருப்பவர்களுக்கு நன்மையான வாரம். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

### கும்பம்

தொழில் ஸ்தானத்தில் அதிக இலாபம் கிடைக்கும். நீங்கள் எதிர்பார்க்காத அளவுக்குப் பணவரவு உண்டு. எதிலும் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். மன – தில் மகிழ்ச்சி நிலவும். நண்பர்கள் உறவினர்கள் உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். சுற்றத்தவர்களால் நன்மை உண்டு. நீங்கள் திட்டமிட்டவாறே காரியங்கள் நடக்கும். எதிர்பார்த்த வெற்றிகிட்டாவிட்டாலும் பாதிப்பு இருக்காது. மாணவ சமுதாயம் கல்வியில் அக்கறை காட்டுவர். அரசியலில் இருப்பவர்களுக்கு அனுகூலமான வாரம். கலைஞர்களுக்குக் கௌரவம் கிடைக்கும்.அதிர்ஷ்ட நாள் வெள்ளி.

### மீனம்

தொழில் ஸ்தானத்தில் முன்னேற்றம் காணப்படும். மேலதிகாரிக – ளின் பாராட்டுக்கிடைக்கும். குடும்பத்தில் மன மகிழ்ச்சியும் நிம்மதியும் நிலவும். உடல் நலம் சற்றுக் குன்றியே இருக்கும். அதிகம் பாதிப்புகள் இல்லை. நண்பர்களும் உறவினர்களும் தாமாகவே வந்து உதவி செய்வர். வேலைப்பளு அதிகரிக்கும். ஆனால் வெற்றி கிடைக்கும். மாணவ சமுதாயம் நல்ல சாதனை படைக்கும். அரசியலில் இருப்பவர்களுக்கு ஆதாயம் உண்டு. எதிலும் பொறுமையாக நடந்து வெற்றிபெறுவீர்கள். கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் மதிப்பு உயரும். அதிர்ஷ்டநாள்: செவ்வாய்.

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
– காதில பூ கந்தசாமி –

**வணக்கமுங்கோ! ஒசாமா கொல்லப்பட்ட செய்தி வந்த நாளில் உலக ஊடகக்காரரெல்லாம் வாய் உளரத் தொடங்கிட்டினமுங்கோ, அவைக்கு ஒசாமா எண்டதையும் ஒபாமாவையும் உச்சரிக்கிறபோது குழம்பிப்போயிட்டினமுங்கோ.**

“ஒசாமா இன்று கொல்லப்பட்டாரா”என்று சொல்வதற்குப் பதிலாக “ஒபாமா இன்று கொல்லப்பட்டார்” எண்டிச்சினம். கிட்டத்தட்ட பி.பி. சிக்காரர் தொடக்கம் சி.என்.என் காரர் வரைக்கும் அண்டையான் நாளில ஒசாமாவோடு சேர்த்து ஒபாமாவையும் கொலை செய்து போட்டினமுங்கோ.

ஒசாமா, ஒபாமா உதில ‘ச’வும், ‘ப’வும் தானுங்கோ வித்தியாசம். ஒசாமா வில்லன், ஒபாமா கதாநாயகன் எண்ட கணக்கிலதானுங்கோ படம் முடிஞ்சிருக்குது. ரெண்டு கட்டிடத்தை உடைத்து மூவாயிரம் பேரை கொலை செய்து சவால் விட்டதற்காக உப்பிடி பத்து வருஷமாகத் தேடிப்பிடிச்சு கொண்டிருக்கினம். அதுவும் இன்னொரு இறைமையுள்ள நாட்டுக்குள்ள அத்துமீறி நுழைஞ்சு தாக்குதல் நடத்தியிருக்கினமுங்கோவ்.

பாகிஸ்தானுக்குள்ள புகுந்து அமெரிக்கா தாக்கினதைப் பார்க்கேக்க எதிர்காலத்தில எந்த நாட்டுக்குள்ளேயும் எந்த நேரத்திலையும் புகுந்து யாரையும் தாக்குவதற்குத் தங்களால முடியுமெண்டதைத்தானுங்கோ அமெரிக்கா காட்டியிருக்கினமுங்கோ.

பாகிஸ்தான் பயங்கரவாதத்துக்குத் துணைபோகும் நாடு அல்லது பயங்கரவாதிகளுக்குப் பாதுகாப்பான நாடு என்று இந்தியா அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கும்போது அதை நம்பாமல் பாகிஸ்தான் மேல இந்தியா கோபத்தில அப்பிடிச் சொல்லுது எண்டுதான் மற்ற நாடுகள் நினைச்சுக் கொண்டிருக்கினமுங்கோவ்.

அந்த வகையில் பாகிஸ்தான் உலக நாடுகளுக்கு முன்னாலை அம்பலமாகி இருப்பது இந்தியாவுக்கு கொஞ்சம் சந்தோசமாக இருந்தாலும் இந்தப் பிராந்தியத்திலை பக்கத்து நாட்டுக்குள்ள அத்துமீறி அமெரிக்கா நடந்து கொண்டது மகிழ்ச்சிக்குரியது இல்லையெண்டுதான் சொல்லுதுங்கோ.

பிரச்சனை இதோடை மட்டும் முடிஞ்சபாடில்லையுங்கோவ். எதிர்காலத்திலையும் பயங்கரவாதிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தவேண்டிய தேவை ஏற்பட்டால் இதே மாதிரியான நடவடிக்கைக்கு அமெரிக்கா தயங்காது எண்டும் அமெரிக்கா எச்சரிக்கையும் பண்ணியிருக்குங்கோவ்.

உதில பாகிஸ்தானின்ர நிலைமைதானுங்கோ ரொம்பவும் தர்மசங்கடமாகியிருக்கு. பயங்கரவாதத்தை அழிப்போமென்று உறுதியாகச் சொல்லவும் முடியல்லை. அமெரிக்காவுக்கு நாங்கள் உதவினோம் எண்டும் சொல்லவும் முடியல்லை. அதேவேளையில உலக முக்கியத்துவம் வாய்ந்த ரெண்டு கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் இண்டைக்கு வரைக்கும் முழிச்சுக் கொண்டிருக்கினமுங்கோ.

அதாகப்பட்டது, பாகிஸ்தானின்ர இராணுவ அக்கடமிக்கு அருகிலேயே ஒசாமா ஐந்து வருடங்களுக்கும் மேலாக இருந்திருக்கிறார். அது பாகிஸ்தானுக்குத் தெரியாதா எண்டதும் நாற்பது நிமிஷங்களாக அமெரிக்காவின்ர ஹெலிகள் நுழைந்து தாக்குதல் நடத்தியிருக்கினம் அதுவும் தெரியாதா? நாற்பது நிமிடங்களுக்குள் தேசிய பாதுகாப்பு தொடர்பில் தங்களை தயார்ப்படுத்திக்கொள்ள பாகிஸ்தானுக்கு வலு இல்லையா? இப்படி அசமந்தமான நாடு அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கலாமா? என்றும் கேட்கினமுங்கோ.

இந்தக்கேள்விகளுக்கு பதிலளிக்காமல் இருந்தாலோ அல்லது பரி காரம் தேடிக்கொள்ளாமல் இருந்தாலோ பாகிஸ்தான் என்ற நாடு தனக்கு தன்னுடைய அயல்நாடுகளுக்கு பெரும் ஆபத்தைத் தேடித்தரும் நாடாக மாறிக்கொண்டிருக்கின்றதோ என்ற அச்சம் இன்னொரு பக்கம் உருவாகிக் கொண்டிருக்குதுங்கோவ்.

மன்னிச்சுக்கொள்ளுங்கோ உங்களோடு பகிர்ந்து கொள்ள பல பிரச்சனைகள் இருக்கின்றபோதும் இந்தவாரம் ஒசாமா விவகாரத்தோடையே நிண்டுபோட்டனுங்கோ சொரிங்கோவ்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

## உலகை வியக்க வைத்தவர்கள்

## ஆகாயத்தில் பறந்த முதல்வர்



என்று மகிழ்ச்சிக் குரல் கொடுத்தார் ஒருவர். ஒரு கனவான், அவருக்குத் தம் கோட்டைக் கழற்றி அணிவித்தார். “நன்றி ஐயா... நிஜமாகவே குளிர் நடுக்குகிறது” என்றார் ரோஸியர். எட்டினி மான்கோல் ஃபியர் விரைந்து வந்தார் - “உங்களைப் பாராட்ட விருந்தும் விழாவும் ஏற்பாடாகியுள்ளது. வாருங்கள் நண்பர்களே!” என்று ரோஸியர் பிலாட்ரோயையும், டார்லாண்டஸையும் அழைத்தா... “இந்தக் கோட்டுடனா?” என்றார் ரோஸியர், அந்த அன்பர் அளித்த கோட்டு மிகப் பெரியது. தொளதொ...வென்று ஃபூன் போலிருந்தார் ரோஸியர்! ஆனால் அதையெல்லாம் யாரும் அலட்சியம் செய்யவில்லை. “பூமியை விட்டுக் கிளம்பி, ஆகாயத்திலே பறந்து, பத்திரமாகத் தரையிறங்கிய மனிதர்களின் நல்வாழ்வுக்கு!” என்று கூறி, மதுக் கிண்ணங்களை நிரப்பி, உயர்த்திக் கோஷமிட்டுக் குடித்து மகிழ்ந்தார்கள், பாரிஸ் நகரத்துப் பிரபுக்கள். விண்வெளியில் வெற்றி கொள்ளுவதற்கு வழி கோலப்பட்டுவிட்டது.

விண்வெளியை வெற்றி கொள்ள மனிதன் முதல்படியில் கால்பதித்துவிட்டான், பலூனைத் தோற்றுவித்து வென்றுவிட்டான்.



(வியப்புக்கள் தொடரும்...)

Regd. as a News paper at the G.P.O.(QD/129/NEWS/2011)

# ஈர்ப்பு





**இந்தப்** படங்களில் காணப்படும் ஐந்து வயதுச் சிறுமியின் பெயர் சூரி குறூஸ். இவர் தான் இன்று உலகில் அதிகளவு படம் பிடிக்கப்படும் சிறுமியாகும்.

காரணம் டொம் குறூஸ் மற்றும் கெதி ஹோம்ஸ் ஆகிய உலகப் புகழ்பெற்ற பிரபலங்களின் பிள்ளை தான் இவர். இவர் எங்கு சென்றாலும் படப்பிடிப்பாளர்கள் இவரை மொய்க்கின்றனர்.

இவரின் ஐந்தாவது பிறந்த தினத்தன்று பபராஸி படக்குழுக் கூட்டம், பிறந்த தினம் நடந்த இடத்துக்கு மேலாக ஹெலிகொப்டரில் வட்டமிட்டுத் திரிந்தனர் இவரைப் படம் பிடிப்பதற்காக. இதன் காரணமாக சில சந்தர்ப்பங்களில் சாதாரண சிறுமிகளுக்குக் கிடைக்கின்ற வாய்ப்புக் களை இவர் இழக்கின்றார்.

இவரின் பெற்றோர் பின் பற்றும் சமயப்பிரிவின்படி இவருக்கு இப்போதே எல்லா விடயங்களிலும் முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

நியூயோர்க்கில் தாய் கெதியுடன் பொருள்களை வாங்கச் சென்றபோதும் இவரை படப்பிடிப்பாளர்கள் விடவில்லை. இவர் ஒரு சிறுமி போல் அல்ல வளர்ந்தவர் போன்றே நடத்தப்படுகின்றார். படப்பிடிப்பாளர்கள் இவரை மொய்க்க அதுவும் ஒரு காரணம்.

# ஊகம்

**உலகமே** பார்த்து ரசித்த திருமணம் முடிந்த கையோடு பிரிட்டனின் எதிர்கால மன்னர் வேலைக்குத் திரும்பிவிட்டார். எதிர்கால மகாராணியோ திருமணத்துக்கு முன்னரைப் போலவே அலைந்து திரிந்து பொருள் வாங்கக் கிளம்பிவிட்டார்.

பிரிட்டனின் ஏனைய குடும்பப் பெண்களைப் போலவே வருங்கால மகாராணி திருமதி வில்லியமும் தனது வாராந்த பொருள் கொள்வனவில் சர்வ சாதாரணமாக ஈடுபட ஆரம்பித்துவிட்டார்.

எங்லஸி தீவில் உள்ள வெயிட் ரோஸ் என்ற சுப்பர்மார்க்கெட்டிற்கு இவர் வருகை தந்திருந்தார்.



சுப்பர்மார்க்கெட்டை வந்தடைந்ததும் தன்னுடன் கூட வந்திருந்த மெய்ப்பாதுகாவலரிடம் கார் சாவியைக் கொடுத்து விட்டு அவர் உள்ளே நுழைந்தார். எளிமையான முறையில் உடையணிந்திருந்த கேட்ஸ் ஒரு சராசரி குடும்பப் பெண்போல் தனது ட்ரொலியை தானே தள்ளிச் சென்று அவர் தனக்குத் தேவையானவற்றை வாங்கினார்.

இடையில் அவர் இந்த சுப்பர்மார்க்கெட் ஊழியர்களிடம் சில பொருட்களைப் பற்றி விசாரிக்கத் தவறவும் இல்லை.

காரில் அவர் தானாகவே பொருட்களை ஏற்றிக் கொண்டிருந்ததைக் கண்ட அங்குள்ள மக்கள் ஒரு பக்கம் தமது வருங்கால அரசியைப் பார்த்து ஆச்சரியமும் இன்னொரு பக்கம் ஆனந்தமும் அடைந்தனர்.

வில்லியம்ஸ், கேட்ஸ் திருமணத்தின் போது அனைவரினதும் கவனத்தையும் கவர்ந்த விடயம் இளவரசர் ஹரி, பிப்பா ஆகிய இருவருக்குமிடையில் காணப்பட்ட அந்நியோந்நியம் இருக்குவருக்குமிடையிலான காதலின் ஆரம்பம் என்ற ஊகங்களும் வெளிவந்தன. அதனை முரசும் சுட்டிக் காட்டியிருந்தது.

திருமண வைபவத்தின் போது ஹரி -பிப்பா ஆகியோர் மிகவும் நெருக்கமாக அளவளாவிய காட்சியையே இங்கு காண்கிறீர்கள்.


# இணை

அரிய பறவையான இருவாச்சி, தனது ஜோடியை உயிர் பிரியும் வரை மாற்றிக்கொள்வதில்லை. இருவாச்சியின் பூர்வீகம் தமிழ்நாடு தான். அழகிய நீண்ட வளைவான அலகு,கொம்பு போன்று உள்ளது. இந்த அலகைக் கொண்டு பொந்துகளில் அழகிய கூடு கட்டுகிறது. பிரவுன், கருப்பு, கருஞ்சிவப்பு, மஞ்சள் போன்ற நான்கு வண்ணங்களைக் கொண்டது. பறக்கும் போது ஹெலிகாப்டர் பறப்பதை போன்ற ஒலி எழுப்பும்.

பெண் பறவை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் காலத்தில் மட்டும் காய்ந்த மரத்தில் பொந்தை அமைக்கும். பெண் பறவை மட்டுமே கூட்டில் வசிக்கும். இது முட்டையிடும் காலம் வரை ஆண் பறவையே இரையை சேகரித்துக் கொடுக்கும். குளிர்மையாக வைத்திருக்க பொந்தில் பசும் இலை, தலைகளை கொண்டு ஆண் பறவை நிரப்பும். தாயின் மூன்று மாத அரவணைப்புக்குப் பிறகு குஞ்சுகள் தாமே இரை தேடச் செல்லும்



# நிச்சயதார்த்தம்



**நடிகர்** சிவகுமார் வீட்டில் இரண்டாவது தடவையாக கொலுசு சத்தம் கேட்கவுள்ளது. ஆம். நடிகர் சிவகுமாரின் இளையமகனும், இளம் நடிகரும் கார்த்திக்கு திருமண நிச்சயதார்த்தம் முடிவடைந்துள்ளது. நவநாகரிகத்தின் அடையாளமாய் மும்பை கலாசாரத்தில் மூழ்கித் திளைத்த நடிகை ஜோதிகாவை மூத்த மருமகளாய் ஏற்ற சிவகுமார் குடும்பத்தினர் தமது இரண்டவாது மருமகள் கிராமத்துக் கலாசாரங்களும், நகரத்துக்கு நாகரிகமும் கலந்த கலவையாக ஒருவர் வரவேண்டும் என எதிர்பார்த்தனர்.

இந்த முயற்சியின் பலனாக கிராமத்து மணம் விசுகின்ற விவசாயத்துக் குடும்பத்தில் பிறந்து சென்னையில் கல்வி கற்ற ரஞ்சனி என்பவரை நடிகர் கார்த்திக்கு நிச்சயம் செய்யப்பட்டுள்ளது. அப்புகைப்படங்களில் ஒன்றே இதுவாகும்.

பார்ப்பதற்கு நடிகைபோன்று காட்சியளித்தாலும் தான் நடிப்புப்பற்றி நினைத்துப் பார்த்ததே கிடையாது என்று கூறுகின்ற றஞ்சினி, நடிகர் கார்த்தி நடித்த படங்களில் தன்னைக் கவர்ந்தது பருத்திவீரன், ஆயிரத்தில் ஒருவன் என்று கூறுகிறார்.

தமிழ் சினிமா உலகில் என்றும் மார்க்கண்டேயராகத் திகழ்ந்து முன்னணி நடிகர்களுக்கெல்லாம் முன்மாதிரியாகத் திகழ்ந்த சிவகுமார் தன்னுடைய பிள்ளைகளின் வாழ்வையும் பிறர் பின்பற்றத்தக்க முன்மாதிரியாக வழிநடத்திச் செல்வது உண்மையிலே பாராட்டத் தக்கதாகும்.


# கைவினை

**சாதாரண** பலூன்கள் மூலம் 40 அடி உயரத்திற்கு பலூன் சிற்பங்களை உருவாக்கி அசத்துகிறார் ஹேக்கன். இவருடைய கைவண்ணத்தில் உருவாகும் வேற்றுக்கிரக தோற்றமுடைய, பிரமாண்டமான பலூன்களை இரவு நேர விருந்துகளில் வைத்து வேடிக்கைப் பார்க்க முடியாது. அந்தளவிற்கு பயங்கரமான தோற்றத்துடன் காட்சியளிக்கிறது உருவங்கள். குழந்தைகளுக்காகத்தான் இவற்றை செய்கிறார். ஆனால் செய்து முடித்ததும் குழந்தைகள் விளையாட முடியாத அளவுக்கு அவை பிரமாண்டமாக பயமுறுத்தும் வகையில் வடிவமைக்கப்படுகின்றன.

இந்த பிரமாண்டமான பலூன் சிற்பங்களை வடிவமைக்க பல மணிநேரங்களை செலவழிக்கும் ஹேக்கன் அதற்காக மொத்தமாக 5ஆயிரம் பலூன்களைக் கூட ஒரே சமயத்தில் வாங்கி பயன்படுத்துகிறார்.

கடல் சார்ந்த அல்லது வேற்று கிரக ஜீவன்களைப் போன்ற உருவம் வடிவமைக்க பல நுணுக்கமான வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்லும் ஹேக்கன், தான் செய்யும் பலூன் சிற்பங்களை கடற்கரைப் பகுதி அல்லது வனப்பகுதிக்கு எடுத்துச் சென்று புகைப்படம் எடுத்து திரும்புகிறார். அப்போது அவற்றுக்கு உயிர் வந்ததுபோல் தோற்றம் கிடைக்கிறது என்பதை அவர் உணர்கிறாராம்.







இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அப்புதன் அச்சகத்தில் டி.டி என்டர்பிரைசஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் மே 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...

(C/704)

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 29 வியாழக்கிழமை (12.05.2011) பக்கங்கள் IV ஓசை – 225

# இலங்கைக்கான ஈராக் தூதுவர் அமைச்சர் டக்ளஸ்’டன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

**மூன்று தசாப்தகால யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் வடபகுதி தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் அவர்களின் வாழ்க்கைத் தரம், அரசியல் நிலைமைகள் தொடர்பாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவை இலங்கை, மாலைதீவுக்கான ஈராக்கிய தூதுவர் காதான் டஹா க்ஹாலப் நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது வடபகுதி மக்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஈராக்கிய தூதுவரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளக்கிக் கூறினார்.


யாழ். குடா நாடு உள்ளிட்ட வடபகுதி மக்களின் இன்றைய நிலைமைகளை அமைச்சர் விளக்கமாக எடுத்துக் கூறியதுடன், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள ஜனநாயக அமைதிச் சூழலில் பரஸ்பரம் நம்பிக்கையை கட்டி எழுப்புவதுடன், அதனை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் இச்சூழ்நிலையில் நாட்டில் சமாதான அபிவிருத்தி இரண்டையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியதின் அவசியத்தை அமைச்சர், ஈராக்கிய தூதுவரிடம் வலியுறுத்திக் கூறினார்.

இச்சந்திப்பின்போது யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்ற முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஈராக் தூதுவரிடம் அமைச்சர் எடுத்துக்கூறியுள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும் கலந்து கொண்டார்.



# ஐ.தே.கட்சி தேசிய அமைப்பாளர் நியமனம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பாணை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட 75 பேரை நீதிமன்றத்தில் சமுகமளிக்குமாறு கங் கொடவில நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேல்மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி மைத்திரி குணரட்ன தாக்கல் செய்திருந்த மனுவொன்றை நேற்று விவாதத்துக்கு எடுத்து கொண்ட போதே கங்கொடவில மாவட்ட நீதிவான் சம்பஜானகி விஜயரட்ன இந்த உத்தர வைப் பிறப்பித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளராக ரவிகருணா நாயக்கவை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமித்தமையானது கட்சியின் யாப்புக்கு முரண்பட்டது எனவும், குறித்த நியமனத்தை இரத்துச் செய்யுமாறு கோரியும் சட்டத்தரணி மைத்திரி குணரட்ன குறித்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில், இம்மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா, இல்லையா என்பது (iv பக்கம் பார்க்க)

# புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்வு

(கொழும்பு)



புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்கவிடம் அவர் மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளமைக்கான கடிதத்தை வழங்கியுள்ளார்.

முப்பது வருடகால இராணுவ சேவையாற்றி வரும் இவர், வன்னி இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வவுனியா கூட்டுப் படைத்தலைமையகத்தின் முக்கிய பொறுப்பொன்றை வகித்திருந்தார். (iv பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். படுகொலை செய்யப்பட்டவர் இராசமாணிக்கம் மதியழகன் (வயது-38) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.


லேக் வீதியிலுள்ள தனது வீட்டில் பிற்பகல் 2.30 மணியளவில் உணவு அருந்திக்கொண்டிருந்த சமயம் மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் கைத்துப்பாக்கியால் குறித்த நபர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இவரது சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் மட்டக்களப்பு ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயச் செயலாளரும் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் புளியந்தீவு இணைப்பாளருமாவார். இச்சம்பவம் தொடர்பில் முரளிதரன் தெரிவிக்கையில், மட்டக்களப்பு மாவட்டம் நீண்டகாலமாக அமைதியாக இருந்து வந்தது. அந்த அமைதியினை கெடுக்கும் வகையிலேயே இக் கொலைச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. கொலைசெய்யப்பட்ட மதியழகன் ஏற்கனவே பாதிக்கப்பட்டு சக்கர நாற்காலியில் உலாவிய (iii பக்கம் பார்க்க)

# நிபுணர்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தியா இலங்கையை நிர்ப்பந்திக்கவேண்டும்

## முன்னாள் இந்திய உயர்நீதிமன்ற நீதிபதி



(புதுடில்லி)

இலங்கைப் போரின் இறுதி நிகழ்வுகள் குறித்து ஆராய்ந்த ஐநா பொதுச் செயலருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரை அடிப்படையில் செயற்படுமாறு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளதாக டெல்லி உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ராஜிந்தர் சச்சர் வலியுறுத்தியுள்ளார்.

டில்லி தமிழ் மாணவர் அமைப்புக்கள் சார்பில், இலங்கைப் போரின் இறுதி நிகழ்வுகள் குறித்து ஆராய்ந்த ஐநா பொதுச் செயலருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை தொடர்பான கருத்தரங்கம் நேற்று இந்தியத் தலைநகர் டில்லியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது நீதிபதி சச்சர் இந்தக் கருத்தை வலியுறுத்தினார். இந்தக் கருத்தரங்கு தொடர்பாக சர்வதேச செய்தி ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில், ஐ.நா. குழு இலங்கைக்குச் சென்று விசாரணை நடத்த இலங்கை அரசு அனுமதி மறுப்பதன் மூலம், அது எதையோ மறைக்க முயல்கிறது என்றார். அத்துடன் ஐ.நா. உறுப்பினர் என்ற முறையில், ஐ.நா. மன்றத்தை நிராகரிக்கும் உரிமை யாருக்கும் இல்லை என்பதை இலங்கை அரசுக்குப் புரிய வைக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஈராக்கிலும், ஆப்கானிஸ் (iii பக்கம் பார்க்க)

# மனைப் பொருளாதார மேம்பாட்டுத் திட்ட அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் 2011ஆம் வருடத்திற்கான மனைப் பொருளாதாரத்தின் மூலமான குடும்ப அலகுகளைக் கட்டியெழுப்புவது தொடர்பான அறிமுகக் கூட்டம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முற்கட்டமாக 4000 முதல் 5000 வரையிலான குடும்ப அலகுகளை மனைப் பொருளாதாரத்தின் மூலம் அபிவிருத்தி நோக்கிக் கட்டியெழுப்புவது இத்திட்டத்தின் நோக்கமாகும். பொருளாதார அபிவிருத்தி அமைச்சும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும், வடக்கு மாகாண சபையும் இணைந்து இத்திட்டத்தினை முன்னெடுக்கின்றன. இந்நிகழ்வில் பயன்பெற விரும்பமுள்ள அனைவரும் கலந்துகொள்ளும்படி அழைக்கப்படுகின்றனர்.

# வலய மட்ட போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய மட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் எதிர் வரும் 14ஆம், 15ஆம் திகதி களில் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை சாவகச் சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் 14ஆம் திகதி வாசிப்பு (பிரிவு I,II), கதைகூறல் (பிரிவு I), பேச்சு (பிரிவு I முதல் V வரை), பாவோதல் (பிரிவு I முதல் V வரை) இசையும் அசைவும் (பிரிவு I) தனி இசை (பிரிவு I முதல் V வரை) இசை குழு திறந்த போட்டி (பிரிவு I, II) ஆகிய போட்டிகள் நடை பெறவுள்ளது.

15ஆம் திகதி தனி நடனம் (பிரிவு I முதல் V வரை) மற் றும் திறந்த போட்டிகளாக நட னம் குழு I, நாட்டிய நாடகம், நாட்டார்பாடல், இலக்கிய நாடகம், வில்லுப்பாட்டு, விவா தம், தமிழறிவு, வினாவிடை ஆகிய போட்டிகளும் நடைபெற வுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள் ளார். (11)

# துரித கதியில் இடம்பெறும் புகையிரதப் பாதை விஸ்தரிப்பு

(மாங்குளம்)

கொழும்பு - யாழ்ப்பாணம் புகையிரதப் பாதையினை ஓமந் தையில் இருந்து மேலும் விஸ் தரிக்கும் நடவடிக்கையாக ஓமந் தையிலிருந்து மாங்குளம் வரை பாதைகளினை சீராக்கும் பணி கள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றது.

இந்நடவடிக்கைக்காகப் பாரிய இயந்திரங்கள் பயன் படுத்தப்பட்டு, காடுகள் அழிக்கப் படுவதுடன், பாதைக்கான மணல்களினை ஒன்று சேர்க்கும் பணிகளும் இடம்பெற்று வரு கின்றன.

மேலும் இப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடி, கண்ணிவெடிகளினை அகற்றும் பணிகளில் இராணுவக் கண்ணிவெடி அகற்றும் பிரி வினர் ஈடுபட்டு வருவதினையும் அவதானிக்க முடிகின்றது. (42)

# பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(யாழ். நிருபர்)

ஓமந்தை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் மூ. அரசரத்தினம் தலை மையில் நடைபெறும்.

அனைத்துப் பழைய மாண வர்களையும் கலந்துகொள் ளும்படி செயலாளர் க. சிவ சேகரம் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

நீண்டகாலம் புனர்வாழ்வு மு காமாக இருந்த இக்கல்லூரி மீண் டும் கல்விச் செயற்பாட்டிற்காக அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (10)


## EDWARD MAKES

**Omawater ஓமத்தீ நீர்**

வயிற்றில் காணும் வாய்வு, இரைச்சல், குத்து, எரிவு, பசியின்மை, மந்தம், கிரகணி, பூச்சிக்குத்து, பிரட்டு, வாந்தி, கிரந்தி முறுக்கு, கிரந்தி வாய்வு, சளி, சுரம் குணமாகும்.

**THRES KOONTHAL TYLUM திரேஸ் கூந்தல் தைலம்**

Keeps the body Cool and gives the face Gracious Look.

எக்காலத்திலும் எவ்வயதிலும் குளிர்மை கொடுக்கும் அதிசயத் தைலம்

கேசத்திற்கு குளிர்ச்சி, மலர்ச்சி, அடர்த்தி, எழுச்சி, அழகு, மென்மை, வலிமை கொடுக்கவல்ல மிருதுவான நறுமணத் தைலம்.

முடி உதிர்வு, உடைவு, ஈர், பேன், முடி கொட்டல், பொடுகு போன்ற வற்றைத் தவிர்க்க வல்லது.

**Gurusancheevi குரு சஞ்சீவி**

தலையிடி, தடிமன், முட்டு, இழுப்பு, மூச்சு டைப்பு, சளி, சன்னி, சுரம், பல்வலி, பிடிப்பு, நோ, தெண்டல், வீக்கம், தசைப்பிடிப்பு, வலி, வேதனை போக்கி குணமளிக்க வல்லது.

Special Blam

Adderss:

**Dr.G.Edward**

63, Grusault Road,
Chundikuli, Jaffna.
021 222 8171

(C-723)



## தவறிவிட்டது

கல்வியங்காட்டைச் சேர்ந்த சண்முகநாதன் சுரேசன் என்ப வருடைய மோட்டார் சைக்கிள் ஆவணங்களான சாரதி அனு மதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் (NP HR - 2426) என்பன யாழ். நகருக்குள் 07-05-2011அன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0776151019



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள் - 2009

01) இசைமாணி / நடனமாணி முதலாம் வருடத் தேர்வு
02) இசைமாணி / நடனமாணி இரண்டாம் வருடத் தேர்வு
03) இசைமாணி / நடனமாணி மூன்றாம் வருடத் தேர்வு
04) இசைமாணி / நடனமாணி நான்காம் வருடத் தேர்வு

மேற்படி இசைமாணி மற்றும் நடனமாணி பரீட்சைகளை 06-06-2011 (திங்கட்கிழமை) தொடக்கம் 14-06-2011 (செவ்வாய்க்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு மண்டபத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இசைமாணி/நடனமாணி முதலாம் வருடத் தேர்வு<br>இசைமாணி/நடனமாணி மூன்றாம் வருடத் தேர்வு | 06-06-2011-09-06-2011 |
| இசைமாணி/நடனமாணி இரண்டாம் வருடத் தேர்வு<br>இசைமாணி / நடனமாணி நான்காம் வருடத் தேர்வு | 10-06-2011-14-06-2011 |

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 01-06-2011 (புதன்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு: செய்முறைப் பரீட்சைகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்

பதிவாளர்,
11-05-2011 (சி-724)



## நோத்சீ லிமிட்டெட்

பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

நோத்சீ லிமிட்டெட் நிறுவனத்தின் உற்பத்திப் பகுதிக்கான பயிலுநர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகத்தேர்வு

**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

கடற்தொழில் வலை உபகரணங்களை உற்பத்தி செய்யும் இயந்திரம் மற்றும் அதன் தொழில்நுட்பப் பகுதிகளில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான ஆண் பயிலுநர்கள் 10 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

விண்ணப்பதாரர்கள் குருநகரில் அமைந்துள்ள எமது வலைத் தொழிற்சாலைச் சுற்றாடலில் இருந்து 7.கி.மீ தொலைவுக்கு உட்பட்டவராயிருந்தால் விரும்பத்தக்கது.

**கல்வித்தகைமை:** கல்விப் பொதுத்தராதரம் (G.C.E. O/L) வரை பயின்றவர்களாகவும், தொழில்நுட்பப் பரீட்சை சான்றிதழ்கள் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். மேலும் இத்தொழிற்துறையின் இரசாயன செயல் முறைகளில் அனுபவம் அல்லது அவை சார்பான கல்வி, க.பொ.தா. சா/தரத்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி யடைந்தவர்களுக்கு முன்னுரிமையும் விசேட படிகளும் வழங்கப்படும்.

**வயது எல்லை:** விண்ணப்பத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 25 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம் மற்றும் நியமனம்** : தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் ஒரு வருட காலப்பகுதிக்குப் பயிலுநர்களாக நியமிக்கப்படுவர். மாதம் ஒன்றிற்கு ரூபா 6,000/= வழங்கப்படுவதுடன் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன நிறுவனத்தினால் செலுத்தப்படும்.

**விண்ணப்பித்தல் மற்றும் நேர்முகத் தேர்வு விபரம்**

மேற்படி வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிபரக் கோவை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டைப் பிரதி, கிராம சேவையாளர் நற்சான்றிதழ் பத்திரம், பாடசாலை விடுகைப் பத்திரம் என்பனவற்றுடன் குருநகரில் அமைந்துள்ள நோத்சீ லிமிட்டெட்டின் தலைமை அலுவலகத்தில் 16-05-2011 அன்று காலை 10.00 மணி முதல் 12.30 மணி வரை இடம்பெறவுள்ள நேர்முகத் தேர்வில் விண்ணப்பங்களை நேரடியாக வழங்கி கலந்துகொள்ள முடியும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம். நியமனங்கள் தாமதமின்றி வழங்கப்படும்.

பிரதிப் பொதுமுகாமையாளர்,
நோத்சீ லிமிட்டெட்,
வலைத் தொழிற்சாலை,
குருநகர் யாழ்ப்பாணம்.

தொ.பேசி 0212222733 தொ.நகல் 0212220713 மின்னஞ்சல் northsealtd@sltnet.com

(சி-721)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைப்பீட மற்றும் அதனோடமைந்த இராமநாதன் நுண்கலைக்கழக

முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட முதலாம் இரண்டாம் அரையாண்டுகளுக்கான

### மீள் பரீட்சைகள் -2011

- பழைய பாடத்திட்டத்தின் கீழ் (Semester System) கலைமாணி மற்றும் நுண்கலைமாணிப் பட்டநெறியைப் பயின்று பாட அலகுகளில் சித்தியடையத் தவறியதால் தமது பட்டப் படிப்பை இதுவரை பூர்த்திசெய்யாத மாணவர்கள் தமது பரீட்சைகளைப் பூர்த்தி செய்ய இறுதிச்சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்படவுள்ளது. எனவே, அவ்வாறான மாணவர்களது பரீட்சை விண்ணப்பங்கள் 13-05-2011 திகதியிலிருந்து 31-05-2011 திகதி வரை கலைப்பீடாதிபதி அலுவலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.
- விண்ணப்பப்படிவங்களை கலைப்பீடாதிபதி அலுவல கத்திலிருந்து பெற்று, ஒரு பாட அலகிற்கு மீள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 50/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத் துடன் இணைத்தல் வேண்டும்.
- வெளிமாவட்ட மாணவர்கள் பின்வரும் விபரங்களை 021 222 3091 எனும் தொலைநகலுக்கோ அல்லது deanarts@sltnet.lk எனும் மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்கவும்.

01) மாணவர் பெயர்
02) பதிவிலக்கம்
03) சுட்டெண்
04) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் வருடம் 1-ம்/2-ம்/3-ம்/4-ம்
05) அரையாண்டு - முதலாம்/இரண்டாம்
06) பாட அலகுகளின் குறியீட்டு எண்

பதிவாளர்,
11-05-2011 (சி-524)

# பொலிஸாரின் உதவியுடன் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்!

## நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

யாழ் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சில பகுதிகளில் இடம்பெற்று வரும் குற்றவியல் செயல்களை பொலிஸாரின் உதவியுடன் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற் கொளளப்படுமென பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கினார்.

யாழ் நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றைய தினம் செயலக மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் தலைமையில் நடைபெற்ற வேளை அங்கு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சில பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு, சட்டவிரோத மதுபான விற்பனை மற்றும் சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்காக கால்நடைகளை வெட்டுவது போன்ற செயற்பாடுகளால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் மற்றும் பாதகங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் பொலிஸாரின் உதவியுடன் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

அத்துடன் அங்கு விழிப்புக்குழுக்களை அமைப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது. அத்துடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ் மாநகர சபை மற்றும் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளின் திருத்தப் பணிகளை துறைசார்ந்தோர் விரைவாக முன்னெடுக்க வேண்டும் எனவும் பிரதான வீதிகளின் அகலிப்பு நடவடிக்கைகளின் போது பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதால் அவர்களது கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும் இவ்விடயம் பாடசாலை சமூகத்தினரும் பெற்றோரும் இணைந்து உரிய முறையில் கவனமெடுத்து செயற்பட வேண்டுமென்பதுடன் அதற் கேற்ப சமூகத்தில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் பாடசாலைகளில் மாணவர்களின் கைத்தொலைபேசிப் பாவனை தடை செய்யப்பட வேண்டும் எனவும் இதற்கு அனைவரும் ஒன்றிணைந்து பங்காற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

துறைசார்ந்த திணைக்களங்கள் ஊடாக வீதி விளக்குகள் பொருத்துவது மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மீள்குடியேற்றப் பகுதிகளில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சார விநியோகம் வழங்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்படும் எனத் தெரிவித்த அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றப் பகுதிகளில் குடிநீர் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்றார். அத்துடன் தொற்றுநோய் ஏற்படாமல் துறைசார்ந்த அதிகாரிகள் விரைந்து செயற்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட அமைச்சர் மீள்குடியேற்றப் பகுதிகளுக்கான பேரூந்து சேவைகளும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் இன்று கலந்துரையாடப்பட்ட விடயங்களில் துறைசார்ந்தவர்கள் மக்களது தேவைகள் மற்றும் கோரிக்கைகள் அறிந்து அவர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.


இக்கூட்டத்தில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில வேஸ்திரி அலென்ரின் (உதயன்) கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன் சரவணபவன், யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நல்லூர் பிரதேச செயலர் செந்தில் நந்தனன் யாழ் பொலிஸ் உயர் அதிகாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மாதாந்தக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் மாதாந்தக் கலந்துரையாடல் நாளை காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன மகாநாட்டு மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தலைமையில் நடைபெற விருப்பதாக சம்மேளனத் தலைவர் சி. தவரத்தினம் அறிவித்துள்ளார். (70)

## பிரதம நீதியரசர் ஓய்வு



(கொழும்பு)

பிரதம நீதியரசராக கடமையாற்றி வந்த அசோக்க என் சில்வா நேற்று தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். இரண்டு வருட காலமாக பிரதம நீதியரசராகப் பதவி வகித்த அசோக்க என் சில்வா நேற்றுடன் தனது பதவியில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

பிரதம நீதியரசராக இருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, வெளிநாடுகளுக்கு சென்று சர்வதேச நீதிமன்ற நடவடிக்கைகளில் கவனம் செலுத்தவுள்ளதாகவும், குறித்த நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் மீண்டும் நாடு திரும்பி தாய்நாட்டிற்காக கடமையாற்ற விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ராஜ் ராஜரட்ணம் குற்றவாளி

இலங்கையில் பிறந்து அமெரிக்காவில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழரான ராஜ் ராஜரட்ணம் சட்ட விரோதமான வகையில் ஒரு நிறுவனத்தின் உட்தகவல்களை தெரிந்து கொண்டு அதில் முதலீடுகள் செய்ததான குற்ற சாட்டில் குற்றவாளி என்று கண்டறியப்பட்டுள்ளார். தனியாருக்குச் சொந்தமான முதலீடுகள் எனப்படும் ஹெட்ஜ் ஃபண்ட்ஸ் நிறுவனங்களை நடத்தி வரும் கோடீஸ்வரரான ராஜ் ராஜ்ரட்ணம் மீது எட்டு வாரங்கள் நடைபெற்ற விசாரணையின் முடிவில் ஏகமனதாக அவர் குற்றவாளி என்று கூறப்பட்டுள்ளார்.

# பின்லேடனின் மகன் ஹம்ஸா உயிர் தப்பினார்?

## அல்கொய்தாவின் அடுத்ததலைவர் இல்யாஸ் காஷ்மீரி

பின்லேடன் பதுங்கியிருந்த வீட்டின் மீது அமெரிக்கப்படைகள் நடத்திய தாக்குதலின் போது அங்கிருந்த பின்லேடனின் மகன்மாரில் ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாக பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பின்லேடனின் கடைசி மகனான 19 வயதான ஹம்ஸா என்பவரே இவ்வாறு தப்பிச் சென்றிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இவர் பயங்கரவாதத்தின் இளவரசர் என்று வர்ணிக்கப்படுபவர்.அமெரிக்கத் தாக்குதலின் பின்லேடனின் மூன்று மனைவிமாரும் பல பிள்ளைகளும் தற்போது பாகிஸ்தான் புலனாய்வு அதிகாரிகளின் பாதுகாப்பில் உள்ளனர். ஆனால் அந்த வீட்டில் இருந்த பின்லேடன் குடும்பத்தின் முக்கிய நபரான ஹம்ஸா அங்கிருந்து தப்பியுள்ளார் என்பது இப்போது தான் தெரியவந்துள்ளது.ஹம்ஸாவுக்கு 14 வயதாக இருக்கும்போது எடுக்கப்பட்ட ஒரு புகைப்படத்தை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

பின்லேடனின் மனைவிமாரை பாகிஸ்தான் அதிகாரிகள் விசாரித்த போது தான் ஹம்ஸா பற்றிய தகவல்கள் தெரிய வந்துள்ளன. பின்லேடனின் 22 வயதான காலித் என்ற மகன் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

பின்லேடன் மரணமடைந்த பிறகு அல்கொய்தா இயக்கத்தின் அடுத்த தலைவர் யார்? என்ற கேள்வி இப்போது பரவலாக எழுந்துள்ளது.அடுத்த தலைமைத்துவத்துக்காக அய்மான் அல் சவாஹிரி, அபூயஹ்யா அல் லிபி, சைப் அல் ஆதல், அன்வர் அல் அவ்லாக்கி, காத் பின் லாதன், நாஸர் அல் வஹைஸி, இல்யாஸ் காஷ்மீரி, ஆகிய ஏழு பேருக்கிடையில் போட்டி நிலவுகின்றதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் பாகிஸ்தான் இராணுவத்தின் கமாண்டோ படைப்பிரிவைச் சேர்ந்த முன்னாள் வீரர் இல்யாஸ் காஷ்மீரியே இந்தப் போட்டியில் முன்னணியில் இருப்பதாகவும் அல்குவைதா தகவல்கள் தெரிவிக்கின்றன மும்பாய் பாணியிலான பல தாக்குதல்களை ஐரோப்பிய நகரங்கள் பலவற்றில் நடத்துவதற்கு இவர் ஏற்கனவே திட்டமிட்டுள்ளதால், இவரின் செல்வாக்கு அல்குவைதா அமைப்புக்குள் ஓங்கியுள்ளது. இதுவரை ஐரோப்பிய நகரங்களில் இடம்பெற்றுள்ள அல்கொய்தா தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியும் இவரேயாவார். அல்கொய்தா அமைப்புக்குள் பின்லாடனுக்கு அடுத்தபடியாக இருந்தவர் அய்மான் அல் சவாஹிரி. பின்லாடன் உயிருடன் இருந்தபோதே இவர் இரண்டாம் நிலையில் இருந்தாலும் அநேகமான அல்குவைதா உறுப்பினர்கள் மத்தியில் இவருக்குப் போதிய செல்வாக்கு இல்லையென்றே தெரிய வந்துள்ளது.

# வன்னிப் பகுதிக்கான அஞ்சல் சேவை டிசம்பர் மாதத்துக்கு முன் வழமைக்கு

## வடமாகாண அஞ்சல்மா அதிபர் என். இரட்ணசிங்கம்



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னதாக வன்னிப் பகுதிகள் அனைத்திற்குமான தபால் நிலையங்களின் செயற்பாடுகள் முழுமையாகச் சீரடைந்துவிடும் என வடமாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபர் என். இரட்ணசிங்கம் தெரிவித்தார்.

கடந்த யுத்த காலத்தின்போது அழிவுகளுக்கு உள்ளாகியிருந்த வன்னி மாவட்டங்களின் தபாலகங்கள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழும் என்றிப் திட்டத்தின் கீழும் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும், இவை எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னதாக நிர்மாணிக்கப்பட்டு முடிவடையும் எனவும், இதன் பின்னர் இப் பகுதிகளுக்கான தபால் சேவைகள் அனைத்தும் வழமைக்குத் திரும்பிவிடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கென வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் இரண்டு கட்டமாக 56 மில்லியன் ரூபாவும் என்றிப் திட்டத்தின் கீழ் 198 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான், மாங்குளம், வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி, கிளிநொச்சி மாவட்டத்தில் பளை, பூநகரி, மன்னார் மாவட்டத்தில் நெட்டாங்கண்டல் ஆகிய பகுதிகளில் தபாலகங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டிற்கான தபால் விநியோகம் பற்றிக் குறிப்பிடுகையில், வவுனியாவில் இருந்து தினமும் எடுத்து வரப்படும் தபால் பொதிகள் அன்றைய தினமே தரம் பிரிக்கப்பட்டு, அன்றைய தினமே விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும், இதனால் ஏற்கனவே இங்கிருந்து தபால் விநியோக நடவடிக்கையின் கால விரயம் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். மேலும் தொடர்ந்தும் தபால் விநியோக நடவடிக்கைகளைச் சீரான முறையில் பேணுவதற்கு வவுனியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான தபால் லொறி ஒன்றினையும் சேவையில் ஈடுபடுத்துமுகமாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (பா)

### மட்டக்களப்பில்..

ஒருவர். இப்படிப்பட்ட ஒருவரை கொலை செய்வதென்பது கோளைத்தனமானது. பொதுச் சேவைகளில் தன்னை அர்ப்பணித்து மிக நீண்டகாலமாக சேவை செய்து வந்த மதியழகளில் கொலை கண்டிக்கத்தக்கது.இது தொடர்பாக மட்டக்களப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

### நிபுணர்குழுவின்...

தானிலும் ஆயுத ரீதியான தலையீடுகளுக்கு, அமெரிக்க நிர்ப்பந்தத்தால் இந்தியா ஆதரவு கொடுக்கும் நிலையில், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றிருப்பதாக ஐ.நா. குழு அறிக்கை கூறுவதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இந்த விடயத்தில் இந்தியா மென்மையாக நடந்துகொள்வதில் என்ன நியாயம் இருக்கிறது? இலங்கைக்கு பாகிஸ்தான் ஆயுதம் கொடுக்கிறது என்பதற்காகவா? அப்படியே இருந்தாலும் கூட, அதைப் பற்றிக் கவலைப்படும் அளவுக்கு இந்தியா பலவீனமான நாடு அல்ல. அதற்குப் பலம் இருக்கிறது. இலங்கையை இந்தியா பொம்மையாகக் கருதவில்லை. நெருங்கிய அண்டை நாடாக, பல விடயங்களில் ஒன்றுபட்ட கலாசாரங்களைக் கொண்ட நாடாகவே கருதுகிறோம் என்றார்.

இந்த விடயத்தில், தமிழக அரசியல் கட்சிகள், குறிப்பாக தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகள், தேர்தல் நேரத்தில் மத்திய அரசை நிர்ப்பந்திக்கத் தவறிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுங்கள் ஐ.தே.க.தேசிய அமைப்பாளருக்கு அறிவுரை

(கொழும்பு)

தற்போதைய நிலையில் நாட்டை நல்ல முறையில் நிர்வகித்துக் கொண்டிருக்கும் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுமாறு ஐ.தே.க.வின் புதிய தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்கவுக்கு மகாநாயக்கர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜயவர்த்தன, பிரேமதாச, விஜேதுங்க மற்றும் சந்திரிகா போன்றவர்களால் தோற்கடிக்க முடியாது போன பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றி கண்டுள்ள நிலையில், அவருடன் இணைந்து நாட்டின் எதிர்காலத்துக்காக செயற்படுவதே சிறந்த தெரிவாக இருக்க முடியும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


தற்போதைக்கு ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் எதிர்காலத்தில் ஐ.தே.க.வையும் நாட்டையும் நிர்வகிப்பதற்கான அனுபவத்தையும், ஆற்றலையும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர்கள் ரவி கருணாநாயக்கவுக்கு புத்திமதி கூறியுள்ளனர்.

ஆயினும் அவர்களைச் சந்தித்து விட்டு வெளியில் வந்த ரவி கருணாநாயக்க, அரசாங்கம் சர்வாதிகாரப் போக்கில் செயற்படுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.



அவ்வாறான நிலையில் ஐ.தே.க.விலிருந்து அரசாங்கத்துடன் இணைந்து கொண்டவர்களை மீண்டும் இழுத்தெடுப்பதற்குப் பதில் புதியவர்களைக் கொண்டு கட்சியைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

# அமைச்சர் மேர்வினின் பாதுகாப்பு வாகனம் விபத்தில் சிக்கியது



(கொழும்பு)

பொதுமக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் பாதுகாப்பு வாகனம் மரத்தில் மோதுண்டு ஏற்பட்ட விபத்தில் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர். அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு விட்டு கொழும்பு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்து நேற்று சிலாபம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ் விபத்தில் அமைச்சர் மேர்வின் சில்வாவின் வாகனத்தின் சாரதி, பாதுகாப்புப் பிரிவைச் சார்ந்த ஒருவர் மற்றும் இரு பொதுமக்கள் ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

இவ் விபத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வாகனத்தின் சாரதி ஆபத்தான நிலையில் உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வாகனத்தின் கட்டுப்பாட்டை அதன் சாரதி இழந்ததால், அவ் வாகனம் பாதையைவிட்டு விலகி மரத்தில் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மூன்று தசாப்தங்களில் இடம்பெற்ற வாகன விபத்தில் 40,000 பேர் பலி



(கொழும்பு)

வீதி விபத்துக்களை குறைக்க வேண்டுமானால் அது குறித்து பொது மக்களை தெளிவுபடுத்தும் செயற்திட்டங்கள் அவசியமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வீதி விபத்து பாதுகாப்பு தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.


போக்குவரத்து அமைச்சு, வீதி விபத்து பாதுகாப்பு தேசிய சபை என்பன ஒன்றிணைந்து இந்த வீதி விபத்து பாதுகாப்பு தேசிய மாநாட்டினை கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்திருந்தன. வீதி விபத்துக்கள் காரணமாக உலகம் முழுவதும் வருடத்திற்கு 1.3 மில்லியன் மக்கள் உயிரிழப்பதோடு, 2050 மில்லியன் மக்கள் காயமடைவதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் நாளொன்றுக்கு 150 வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாகவும், தலா 5 பேர் வீதம் உயிரிழப்பதாக கணிப்பிடுகள் தெரிவிக்கின்றன. கடந்த 30 வருடங்களில் இலங்கையில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 40,000 பேர் உயிரிழந்துள்ளதாக இம் மாநாட்டின் போது தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள், பண்டிதர்கள், பொலிஸ் அதிகாரிகள், பொது மக்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழக அடுத்த முதல்வர் கலைஞரா? கலைச்செல்வியா?

## நாளை முடிவு தெரியும்



(சென்னை)

தமிழக சட்ட மன்றத்தேர்தல் முடிவுகள் தேர்தல் ஆணையகம் நாளை வெளியிடவுள்ள நிலையில் தேர்தலுக்குப்பின்னரான கருத்துக்கணிப்பில் ஆட்சியைக்கைப்பற்றப்போவது திமுக. கூட்டணியா? அ.தி.மு.க. கூட்டணியா? என்பதை அனுமானிக்க முடியாதிருப்பதாக தமிழக அரசியல்நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் பல்வேறு செய்திச் சேவையினர் தேர்தல் ஆணையத்தின் தடையுத்தரவையும் மீறி தேர்தலுக்குப்பின்னர் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்புக்களை வெளியிட்டுள்ளனர்.

சென்னைக்குட்பட்ட தனது கருத்துக்கணிப்பில், தி.மு.க. கூட்டணி 115- 130 வரையான தொகுதிகளையும், அ.தி.மு.க. கூட்டணி 105-120 வரையான தொகுதிகளையும் பெறும் எனவும் ஆட்சியைக்கைப்பற்றுவதில் இரு கூட்டணிகளுக்கும் இடையே கடும் போட்டி நிலவுவதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 'நியூஸ் எக்ஸ் சனல்' முடிவுகளின்படி, அ.தி.மு.க கூட்டணிக்கு 176 தொகுதிகள் வரையும், தி.மு.க கூட்டணிக்கு 64 தொகுதிகள் வரையும் கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ளதாகத் தெரிவித்துள்ளது.



இத்தேர்தலில் ஸ்பெக்ரம் அலைக்கற்றை ஊழல் தி.மு.க கூட்டணிக்கு வீழ்ச்சியை ஏற்படுத்தி இருப்பதாக இக்கணிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'ஸ்டார் நியூஸ்' மற்றும், 'நீல்சன்' மேற்கொண்ட கணிப்பின்படி தி.மு.க கூட்டணி 124 தொகுதிகளில் வெற்றி பெறும் என்றும், அ.தி.மு.க கூட்டணி 110 தொகுதிகளில் வெற்றி பெறும் என்றும் கூறப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நிபுணர்குழு அறிக்கை பக்கசார்பானது ஐ.தே.க. எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

நிபுணர் குழு விவகாரத்தை கையாள்பவர்கள் ஐ.நாவுடன் நெருங்கிச் செயற்பட வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்தை வரவேற்பதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

தருஸ்மன் அறிக்கை வெளியானதிலிருந்து ஐ.தே.க. வலியுறுத்தி வந்த விடயம் இதுவென ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கூறினார்.

அதேவேளை, அரசாங்கம் இவ்விவகாரத்தை வினைத் திறனுடன் கையாளவில்லை எனவும் லக்ஷ்மன் கிரியெல்ல கூறியுள்ளார்.



உள்ளூராட்சி சபைகளுக்கும் மாகாண சபைகளுக்கும் மேற்படி அறிக்கையின் சிங்கள, தமிழ்ப்பிரதிகளை அனுப்பாமல் அவ்வறிக்கையைக் கண்டிக்கச் செய்ய அரசாங்கம் முற்படுவது புத்திசாலித்தனமானது அல்ல. ஒருவர் ஓர் அறிக்கையை வாசிக்காமல் எப்படி கண்டனம் தெரிவிக்க முடியும் என லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வியெழுப்பினார்.

இந்த அறிக்கை இன்னும் நாடாளுமன்றத்தில்கூட சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், அரசாங்கத்தின் தவறான கொள்கை காரணமாக இந்த அறிக்கை பக்கசார்பானதாக மாறியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐ.தே.கட்சி...

குறித்தும், இடைக்கால தடை உத்தரவு பிறப்பிப்பது குறித்தும் பரிசீலனை செய்ய குறித்த நியமனம் தொடர்பில் தெளிவுபடுத்துமாறு ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 75 பேருக்கு நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் சமுகமளித்து குறித்த நியமனம் குறித்து காரணங்களைத் தெளிவுபடுத்துமாறு இவர்களுக்கு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

# கண்ணிவெடிகளை அகற்ற எட்டு ஆண்டுகள் செல்லும்

## எவ். எஸ்.டி. நிறுவன முகாமையாளர்

(கொழும்பு)

இலங்கையில் போரினால் இடம் பெயர்ந்துள்ள மக்களின் மீள்குடியேற்றத்திற்குப் பெரும் சவாலாக அமைந்துள்ள கண்ணிவெடிகளை முழுமையாக அகற்ற இன்னும் 8 ஆண்டுகள் தேவைப்படும் என எவ்.எஸ்.டி என்ற கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் திட்ட முகாமையாளராகிய நைஜல் ரொபின்சன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள புள்ளிவிபரங்களின் அடிப்படையிலேயே இது தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களின் வாழ்விடங்களில் கடந்த வருடம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதையடுத்து, அந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பக் கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

தற்போது அந்த மக்களின் விவசாய நிலங்களில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றது. அத்துடன், போரின் போது புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு விரைவாகத் திரும்பிச் செல்வதையும் தாமதப்படுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## புனர்வாழ்வு...

2009 ஆம் நடைபெற்ற இறுதியுத்தத்தின் பின்னர் சரணடைந்த முன்னாள் புலி உறுப்பினர்களின் புனர்வாழ்வுப் பணிக்கு பொறுப்பாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருந்தார்.

முன்னாள் புலி உறுப்பினர்கள் மற்றும் இராணுவத்தினருக்கிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்புவதில் இவருடைய பங்கு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இதன் காரணமாக பிரிகேடியர் சுதந்த ரணசிங்க நேற்று முதல் மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.




இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.